

கல்கி
KALKI
22.1.1967
40 காசு


பசியின்மையால் சரியாக சாப்பிடாத குழந்தையை...
...மனமார சாப்பிடச் செய்வது எப்படி?
அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்
தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்
இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்- அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!
இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.
இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது
நாள் ஒன்றுக்கு: இன்க்ரிமின்* ட்ராப்ஸ் 10-20 துளிகள். இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.
* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்
Lederle
லெடர்லி* டிவிஷன். ஸயனமிட் இந்தியா லிமிடெட்

கர்நாடக சங்கீதத்துக்குரிய எத்தனையோ ராகங்களின் வடிவங்களை இன்று தியாகராஜரின் கீர்த்தனங்களைக் கொண்டு வகுத்து அறிய வேண்டியதாயிருக்கிறது. அவருடைய கனராக கீர்த்தனங்களில் கையாண்டிருக்கும் பிரயோகங்களைக் கொண்டு ராகங்களை எவ்வளவோ விஸ்தாரப்படுத்திப் பாட முடிகிறது.


ஸ்ரீ தியாகராஜர் வெறும் சங்கீத வித்வானும் சாஹித்திய கர்த்தாவும் மட்டுமல்ல; பகவானுக்கே தம்மை அர்ப்பணம் செய்த பரமபாகவத சிரோமணி.

ஸ்ரீ ராமபிரானைப் பிரத்யட்ச தரிசனம் செய்தவர். அதாவது தம் வாழ்விலேயே ஆத்மானுபூதி அடைந்தவர். தஞ்சாவூர் மன்னன் அவரைத் தம் சபைக்கு அழைத்த போது, அந்த அழைப்பை மறுதளித்து, ''பணத்திலும் பதவியிலும் என்ன சுகம் இருக்கிறது? பகவானுடைய சந்நிதியில் செய்யும் சேவையில்லவா உண்மையான சுகம் உண்டு?'' என்று பாடிய தியாக புருஷர். அது மட்டுமல்ல; ''பக்தி இல்லாத வெறும் சங்கீதத்தினால் என்ன பிரயோஜனம்'' என்றும் பாடியிருக்கிறார். - கல்கி 5-1-1947

நினைவுத் திரையில்...

கல்கி பொருளடக்கம்

பராபவ, தை 9 — ஜனவரி 22


ஆளும் கட்சி
தேர்தல் தராசு
ஆட்சி அதிகாரம்
காங்கிரஸ்
எதிர்க்கட்சிகள்
இந்தப் பகாசுரனை நாம் எல்லோரும் ஒரே பக்கமாகச் சேர்ந்து தள்ளுவோம்.
காங்கிரஸ்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 25



சுதந்திரக் கட்சித்
தொண்டர்களுக்கு

ராஜாஜியின் வேண்டுகோள்

தேர்தல் வெற்றியில் மிகவும் தன்னம்பிக்கை இருப்பது போல் காங்கிரஸ் பாசாங்கு செய்கிறது. என்றாலும் அதற்கு அந்தரங்கத்தில் பயம் ஏற்பட்டிருப்பது கண்கூடு. சுதந்திரக் கட்சிக்குத் தனது கொள்கைகளிலுள்ள நம்பிக்கை நன்கு வளர்ந்து வருகிறது. சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் அகில இந்திய மாநாட்டு நடப்புக்களும், அது குறித்துப் பொதுவாகப் பத்திரிகைகள் யாவும் பாராட்டுத் தெரிவித்திருப்பதும் நமது நம்பிக்கையை மேலும் வளர்த்து ஊக்கம் ஊட்டியுள்ளன. நாம் செல்வதே சரியான பாதை என்பதில் சந்தேகமில்லை. சத்தியம் வென்றே தீரும்.

காங்கிரஸ் கட்சியை அதற்குரிய முடிவுக்குத் தலைவிதி அழைத்துச் செல்கிறது. அதனுடைய மடமைகளும், பலவீனங்களும், சொந்த முன்னேற்றத்துக்காகவே அக்கட்சியில் இருந்து வருகிறவர்களின் ஒழுங்கீனமும் காங்கிரஸுக்குள்ளேயே பல பிளவுகளையும், புரட்சிகளையும் ராஜிநாமாக்களையும் ஏற்படுத்தி வருகின்றன. காங்கிரஸ் கட்சிக்குள் நடக்கிற விவகாரங்களுக்கு நிறைய இடம் தந்துப் பழகிய நமது பத்திரிகைகளின் முதல் பக்கத்திலேயே இந்தச் சீரழிவு சமாசாரங்கள் தினந்தோறும் நன்றாக வெளியாகி வருகின்றன. காங்கிரஸ் இந்தக் கதிக்கு வந்து விட்டதே என்று நாம் பரிதாபப்படலாம். ஆனால் பரிதாபம் காரணமாக அந்தக் கட்சியின் கையில் நாட்டின் நிருவாகத்தை மீண்டும் ஐந்து வருஷங்கள் பட்டா தந்து தேசம் நாசமாவதற்கு இடம் தரக் கூடாது. காங்கிரஸுக்குள் ஏற்படும் பிளவுகளைப் பார்த்தபின், அக்கட்சியின் கட்டுக்கோப்பு பற்றியும் ஸ்திரத் தன்மை பற்றியும் கூறப்பட்டு வந்த கட்டுக் கதைகள் சிதைந்துவிட்டன என்பதைப் புரிந்து கொண்டோம்.

காங்கிரஸ் கட்சி நிறுத்தி வைக்கும் அபேட்சகர்களை ஜனநாயக முறையில் தோற்க வைப்பதற்கு நம்மாலியன்ற அளவு உழைக்க வேண்டியதே இன்று சுதந்திரக் கட்சித் தொண்டர்களும் அபிமானிகளும் செய்ய வேண்டிய கடமை. காங்கிரஸைத் தோற்க வைத்தால் எப்படி அரசாங்கம் நடைபெறும் என்பார்கள். இடது—வலது; ஆக்கம்—அழிவு என்கிற வெற்று வார்த்தைகளைச் சொல்வார்கள். இவற்றால் குழப்பமடைந்து மயங்கி விடாதீர்கள். ஒரே ஒரு விஷயத்தை மனத்தில் வாங்கிக் கொண்டால் போதும். வரிகளையும் விலைவாசிகளையும் கடன்களையும் ஏகத்தாறாக உயரச் செய்து, நாட்டை 'இன்ஸால்வென்ட்' நிலைக்குக் கொண்டு வந்து, மக்களின் வாழ்வைத் துன்பமயமாக்கியுள்ள ஒரு கட்சிக்கு எதிராக வோட்டுப் போடுவதே கடமை. காங்கிரஸுக்குச் சாதகமாக இருப்பது அதருமம். தருமத்தைத் தொடர்ந்து செல்வோம். தருமம் நம்மைக் காக்கும் என்று திடமாக நம்புவோமாக.

எதிர்பாராமல் கஷ்ட நிலைமை தோன்றினால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் காங்கிரஸோ மனமறிந்தே தேசத்தைக் கஷ்ட நிலைக்குக் கொண்டு வரத் **திட்டமிட்டு** வந்திருக்கிறது. எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேளாமல், தீர்க்க முடியாத அந்நியக் கடன்களில் தேசத்தைப் பிடிவாதமாகச் சிக்க வைத்திருக்கிறது. இனியும் இந்த நாசகர முறையையே நீடிக்கக் காங்கிரஸ் உத்தேசித்திருக்கிறது. காங்கிரஸின் நிருவாகத் தவறுகளினால் எவ்வளவு தீமை விளைந்திருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துவதிலும், இந்தியாவின் ஆட்சியை மாற்றுவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு உதவி புரிவதிலும் நம் நாட்டுப் பத்திரிகைகள் இப்போதைக் காட்டிலும் சிறப்பாகப் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது என் ஆசை.

காங்கிரஸ் செய்துள்ள பாவங்களில் மிகப் பெரிய பாவம் எது என்பதையும்

சொல்கிறேன். நேர்மையுள்ள மனிதர்களையெல்லாம் காங்கிரஸ் கட்சி தனது கொள்கைகளால் நேர்மையற்ற — கடவுளை மறந்த — சுயநலக் கூட்டமாக மாற்றியிருக்கிறது.

இப்போது காங்கிரஸுக்கு எதிராகப் போடுகிற ஒவ்வொரு வோட்டும் ஜனநாயகத்துக்குப் போடும் வோட்டாகும். காங்கிரஸுக்கு எதிராகப் போடுகிற ஒவ்வொரு வோட்டும் சத்தியம் என்கிற சந்நிதானத்தில் செய்கிற அர்ச்சனையாகும். நல்ல நிர்வாகம் கிடைக்காதா என்று மக்கள் தவிக்கிறார்கள். நாட்டின் சூழ்நிலையில் பொதுவாகப் பரவிவிட்ட நேர்மைக் குறைவு போய், பல யுகங்களாக நாம் மதித்து வந்த தருமம் மீண்டும் மக்கள் உள்ளங்களில் இடம் பெற வேண்டும்.

எப்படியாயினும் தேசப் பொருளாதாரம் முழுவதையும் கட்டுப்படுத்தும் கூட்டமாக இந்தியக் காங்கிரஸ் கட்சி இனியும் ஆட்சியதிகாரத்தில் ஊன்றி விடாமல் தடுத்தாக வேண்டும். பெரிய எதிரியை நாம் வென்றாக வேண்டியுள்ளது. ஆனபடியால் தைரியத்தையும் சக்தியையும் இருமடங்காக்கிக் கொள்ள வேண்டும். ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காகக் காங்கிரஸ் செய்த போராட்டத்தைவிட இது முக்கியத்துவத்தில் சிறிதும் குறைந்ததல்ல. இந்த மகத்தான முயற்சியில் ஆண்டவன் நமக்கு அருள்வானாக.

நாம் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள மற்ற கட்சிகளின் அபேட்சகர்கள் எங்கெங்கு நிற்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களை நம்முடைய கட்சியின் அபேட்சகர்களைப் போலவே பாவித்து, உற்சாகத்துடன் அவர்களுடைய வெற்றிக்காக உழைக்க வேண்டும். விசுவாசமாகப் பணியாற்றுவதில் நாம் பெயர் எடுக்க வேண்டும்.

தோழர்களே! மக்களின் வாழ்க்கைச் சுதந்திரத்துக்கும், தொழில் சுதந்திரத்துக்கும் சத்துருவான காங்கிரஸை அடக்குவதற்குப் பிரதிக்ஞை செய்து கொண்டு போர்க்களம் செல்லுங்கள். கம்யூனிஸச் சர்க்கார்கள் போல் மக்களை அடிமைப்படுத்த முயலும் காங்கிரஸ் இந்த 1967ம் ஆண்டில் அடக்கப்பட வேண்டும். எந்த அளவுக்கு அதை அடக்க முடியும் என்பது நம்முடைய திடமான முயற்சியையும், மனித முயற்சிகள் எல்லாவற்றுக்கும் பின்னுள்ள கண்காணாச் சக்தியையும் பொறுத்தது. ஆண்டவன் அருள்வான்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



திருப்புகழ்மணி

பாடும் பணியே பணியாய்க் கொண்டிருந்த திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் காலமான செய்தி கேட்டுத் தமிழ் கூறும் நல்லுலகில் உள்ள, முருக பக்தர்கள் அனைவரும், தமிழன்பர்கள் அனைவரும் பெரும் துயர் உறுவார்கள். லௌகிகத் துறையில் வழக்கறிஞராகவும் முன்னாள் உயர் நீதிபதியாகவும் மிகப் பெரிய பதவிகளிலிருந்த அவர் சற்றும் கூச்சமோ, வெட்கமோ இல்லாமல் கையில் ஜாலரா ஏந்திக் கொண்டு திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, நாயன்மார்களின் தேவாரம், திருவாசகம், சித்தர் பாடல்கள் இவற்றை மனமுருகப் பாடிக் கொண்டு தமிழகத்தில் பக்திப் பயிர் பட்டுப்போகாமல் பலகாலம் காத்து வந்திருக்கிறார்.

குழந்தையின் பரிசுத்த உள்ளத்தோடு, அவர் எல்லாருடனும் மலர்ந்த முகத்தோடு அன்பு கனியப் பேசிப் பழகிய பான்மையை இனி வேறு யாரிடம் காண முடியும்? அனைவருக்கும் அன்பராக விளங்கிய அவர் 'கல்கி'யிடம் தனியான அன்பு காட்டியதையும் இப்பத்திரிகையைத் திருப்புகழ் பாடித் தொடங்கி வைத்ததையும் நாம் என்றும் மறவோம். திருப்புகழ் பஜனை பாடும் இடமெல்லாம், முருகன் துதி பாடும் இடமெல்லாம் திருப்புகழ் மணி அவர்கள் புகழுடலில் என்றும் இருப்பார்.

காங்கிரசை ஏன் வீழ்த்தவேண்டும்?

மு. கருணாநிதி

நச்சரவை ஏன் அடிக்க வேண்டும்? தேளை ஏன் நசுக்க வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கும் 'காங்கிரசை ஏன் வீழ்த்த வேண்டும்?' என்ற கேள்விக்கும் வேறுபாடொன்று மில்லை.

காங்கிரஸ் என்ற அந்த ஆங்கிலச் சொல் மீது எந்த விதக் காழ்ப்பும் நமக்கில்லை.

தேளுக்குப் பெயர் ''தேன்'' என்று அப்போதே வைத்திருந்தால் கூட அந்தப் பெயர் கொண்ட நச்சுப் பூச்சியை நாம் வெறுத்துத்தான் ஒதுக்குவோம்.

திலகரும் —, லஜபதி ராயும், காந்தியும்—ராஜாஜியும், படேலும்—நேருவும், நேதாஜியும் சிதம்பரனாரும் வளர்த்த காங்கிரஸ் என்று பெருமை பேசும் போதெல்லாம் இந்திய விடுதலைக்குக் குண்டடி பட்டுச் செத்த வீரர்களின் தியாக வரலாறே நம் முன் நிற்கும். இன்றோ பஸ் ரூட் — பர்மிட் — கோட்டா—லைசென்ஸ் என்ற பரிசுகள் பெற்ற கனதனவான்களின் காங்கிரசே நம் கண்களுக்குத் தெரிகிறது.

எட்டு முறை சிறை சென்றவர் என்ற திருப் பெயர் மாறி, ஏழு பர்மிட்டுகள் வாங்கியவர் என்ற பெருமையும் அந்தஸ்தும் இன்றைய காங்கிரசின் நிலா வெளிச்சமாகக் கருதப்படுகிறது.

இவர் உப்புச் சத்தியாக்கிரகத்தில் உதைபட்டவர் என்று அவர் தம் தழும்புகளுக்கு முத்தம் கொடுத்தது அன்றைய காங்கிரஸ்.

இவர் ஒரே மந்திரி சிபாரிசில் ஒன்பது பஸ் ரூட்கள் பெற்றவர் என்று அவர் தம் படிக்கட்டில் பல் இளித்து நிற்கிறது இன்றைய காங்கிரஸ்.

குதி கயிறு தாண்டுகிற சிறுமிகள், தாவித் தாவிக் குதிப்பது போல் இருந்தாலும் ஒரே இடத்தில்தான் குதித்துக் கொண்டிருப்பார்கள்.

அதற்கும் காங்கிரஸின் திட்டச் சாதனைகளுக்கும் அதிக வித்தியாசமே இல்லை.

குண்ட ராட்டினக் குதிரைகள்போல விலைவாசி ஏற்றமும், மக்களின் வாங்கும் சக்தியும் இருப்பதை எடுத்துக் காட்டாத மக்கள் பிரதிநிதிகள் இல்லை. அலட்சியம் ஒன்றே காங்கிரஸ் அரசின் விடையாகத் திகழ்கிறது.

அரிசியிலே கல்லைக் காணீர் எனக் கண்ணீர் வடித்தால், ''கல் இருப்பதற்காக ஆத்திரப்படாதே! அரிசியும் இருப்பதற்காக ஆச்சரியப்படு!'' என்று கூறுகிறது காங்கிரஸ் அரசு.

மானமாற உடையில்லை எனிலோ, வானமே வையத்தின் நீல உடை எனக் கவிதை எழுதிக் காட்டுகிறது காங்கிரசு.

வரிச் சுமை தாளவில்லை எனப் புலம்பும் மக்கள் மீது வறுமைத் தோள் உண்டே, அந்த வலிமைத் தோளால் தாங்குவதுதானே என வக்கணை பேசுகிறது காங்கிரசு.

நாணய மதிப்பும் போயிற்று; நாட்டு மதிப்பும் போய்க் கொண்டிருக்கிறது.

கைநீட்டாத நாடில்லை, கடன் பெறாத நாடில்லை—கண்ணீர் வெள்ளமும் நின்ற பாடில்லை.

வருங்கால மன்னர்களாம் இந்நாட்டுக் குழந்தைகளின் தலையில் இப்போதே எண்பத்தைந்து ரூபாய் மதிப்பில் முள் கிரீடம் சூட்டிக் கடன்கார சாம்ராஜ்யத்தைப் பரவலாக்குகிறது காங்கிரசு.

இப்போது புரிகிறதல்லவா? காங்கிரசின் வரலாறு வாழ்த்துக்குரியது. அதன் இன்றைய வாழ்க்கை ஏழைகளின் சாபத்துக்கும், தியாகிகளின் கோபத்துக்கும் உரியது.

இருபதாண்டு காலம் ஒரே கட்சியின் கையில் கட்சிச் சகடம் சுழலுகிறது. என்ன வழி இனிமேல் பிழைப்பதற்கு என்று தெரியாமல் மக்களின் தலையும் சுழலுகிறது.



இத்தனை மோசடிக்கும் விமோசனம் புதிய அரசு என எதிர்க் கட்சிகள் பேசினாலோ, ''ஆகா! ஊகூ!'' என்று ஜனநாயகத்தின் கழுத்தை வெட்ட அரிவாள் தூக்குகிறது காங்கிரசு!

இப்போது சொல்லுங்கள்; நச்சரவு ஏன் அடிக்கப்பட வேண்டும்?

தேன் ஏன் நசுக்கப்பட வேண்டும்?

காங்கிரஸ் ஏன் வீழ்த்தப்பட வேண்டும்?

ராஜாஜியின் கருத்துக்கள்



தேர்தலில் நிற்கிற அபேட்சகர்கள் தேர்தல் அதிகாரியின் முன்பு தேச விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. ('யோசனை' இதற்குள்ளாகவே சட்டமாகவும் ஆகியிருக்கக் கூடும்.) இது அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நரம்புத் தளர்ச்சிக்கே அடையாளம். இன்றைய சூழ்நிலையில் இதற்குச் சிறிதும் அவசியமில்லை.

தேர்தல் முடிந்தபின் வெற்றி பெற்ற அபேட்சகர்கள் சபாநாயகர்களின் முன்பு விசுவாசப் பிரமாணம் செய்து கொள்ளத்தான் போகிறார்கள். பூர்வாங்கமாக இப்போதே பிரமாணம் எடுத்துக் கொள்வதில் ஒரு பொருளும் இல்லை. இருதயத்தில் தேசத் துரோக எண்ணம் உடையவர்களே முதலில் முன்வந்து விசுவாசப் பிரமாணம் செய்வார்கள். அராஜகத்தை உண்டாக்க எண்ணுபவர்களை ஆணைவாசகம் தடுத்து நிறுத்தி விடுமா? பிரமாணங்களின் மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்திருப்பதையே புதிய யோசனை காட்டுகிறது. இதன் விளைவாக வேறு சில தவிர்க்கக் கூடிய அசௌகரியங்களும் ஏற்படும். உதாரணமாக, நியமனம் தாக்கலாகும் போது அபேட்சகர் கண்டிப்பாக ஸ்தலத்தில் இருந்தேயாக வேண்டியிருக்கும்.

ಹಿಸಿ

தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆட்சியாளர்களும் பசுவைத் தடிப்பை ஆதரிப்பதால் ஜனசங்கத்தின் முக்கியமான ஆயுதத்தைப் பறித்து, மக்களைக் கவரும் அதன் தனிப்பட்ட அம்சத்தைப் பலவீனமாக்கிவிடலாம். ஆயினும் பால் தராத பசுக்களை நீண்ட காலம் சித்திரவதை செய்து கொல்லுவதையோ, அல்லது உடனடியாகக் கசாப்புக்கு விற்பதையோ எளிதில் தடுத்துவிட முடியாது. இவ்விஷயத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமேயன்றி, ஓர் உண்ணுவிரதத்தால் முடிவு கட்டும் பிரச்னையாக்கிவிடக் கூடாது. அரசியல் சாஸனமும், அது கூறும் சட்டசபை ஆட்சியும்கூட ஒரு காமதேனுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பால் தருகிற பசுவைப் போலவே சட்டத்தின் ஆட்சியும் — சட்டத்தின் எழுத்து, கருத்து இரண்டின்படியும் நடக்கும் ஆட்சியும் — தேசத்துக்கு முக்கியமானது. மக்களின் மகத்தான விசுவாசத்தைப் பெற்றுள்ளவர்கள் உண்ணுவிரதம் இருந்தோ, வேறு விதத்திலோ தங்களைப் பலி கொடுத்துக் கொள்வதால் மக்கள் கூட்டம் நீதி உணர்வை இழந்துவிடக் கூடும். எனவே, இப்படிப்பட்ட ஸ்தானத்தில் உள்ளவர்கள் உண்ணுவிரதம் முதலிய ஆன்ம பலித் திட்டங்களை ஏற்பது சட்டத்தின் ஆட்சிக்கு எதிரிடையான சூழ்நிலையை உண்டாக்கக் கூடும்.

ಹಿಸಿ

எதிர்க் கட்சிகளின் தேர்தல் விண்ணப்பங்களுக்குப் பொருளில்லை என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மை மதுரையில் பேசியிருப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸைத் தோல்வியுறச் செய்ய வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காகத்தானே அவை ஒன்று கூடியுள்ளன என்று பிரதமர் கேட்கிறார். வாஸ்தவம். வெவ்வேறு கட்சிகளும் ஏன் ஒத்தாற்போல் காங்கிரஸுக்குத் தோல்வி தர விரும்பி ஒன்று சேர வேண்டும்? இதற்குப் பகுத்தறிவுக்குப் பொருந்தும் காரணம் இல்லையா? எத்தனையோ காரணங்கள் உள்ளன. தந்தையின் சிம்மாதனத்தில் அமர்த்தப்பட்டுப் பிரதமராகி விட்டார் என்பதால் ஸ்ரீமதி இந்திரா 'பொருளில்லை' என்று சொன்னதும் எதிர்க் கட்சி உடன்பாடுகள் பொருளற்றதாகிவிடா. காங்கிரஸ் நோயாளியாகி விட்ட நிலையிலும் அக்கட்சி என்றுமே ஒரு பீதியை உண்டாக்குகிற முயற்சியைப் பிரதமர் தொடருகிறார் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. தேர்தல் உடன்படிக்கைகளில் பொருள் இல்லை என்பது இருக்கட்டும். முன்பு மத்திய மந்திரியாக இருந்த நந்தா அவர்களின் வார்த்தைப்படியே 'குதிரைப் பாய்ச்சலில் உயர்ந்து வரும் லஞ்ச ஊழலும்', அபாயகரமான விலை உயர்வுகளும், மக்களுக்கு எவ்விதப் பயனுமற்ற நிமாலயக் கடன் சுமையும், ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியும் கூடவா 'பொருள் இல்லாத' விஷயங்கள்? தொண்டை வறண்டு போகுமளவுக்கு இவற்றை எடுத்துச் சொன்னாலும் சீர்திருத்தத்தைக் காணவில்லை. நல்லவரான இந்திரா அம்மையார் மூலம் நேரு மூர்த்தியைக் காட்டி ஏமாற்றி வரும் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்றினாலன்றிச் சீர்திருத்தம் ஏற்படாது.

ಹಿಸಿ

பிரதமர் இந்திரா அம்மையாரும், ஸ்ரீ காமராஜ் அவர்களும் செய்யும் தேர்தல் பிரசாரத்தின் சாராம்சம் இதுவே: "நாங்கள் மீண்டும் பதவிக்கு வருவது நிச்சயம். ஆனபடியால் உங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்வதில் அக்கறை இருப்பின் எங்களுக்கே வோட் செய்யுங்கள்."

இதற்கு வாக்காளர்கள் சொல்ல வேண்டிய விடை: "நாங்கள் பயத்தை அகற்றி விட்டோம். நீங்கள் இவ்வளவு காலமாக நாட்டுக்கு என்ன செய்தீர்கள் என்பதைக் கணித்துப் பார்த்தே வோட் செய்வோம்."

எதிர்க் கட்சிகள் ஆக்க ரீதியில் செயலாற்றவில்லை என்கிறார் காங்கிரஸ் பிரதமர். தனது கொள்கைகளினால் அதிகபட்ச அழிவை உண்டாக்கியுள்ள காங்கிரஸுக்கு ஆக்கம் பற்றிப் பேச உரிமையில்லை.



திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது கேட்டுத் தமிழகம் முழுதுமே துடிதுடித்துவிட்டது. எனினும் அதே சமயத்தில் உயிராபத்தான பயங்கரம் நேராததை எண்ணும்போது மக்கள் சற்றே ஆறுதல் அடைந்தனர். கலைச் சிறப்பால் மட்டுமின்றி, கொடைச் சிறப்பாலும் குணநலனாலும் நாட்டின் பேரன்பைப் பெற்றுள்ள திரு எம். ஜி. ஆர். அவர்களை அவர் புரிந்துள்ள தான தருமங்கள் காப்பாற்றிவிட்டன என்றே சொல்ல வேண்டும். விரைவிலேயே திரு எம். ஜி. இராமச்சந்திரன் பூரண ஆரோக்கியம் பெற்றுத் தமது கலைப் பணியையும், அறப் பணியையும், அரசியல் பணியையும் சிறப்புறத் தொடருவார் என்று நம்பி வாழ்த்துகிறோம்.

★ ★ ★

என்ன சேதி?

- பாரதம் படிக்கட்டும்!
- ராஜாஜிக்கு நன்றி
- ஹனுமந்தய்யா பேசுகிறார்!

"கௌரவர்களுக்கு உதவுவதாகக் கண்ணன் பாசாங்கு செய்து உண்மையில் பாண்டவர்களுக்கு உதவி புரிந்து கௌரவர்களை அழித்தாற்போல் தி.மு.க.வை உடைத்துக் காங்கிரசுக்கு உதவவே ராஜாஜி தி.மு.க.வுடன் சேர்ந்திருக்கிறார்" என்று மத்திய உணவு மந்திரி திரு சி. சுப்பிரமணியம் சமீபத்தில் பொள்ளாச்சியில் பேசியிருக்கிறார். இந்தக் கூற்றிலிருந்து சி. சுப்பிரமணியம் அவர்கள் பாரதத்தைச் சரியாகப் படிக்கவில்லை என்று தெரிகிறது.

கண்ணன் கௌரவர்களுக்கு உதவுவதாகப் பிரமையோ பாசாங்கோ செய்தது கிடையாது. "என் படைகள் வேண்டுமா? நான் வேண்டுமா?" என்று கண்ணன், இருதரப்பினரையும் கேட்டான். கௌரவர்கள் படையே பலம் பொருந்தியது என்று கருதினார்கள். கண்ணனுடைய படையின் உதவியைப் பெற்றார்கள். பாண்டவர்கள் கண்ணன் படையை விடக் கண்ணனே பலம் பொருந்தியவன் என்பதை உணர்ந்தார்கள். பாண்டவர்களுக்கு அறிவும் விவேகமும் அடக்கமும் பண்புமிருந்தது. உண்மையைக் கண்டார்கள். வெற்றி பெற்றார்கள்.

கண்ணன் ஒரு சூழ்ச்சியும் செய்யவில்லை. பகிரங்கமாக அருச்சுனன் தேரை வெற்றி பெற ஓட்டினான். அருச்சுனன் செய்ய வேண்டியதைச் செய்யவில்லையென்று கருதிச் சக்கராயுதத்தை எடுத்துக் கொண்டு பீஷ்மரை வதம் செய்ய முன் சென்றான். இதில் ஒளிவு மறைவு இல்லை. வெற்றியும் இதனாலேயே கிடைத்தது. அதுபோல ராஜாஜியின் துணையைச் சேர்த்துக் கொண்ட தி. மு. க. வின் எதிர் காலம் சிறப்பாக விளங்கப் போகிறது என்பதே திரு சுப்பிரமணியம் வாக்கிலிருந்து புரிகிறது.

எதிர்ப்புக் கூட்டணி நாளுக்கு நாள் பலப்பட்டு, உறுதியாக நிற்பதைக் கண்டு திரு சி. சுப்பிரமணியம் அன்று பிரிட்டிஷார் கையாண்ட பிரித்தாளும் கொள்கையைத் தாமும் கையாண்டு பார்க்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் சங்கத்தினர் தாங்கள் நன்றி மறவாத மக்கள் என்பதை ஆங்கில வருடப் பிறப்பன்று நிரூபித்தனர். திரு முத்துசாமி தலைமையில் சென்னை கோகலே மன்றத்தில் நடைபெற்ற மகாநாட்டில், தாழ்த்தப்பட்ட வகுப்பார் உயர்வுக்காக ராஜாஜி செய்த சேவைகளைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஹரிஜன சமூகத்தாருக்காக ராஜாஜி செய்த சேவைகளைச் சேலம் வரதப்பா அவர்கள் நினைவுகூர்ந்தார். 'அவ்வளவும் உண்மை. முகஸ்துதிக்காகக் கூறவில்லை' என்று அவர் அடிக்கடி பல்லவியாகச் சொல்லிக் கொண்டே ராஜாஜியின் சேவைகளை நினைவுகூர்ந்தபோது அவர் நெஞ்சம் எவ்வளவு நன்றிப் பெருக்கால் பொங்கி நெகிழ்ந்தது என்பது புலனாகியது.

கடைசியில் பேசிய ராஜாஜி அவர்கள் தமக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையேயிருந்த தொடர்புகளை விளக்கிக் கூறிவிட்டு, டாக்டர் அம்பேத்கர், "இந்நாட்டில் எனக்கு உண்மையான நண்பர் ஒருவர் உண்டென்றால் அவர் ராஜாஜிதான்" என்று கூறியதை நினைவூட்டினார். "இதைவிடச் சிறந்த பாராட்டும் கௌரவமும் வேறு எனக்கு என்ன இருக்க முடியும்?" என்று கூறினார் ராஜாஜி.

காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவரான திரு ஹனுமந்தையா கூறுவதைக் கேளுங்கள்:

"ஒருவரைத் தொழில் மந்திரியாகப் போட வேண்டுமென்றால் அவரே தொழில் அதிபராக இருந்து தொழில்களை நிர்வகிப்பதில் அநுபவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும். ஆனால் நம் நாட்டில் அநுபவமே இல்லாதவர்கள்கூட மந்திரிகளாகி விடுவதைக் காண்கிறோம். அவர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் யோசனை கூற வேண்டியிருக்கிறது. ஆனால் அந்த அதிகாரிகளுக்கும் இந்த விஷயங்கள் தெரிந்திருப்பதில்லை.

"நிர்வாகத் திறமையைச் செம்மையுறச் செய்ய வேண்டுமெனில் சீனத் தாக்குதலின் போது ராணுவத்தில் என்ன செய்தார்களோ அதைப்போலச் செய்யவேண்டும். அப்போது பொறுப்பு வகித்த தளபதியை வெளியேற்றினார்கள்."

ஹனுமந்தையா பேசியிருப்பதில் பல உண்மைகள் உள்ளன என்பதை நேயர்கள் அறிவார்கள். ஆனால் மற்றொரு விஷயம் அவர் சொல்லாமல் விட்டுவிட்டார்.

சீனத் தாக்குதலின் போது தளபதியை மட்டும் மாற்றவில்லை. பாதுகாப்புத் துறை மந்திரியாக இருந்த திரு வி. கே. கிருஷ்ண மேனன் அவர்களையே நேருஜி வெளியேற்ற வேண்டியதாயிற்று.

அதேபோல் இன்று நாட்டில் கல்வி, வர்த்தகம், தொழில், விவசாயம் ஆகிய எல்லாத் துறைகளிலுமே முற்றும் மாறுதல்—புது ஜீவன் ஏற்பட வேண்டுமானால் இப்போதுள்ள காங்கிரஸ் மந்திரி சபையே முற்றிலும் நீக்கப்பட வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் சீர்படும். தேசத்திலும் சுபிட்சம் காண்போம்.

ஒரு நாள் எப்போது நாலுமணி நேரமாகும்?


● விண்வெளியில் சுழலும் ராக்கெட்டைப் பார்த்து வியக்கிறோம். பத்திரிகைகளில் அதைப் பற்றிப் பத்தி பத்தியாகப் படிக்கிறோம். ஆனால் நாமே ஒரு சுழலும் ராக்கெட்டுக்குள்தான் இருக்கிறோம் என்பது நமக்கு மறந்து விடுகிறதே! ஆம், நாம் வாழும் இந்தப் பூமி சூரியனைச் சுற்றிக் கொண்டுதானே இருக்கிறது! அதுவும் என்ன வேகத்தில்? பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் வேகம் மணிக்கு 1000 மைல். சூரியனைச் சுற்றும் வேகம் மணிக்கு 25,000மைல்!

● அணுகுண்டோ ஹைட்ரஜன் குண்டோ எங்கோ வெடிக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் திடுக்கிடுகிறோம், பீதியடைகிறோம்..... ஆனால் நம் கண் முன்னே தெரியும் சூரியன் 1000000000000 வருஷங்களாக வெடித்துக் கொண்டேதான் இருக்கிறது. அது நமக்குத் தெரியவில்லையே! வானத்தில் இரவில் கண் சிமிட்டும் தாரகைகள் எல்லாம் சிறியதும் பெரியதுமான சூரியன்கள்தான். அவைகளில் எத்தனை வெடித்து உதிர்வதை நாம் பார்த்திருக்கிறோம்!



● வெண்ணிலவு இருக்கிறதே அதைப் பெரும்பாலும் பயன்படுத்துவது கவிஞர்கள்தான். சந்திரன் இல்லாத காதல் காட்சிகள் ஏது? காதலியின் முகம் ஏது? இந்த நிலா மறைந்து விட்டால் என்ன ஆகும் தெரியுமா? பூமி சுழலும் வேகம் அதிகமாகி விடும். அதனால் ஒரு நாள் பொழுது 24 மணி நேரம் என்பது போய் 4 மணி நேரமாகிவிடும்!

● ஒரு காமிரா இருக்கிறது. அது தானாகவே தானியங்கு முறையில் 'ஃபோக்கஸ்' செய்து கொள்கிறது. வர்ணப் படங்களைக்கூட எடுக்கிறது. அதுவே டெவலப்பும் செய்துவிடுகிறது. இதெல்லாவற்றையும் அரைக் கால் விநாடியில் முடித்துவிட்டு, அடுத்த காட்சியை எடுப்பதற்கும் தயாராகி விடுகிறது! இந்த விந்தைக் காமிரா நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. ஆம், நம்முடைய கண் தான் அந்தக் காமிரா!



● 'அரை ஹார்ஸ் பவர்' சக்தியுள்ள ஒரு மோட்டார் ஒரு திரவத்தைப் பல மைல் நீளமுள்ள குழாய் வழியாக இடைவிடாமல் இரவும் பகலும் எழுபது வருடங்களுக்கு மேல் 'பம்ப்' செய்து கொண்டே இருக்கிறது என்றால் எல்லோரும் ஆச்சரியப்படுவோம். இவ்வளவு உறுதியான மோட்டார் எது? நம் இதயம் தான். மனிதன் இறக்கும்வரை அது இடைவிடாமல் ரத்தத்தை 'பம்ப்' செய்கிறதல்லவா?

ஆதாரம்: ஸயன்ஸ் டுடே
தகவல்: கே. ராமச்சந்திரன்

● மோட்டார் காருக்கு இன்னுமொரு நூதனமான வசதியைப் பிரிட்டிஷ் ஸ்தாபனம் ஒன்று செய்து தருகிறது. மழை நீரை ஒதுக்கித் தள்ளக் காரின் முன்புறக் கண்ணாடிமீது ஒரு 'துடைப்பான்' இயங்குகிறதல்லவா? தூறல் விழும் போது இது மெல்ல இயங்கவும் பலத்த மழை பொழியும் போது இது வேகமாக இயங்கவும் ஏற்பாடு செய்து தருகிறது ஜோஸப் லூகாஸ் நிறுவனம். நமக்குத் தேவையான வேகத்தினை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம், இந்த நவீனக் கருவியில்.



● காரைத் துடைப்பது எவ்வளவு சிரமம் என்பது அதை அநுபவிப்பவர்களுக்குத் தெரியும். ஏழே நிமிஷங்களில் காரைக் கழுவி பாலிஷும் போட ஒரு மிஷின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி போன்ற அமைப்புக் கொண்ட இதன் முனையிலிருந்து முதலில் நீரும், சோப்பு போன்று சுத்தம் செய்யக் கூடிய ரசாயனப் பொருளும், பாலிஷ் ஏற்றப் பயன்படும் மெழுகும் ஒன்று சேர்ந்த ஒரு கலவை பீரிட்டு அடிக்கிறது. இந்தக் கலவையைக் காரின் மேல்புறம் எல்லா இடங்களிலும் படுமாறு பீச்சிய பிறகு ஒரு விசையைத் திருப்பினால் அதே 'துப்பாக்கி முனை'யிலிருந்து சுத்தமான நீர் பீரிட்டு அடிக்கிறது. ஒரு நிமிஷம் — பிறகு ஒரு நல்ல துணியை எடுத்து ஒற்ற வேண்டியதுதான்; வண்டி பளபளவென்று ஜொலிக்கும்!

“மிஸ்டர் திருவேங்கடம்தானே பேசுகிறது?”

“ஆமாம்! வணக்கம்!”

“வணக்கம்! வணக்கம்... நான்தான் பேசுகிறேன்! உங்களைச் சந்தித்துக் கொஞ்சம் பேசலாம் என்று ஆசை. இப்போதே புறப்பட்டு வரட்டுமா?”

“ரொம்ப சந்தோஷம்! என்னைச் சந்தித்து.... சரி சரி!.... உங்க போன் நம்பரைச் சொல்லுங்கள்! நானே உங்களுக்குத் தகவல் கொடுக்கிறேன்.”


“சரி! குறித்துக் கொள்ளுங்கள்! இன்று முழுவதும் நான் ‘ஃப்ரீ’யாகத்தான் இருக்கிறேன்.”

ஃ ஃ ஃ

இரண்டு நாட்கள் ஓடுகின்றன. ஆனால் மிஸ்டர் திருவேங்கடம் டெலிபோனில் என்னைக் கூப்பிடவேயில்லை. நானே திடுதிப்பென்று அவர் முன்னால் போய் நிற்கிறேன். அவரும் தம் ஆசனத்தில் அமராமல் நின்றுகொண்டே ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார். “வாங்க!.... உட்காருங்க! இதோ ஒரு நிமிஷத்திலே வருகிறேன்” என்கிறார். தம் உதவியாளருக்குக் சைகை காட்டி விட்டுப்



லட்சத்தின் காவலர்



அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹூபர்ட் ஹம்ப்ரே தம் கைப்படக் கடிதம் எழுதியுள்ளார் இவருக்கு! அவ்விதம் பாராட்டுப் பெற்ற இவர் யார்?

பக்கத்து அறைக்குள் நுழைகிறார். நான் உட்கார்ந்து இருபது நிமிடங்கள் நகர்கின்றன. நண்பர் திருவேங்கடம் தம் ஆசனத்துக்கு வருகிறார். அவர் அமருவதற்கு முன்பே டெலிபோன் மணி ஒலிக்கின்றது. யாருடனோ பேசுகிறார். “உங்களைக் காக்க வைத்து விட்டேன்! மன்னிக்கணும். இன்னும் ஒரு நிமிஷம்! எங்கள் ‘சீஃப்’ கூப்பிடுகிறார். போய்விட்டு வந்துவிடுகிறேன்.” திருவேங்கடம் நகர்கிறார். நான் அவசரம் அவசரமாக எழுந்திருக்கிறேன்.

“மிஸ்டர் திருவேங்கடம்! ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்ச்சியுடன் உங்கள் அலுவல்கள் துரிதப்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை. அந்த உணர்ச்சி உங்கள் வேலைத் திறனுக்குத் தடையாக இருக்கலாம். என்னைப் பொறுத்த வரை இந்த இருபது நிமிடங்களுக்குள்ளேயே வந்த வேலை முடிந்து விட்டது என்றே சொல்லலாம்! உங்கள் வேகத்தையும் சுறுசுறுப்பையும் கவனித்தே என் பேட்டியை முடித்துக் கொண்டேன்! வணக்கம்! வருகிறேன்.” நான் கிளம்புகிறேன்.

இன்று அந்த உயர்ந்த பதவியில் நண்பர் திருவேங்கடம் அமர்ந்திருப்பதன் காரணமே பம்பரம் போல் இயங்கும் அவருடைய சுறுசுறுப்புத் தன்மையும் புன்முறுவல் கலந்த இன்முகமும்தான் என்று அப்போதே முடிவு கட்டி விட்டேன் நான்!

இனிசரி. ஆயிரம் பேர்களுக்கு மேல் - பலதரப்பட்ட குண பேதங்கள் உள்ளவர்கள் - வந்து போகும் இடம் அது. தங்கள் சொந்த இருப்பிடங்களில் நுழைவது போல் உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் புத்தகக் குவியல்கள்! பத்திரிகை, சஞ்சிகைகளின் அடுக்கு. இதுதான் அமெரிக்க அரசாங்கச் செய்தித் துறையினர் [சென்னை மௌண்ட்ரோடு பகுதியில் நிறுவி நடத்திவரும் வாசகசாலை. இந்த ஒரு வாசகசாலையில்தான், எந்த விதக் கட்டணமோ காப்புத் தொகையோ இல்லாமல் வாசகர்கள் வீட்டுக்குப் புத்தகங்களை எடுத்துப் போய்ப் படித்துத் திரும்பலாம். வெளியூர் வாசகர்களுக்கும் வேண்டிய புத்தகங்களைத் தபாலில் அனுப்பி வைத்து

ஒரு குரல்



அழலாமே!

பரீட்சையில் தேறவிட்டால் மாணவர்கள் கண்ணீர் சிந்தி விசும்பி அழுவது உடம்புக்கு ரொம்பவும் நல்லது! ஆண்கள் பெண்களைப் போல் அழுவது சர்வ சாதாரணமாகிவிட்டால் குடற் புண்களும் நரம்புத் தளர்ச்சியும் வராமல் குறைக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

பிறக்கும்போதே பெண்கள் அழுகிற மனப் பான்மையோடும் ஆண்கள் அதற்கு எதிராகவும் பிறப்பதில்லை. ஆண்கள் அழுவது சிறு வயதிலிருந்தே ஏளனமாகக் கருதப்படுகிறது. ஆகையால்தான் அவர்கள் அதிகம் அழுவதில்லை. மற்றப்படி அழுவதில் தவறொன்றுமில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

—'ஆஸ்திரேலியன் போஸ்ட்'டிலிருந்து எடுத்து அனுப்பியவர் வி.ந. ஸ்ரீதரன்

சேவை செய்கிறது இந்த வாசக சாலை. இதில்தான் நண்பர் திருவேங்கடம் பிரதான லைப்ரேரியனாகப் பணியாற்றுகிறார்.

ஆரம்ப நாட்களில் 'மெயில்' பத்திரிகை விநியோக இலாகாவில் பணியாற்றி வந்த திருவேங்கடம் சில வருஷங்களுக்குள்ளாகவே இந்த வாசகசாலையில் ஓர் உதவியாளராக வந்து சேர்ந்தார்.

பத்துப் பதினைந்து பேரில் ஒருவராக அவர் வந்தாலும், விரைவிலேயே தம் சுறுசுறுப்பினாலும் திறமையினாலும் மற்றவர்களினின்று தனித்து நின்றார். அவருடைய யோசனைகளும் திட்டங்களும் மேல் அதிகாரிகளுக்குத் திருப்தி அளித்தன. அவைகளை நடைமுறையில் அமுலாக்கியபோது மனம் விட்டுப் பாராட்டினார்கள். பாராட்டுதலோடு நிற்காமல் பதவியிலும் அவரை உயர்த்தி விட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலான பெரிய பாராட்டு ஒன்றை அமெரிக்க சர்க்கார் 1965ஆம் ஆண்டில் அவருக்கு மெரிட்டோரியஸ் ஹானர் அவார்டு (Meritorious honour Award) பதக்கம் மூலம் அளித்தது. ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கு வெளியே இந்தப் பிரசித்தி பெற்ற பாராட்டுதலைப் பெற்றவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தானும்! அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹூபர்ட் ஹம்ப்ரே தம் கைப்படக் கடிதம் எழுதித் திருவேங்கடத்தை இந்தப் பதக்கம் வாங்கியதற்காகப் பாராட்டியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தினசரி (ஞாயிறுதவிர) காலை 9-30 மணியிலிருந்து மாலை 6-30 மணி வரை செயல்படும் இந்த வாசகசாலை சராசரி அறுநூறு புத்தகங்களை வாசகர்களுக்கு விநியோகம் செய்கிறது. விநியோக அளவைப் பார்க்கும் போது, திரும்பி வராமலோ, காணாமலோ போகும் புத்தகங்களின் அளவு வெகு வெகு குறைவுதானாம்!

புத்தகங்களிலிருந்து நல்ல ஓவியங்களையோ, கட்டுரைகளையோ கிழித்தெடுத்து வைத்துக் கொள்ளும் கெட்ட வழக்கம் சிலரிடம் இருந்து தொலைக்கிறதல்லவா? பிறருக்கும் உதவ வேண்டுமே என்கிற பரந்த மனப் பான்மையில்லாத இத்தகையோரை எப்படித் திருத்துவது? ஒவ்வொரு புத்தகத்தையும் திரும்பி வந்தவுடன் பக்கம் பக்கமாகப் பரிசோதித்துப் பார்ப்பது என்பது நடக்கிற காரியமா?

இந்தக் கெட்ட வழக்கத்தைச் சுட்டிக் காட்டத் திருவேங்கடம் ஒரு புது வழியைக் கையாண்டார். பங்கப்படுத்தப்பட்ட புத்தகங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு சிறிய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தார். இந்த விசித்திரக் கண்காட்சி நடந்த பிறகு விநியோகிக்கப்படும் புத்தகங்களுக்கு நல்ல காலம் பிறந்து விட்டதாம்!

தமிழ் நாட்டில் எங்கு கல்வி சம்பந்தமான புத்தகக் கண்காட்சி நடந்தாலும், அவைகளில் பங்கெடுத்துக் கொள்ளத் திருவேங்கடம் அனுப்பப்படுகிறார். ஒவ்வொரு பிரயாணமும் அவர் அநுபவத்தைப் பெருக்க உதவுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், இந்த வாசக சாலை, இதைப் போல் இரண்டரை மடங்கு பெரிதான சொந்த இடத்துக்கே - சபையர் தியேட்டருக்கு எதிர்த்தாற்போல்-மாற்றப்பட விருக்கிறது. வாசகப் பொது மக்கள்பாடு குஷிதான்! இன்னும் வசதிகள் அதிகரிக்கலாமல்லவா ?

பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு லட்சம் புத்தகங்களுக்குக் காவலனாகவும் தோழனாகவும் பணியாற்றும் இவரை லட்சத்தின் காவலர் என்று சொல்லலாம்தானே !

வாஷிங்டனில் உள்ள காங்கிரஸ் லைப்ரரியும், நியூயார்க் நகர பப்ளிக் லைப்ரரியும் தான் உலகத்திலேயே பிரம்மாண்டமான வாசகசாலைகளாம். அவைகளுக்குப் போய் அவை செயல்படுவதை நேரில் கண்டு ரசிக்கும் வாய்ப்பு இன்னும் நண்பர் திருவேங்கடத்துக்குக் கிட்டவில்லை ! அந்த வாய்ப்பு சீக்கிரமே கிட்டலாம் என்று எதிர்பார்க்கலாமே!

ஃ ஃ ஃ


"ஹலோ! மிஸ்டர் திருவேங்கடமா?..... நான்தான்....."

"வணக்கம்! வணக்கம்! அன்றைக்கு வந்துட்டுப் பேசாமே போயிட்டீங்க!...."

"பயப்படாதீங்க! நீங்க எப்பவும் பிஸியாகத்தான் இருப்பீங்க! அதனாலே உங்களைத் தொந்தரவு பண்ணாமலேயே உங்களைப் பற்றி ரொம்பத் தெரிஞ்சுக்கிட்டேன்."

"அப்படியா? ரொம்ப நன்றி! நான் ஒரு சாதாரண ஊழியன்....."

"உங்களைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்காது!" **-கோமதி சுவாமிநாதன்**


ஜிம்பி
வால்ட் டிஸ்னி
ஹய்யா! அந்த வீட்டுக்கு யாரோ புதுசாக் குடி வராங்க.
அவங்களும் ஏதாவது செல்லப் பிராணி வளர்த்துகிட்டு இருப்பாங்க, இல்லையா?
போய்ப் பார்க்கலாம்
ஓ... ஹோ... ஹோ!
பக்கத்து வீட்டுக்குப் புதுசா வந்திருப்பது ஒரு பூனைதான்!
வள்!
வள்
வள்
லொள்
லொள்
ஐயோ...!
மரத்து மேலே ஏறின பூனை எனக்குப் பின்னாலே எப்படி வந்தது? மாயமான்னு இருக்கு...
தொலைந்தது சனியன்.
5-21
Distributed by King Features Syndicate
ப்..பூ..பூ!
ஆவ்...! ஐயோ...!
மரத்திலேறும் பூனையோ அது? எனக்குப் பயமான... இருக்கு



சைதாப்பேட்டை விளையாட்டுக் கல்லூரி. கூரை வேயப்பட்ட பிரும்மாண்ட ஸ்டேடியத்தில் தேசிய டேபிள் டென்னிஸ் போட்டிகளின் இறுதி விளையாட்டு ஆரம்பமாகவிருந்தது. இந்த நவீன காலத்தில் கலியாணப் பந்தலில் தாலி கட்டும்போது படம் எடுக்கத் தவறிய போட்டோக்காரர் மறுபடியும் தாலி கட்டும் 'போஸ்' செய்யச் சொல்லிப் படம் எடுப்பதைக் கண்டிருக்கிறோம். இந்த டேபிள் டென்னிஸ் விளையாட்டுப்




'ஆட்டம் என்ன சொல்வேன்!'

போட்டியை எடுக்க வந்த டெலிவிஷன் காமிராமேன் குமார் இதற்கு விதிவிலக்கல்ல. ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ரஸிகர்களைக் கைதட்டச் சொல்லிப் படம் எடுத்து விட்டார். அப்போது இந்த டெலிவிஷன் காமிரா மேனின் ஆட்டம் பிரமாதமாக ரஸிக்கக் கூடியதாக இருந்தது. டேபிள் டென்னிஸ் ஆட்டக்காரர்கள் பந்தயத்துக்காக ஆடியது தவிர இவருக்காகவும் கொஞ்சம் ஆட வேண்டியிருந்தது!

ஃ ஃ ஃ

முதலில் தில்லியைச் சேர்ந்த தீபக்கும் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சிறுவன் மேத்தாவும் ஆடினார்கள்.

மேத்தாவின் மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதாயிருந்தது. அவன் ஆட்டத்தை ரஸிப்பதோடு, அவன் ஆட்டத்தை 'கன்ட்ரோல்' செய்த உறவினரது (அல்லது மானேஜரது) முக பாவங்கள் ரஸிக்கக்கூடியனவாக இருந்தன. மேத்தா ஓர் அருமையான 'ஷாட்' அடித்தால் அந்த



---

1. சிறுவன் மேத்தாவும், பராமீட்டரும்.
2. ரஷ்ய ஆட்டக்காரர் ரோமாஸ்ட் மெக்ஸிலிச்
3. தேசிய சாம்பியன் கோடடிஜி.
4. ஜெயராமன்.
5. டெலிவிஷன் காமிராமேன் குமார்.

நபரின் முகம் மந்தகாசமாயிற்று; மேத்தா தவறு செய்தால் அவர் முகம் சிவந்து பயங்கரமாயிற்று. மேத்தாவின் ஆட்டத்தை இந்தப் 'பராமீட்டர்' கொண்டு அளக்கும் படியாயிருந்தது. நல்ல காலம்! மேத்தா வென்று, அவரது கோபத்துக்கு ஆளாகாமல் தப்பினார்.

ஃ ஃ ஃ

''பட், படார்!''

''சட்! சட்! சட்!''

கோடைஜி வெகு அருமையாக ஆடி ரஸிகர்களை மெய் மறக்கும்படி செய்து தேசிய வெற்றி வீரர் பதவியை அடைந்தார். மிஸ் உஷா சுந்தரராஜ் வந்தவுடனேயே சடசட வென்று ரோஸாரியோவைத் தோல்வியுறச் செய்தார்.

ஃ ஃ ஃ

டேபிள் டென்னிஸ் தோன்றி அதிக காலம் ஆகிவிடவில்லை. இந்த நூற்றாண்டில் தான் பிறந்தது. மழை காலத்தில் டென்னிஸ் ஆட முடியாத போது இந்த ஆட்டத்தைத் தோற்றுவிப்பதில் முனைந்தனர் டென்னிஸ் ஆட்டக்காரர்கள். பல தயாரிப்பாளர்கள் இந்த விளையாட்டுக்கான உபகரணங்களைத் தயாரித்தளித்துத் தங்கள் பெயர்களை இந்த ஆட்டத்துக்கு வழங்கினார்கள். 'காஸிமர்', ''விப்வாப்!'' 'பிங்பாங்' போன்ற பெயர்கள் டேபிள் டென்னிஸ் ஆட்டத்தையே குறிக்கும்.

ஃ ஃ ஃ

தேசிய விளையாட்டுப் போட்டியில் விருந்தினராக வந்து கலந்துகொண்ட ருஷ்யர்கள் அனைவரது ஆட்டமுமே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

வில்னியஸைச் சேர்ந்த பதினெட்டு வயது மங்கை ஸெமா 1962, 64, 66 ஆண்டுகளில் ரஷ்யாவில் தலைசிறந்த டேபிள் டென்னிஸ் வீராங்கனை என்ற முறையில் பரிசு பெற்றவள். இவள் ஆசிரியப் பள்ளியில் பயிலும் மாணவி. அழகாக ஆடியதோடு அழகான தோற்றத்துடன் கூடிச் சென்னை ரஸிகர்களின் கண்களுக்கு நல்விருந்து அளித்தாள்!

ஃ ஃ ஃ

டேபிள் டென்னிஸில் 'ஹாப்' முறை ஒன்று இருக்கிறது. இப்பொழுது குடும்பக் கட்டுப்பாட்டுக்குப் பயன்படும் லூப் இல்லை. மட்டையில் 'ஸ்பான்ஜுக' முறையில் ரப்பர் அமைக்கப்பட்டு விடுவதால் பந்து பட்டதும் அதில் ஒரு வகை சுழற்சி ('ஸ்பின்') ஏற்படுகிறது. இது எதிராளியை மயக்கும் தன்மை படைத்தது.

ஃ ஃ ஃ

ருட்யார்ட் கிப்ளிங் விளையாட்டுக் கலைஞரைப் பற்றி, ''சரித்திர ஆசிரியன் உங்கள் பெயரைக் குறிப்பிடும்போது நீங்கள் வெற்றி பெற்றதையோ, தோல்வியுற்றதையோ குறிப்பிட மாட்டான். விளையாட்டை எப்படி ஆடினீர்கள் என்றுதான் குறிப்பிடுவான்!'' என்று கூறியிருக்கிறார்.



ரஷ்ய ஆட்டக்காரிகள் ஸெமாவும், பெல்லாவும்.

இந்தத் தேசிய விளையாட்டுப் போட்டியில் நான்கு வயதில் கால் ஊனமாகியும், ஒரு கையில் கட்டையை ஏந்தி, மற்றொரு கையில் மட்டையை ஏந்தி விளையாடிய ஜயராமன் அனைவரது கவனத்தையும் கவர்ந்தார். உதக மண்டலம் நகரசபைப் பள்ளியில் பயின்று பாஸானதும் பி. யு. சி. படிக்கத் தொடங்கியபோது டேபிள் டென்னிஸ் ஆடத் தொடங்கினார். அவர் பி. ஏ. தேறிவிட்டார். டேபிள் டென்னிஸ் அவரைத் தம் குறையை மறந்து மகிழச் செய்கிறது. இப்படிப்பட்ட ஆட்டக்காரருக்கு ஆட வசதி செய்து தந்த டேபிள் டென்னிஸ் விளையாட்டுக் கழகத்தை மெச்சத்தான் வேண்டும்.



மைசூர் உஷா

பன்னிரண்டு வயதுச் சிறுமி உஷா மாலையில் தன் தந்தை அட்வகேட் சுந்தரராஜுவிடம் வந்தாள்.

''அப்பா! நானும் உன்னோடு 'கிளப்'புக்கு வரேன் ! எனக்கு வீட்டிலே 'போர்' அடிக்கிறது !'' என்றாள்.

''நான் விளையாடிக் கொண்டிருப்பேன். நீ சும்மாத்தானே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேணும்? அங்கேயும் 'போர்' அடிக்காதோ?'' என்றார் தந்தை.

''விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பேன். எனக்குப் பொழுது போய்விடும்!'' என்றாள் சிறுமி உஷா.

தந்தை தம் செல்வச் சிறுமியைக் 'கிளப்'புக்கு அழைத்துச் சென்றார். அங்கே டேபிள் டென்னிஸ் ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. பெரிய மேஜையொன்றில் குறுக்கே வலை கட்டி இருவர் சிறிய மட்டைகளை ஏந்தி, கோழி முட்டை போன்ற பந்தை அடித்து ஆடிக் கொண்டிருந்தார்கள். ஆட்டத்தைப் பார்க்க வந்த சிறுமி அதில் லயித்துப் போனாள்; பிறகு தானும் அவ்விளையாட்டை

மைசூர் உஷா

படம் உதவி: 'ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்'



ஆடத் தொடங்கினாள். நாளாக நாளாக ஆட்ட மோகம் அவளுக்கு நல்ல தேர்ச்சியைத் தந்து விட்டது.

இன்று இந்தியாவிலேயே தலைசிறந்த டேபிள் டென்னிஸ் ஆட்டக்காரியாகத் திகழ்கிறார் குமாரி உஷா.

மைசூருக்கும் போண்டாவுக்கும், மைசூருக்கும் ரஸத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்குமோ தெரியாது; ஆனால் மைசூருக்கும் டேபிள் டென்னிஸுக்கும் உறவிருக்கிறது. மைசூர் அளித்த குமாரி உஷா 1964, 1965 வருஷங்களில் ஜலந்தரிலும் 1966ம் வருஷத்தில் சென்னையிலும் மூன்று வருஷங்கள் தொடர்ந்து (Hatrick) தேசிய வீராங்கனைப் பதவியைப் பெற்றிருப்பது பெண் குலத்துக்குப் பெருமையாகும்.

குமாரி உஷாவின் குடும்பமே விளையாட்டுக் குடும்பம் என்றால் மிகையாகாது. அவள் தந்தையின் சகோதரர் திரு சின்னசாமி கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் காரியதரிசி. அவரது நெருங்கிய உறவினர் திரு ரங்காச்சாரி சென்னை கிரிக்கெட் பந்து வீச்சு நிபுணர். உலக கிரிக்கெட் பந்தயங்களில் புகழ் பெற்றவர். குமாரி உஷாவின் சகோதரி ரமா மைசூர் டேபிள் டென்னிஸ் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்றவர். 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்பது மாறி இந்த நவீன காலத்தில் 'உத்தியோகம் பெண்கள் லட்சண'மா யிருக்கிறதல்லவா? குமாரி உஷா எம். ஏ. பட்டதாரி; பங்களூர் அக்கௌண்டெண்ட் ஜெனரல் காரியாலயத்தில் ஆடிட்டர். கணக்கர் உஷா பந்தைக் கணக்காக அடிப்பதில் ஆச்சரிய மென்ன?

பெண்களிடம் வயசையும், திருமணத்தையும் பற்றி நேரிடையாகக் கேட்கக் கூடாது என்பார்கள். குமாரி உஷாவினிடம், ''உங்கள் சகோதரிக்குக் கல்யாணமாகி விட்டதோ ?'' என்ற 'தூண்டிலை'ப் போட்டுப் பார்த்தோம்.

''என் சகோதரிக்குக் கல்யாணமாகிவிட்டது. அவள் கணவர் கோபால் டிராம்பே அணுசக்தி நிலையத்தில் பணியாற்றுகிறார். ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்? என் கல்யாணத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள். நான் சுதந்திரமாக டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் ஈடுபட்டிருப்பது யாருக்குமே பிடிக்கவில்லை போலும் !''

''உஷாவுக்கு ஆட்டத்தைப் பற்றியே கவலை. அவள் பெற்றோர் நல்ல வரனைப்

பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!'' என்று 'குட்டை' உடைத்து விட்டார் அருகிலிருந்த அவரது தோழி ஸ்ரீமதி ரங்கநாதன்.

''குமாரி உஷா இப்படி ரொம்பவும் மெலிந்து கொடி போல ஒல்லியாக இருக்கிறாரே. அவர் உடல் பருக்க ஏதாவது வழி செய்யக் கூடாதோ?'' என்று கேட்டார் நிருபர் ஒருவர்.

''அதற்குத்தான் அவள் பெற்றோர் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்றேனே!'' என்று கூறி நகைத்தார் ஸ்ரீமதி ரங்கநாதன்.

குமாரி உஷாவுக்கு வெட்கம் பிடுங்கவே, ''அதோ, அடுத்த போட்டி ஆரம்பித்துவிட்டார்கள். நாம் போய்ப் பார்க்கலாம்!'' என்று மெதுவாக நழுவி விட்டார்.



வாழ்க, காப்பி!

இளம் செக்கோஸ்லவேகியப் பெண்ணொருத்தி ஜெர்மன் நாட்டுத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்தாள். அவள் எப்போதும் வேலைக்குத் தாமதமாகவே வருவது வழக்கம்.

''ஏன், சீக்கிரமாய் வர முடியாதா?'' என்று மேலதிகாரி அவளைப் பார்த்துக் கேட்ட போது, அவள் கூறியது: ''என்னால் காப்பி குடிக்காமல் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாது!''

அவளுடைய இந்தப் பதிலைக் கேட்டதும் மேலதிகாரிக்குச் சினம் வந்து விட்டது. ''நீ இனிமேல் இருபது நிமிடங்களுக்கு முன்பே வேலைக்கு வந்து விட வேண்டும்'' என்று உத்தரவிட்டார் அவர். அது மட்டுமல்ல, '' 'என்னால் காப்பி இல்லாமலேயே சமாளிக்க முடியும். வாழ்க, ஹிட்லர்!' என்று நூறு முறை, 'இம்போஸிஷனும்' எழுத வேண்டும்'' என்றும் தண்டனை விதித்தார்.

அதன்படி அவள் இருபது நிமிடங்களுக்கு முன்னதாகவே அலுவலகத்துக்கு வந்தாள். வழக்கத்துக்கு மாறாக விரைவில் அவள் எழுந்து விட்டதால் அவளைத் தூக்கக் கிறக்கம் எளிதில் விடவில்லை. என்றாலும், 'இம்போஸிஷன்' வேறு எழுதியாக வேண்டுமே? கொட்டாவி விட்டுக் கொண்டே அவள், ''என்னால் ஹிட்லர் இல்லாமலேயே சமாளிக்க முடியும், வாழ்க, காப்பி!'' என்று எழுதி வைத்தாள். ஒரு தடவை அல்ல; நூறுமுறை! —சி. முத்துக்குமரன்



கவர்ச்சிக்கன்னி 'ரமோனா'வின் கையைப் பிடிக்கக் காளை எவரேனும் முயன்றால் அடுத்த விநாடி அவளது காலடியில் அவன் விழுந்து கிடப்பான். 'ஜூடோ' என்னும் ஜப்பானிய முறை மர்ம மற்போரில் வல்லவள்.....ரமோனா! ஜெர்மனி டஸ்ஸல்டார்ப் நகரில் வசிக்கும் ரமோனா (வயது 20) ஒரு விளையாட்டுக் கழகத்தில் மற்றவர்களுக்கு 'ஜூடோ' வித்தைகளைக் கற்றுக் கொடுக்கிறாள். (டாட். யூ. பி. எஸ்.)





ஓர் வழ



நடுக்கும் குளிரில் சிலிர்க்கும் வஸந்தம்!

சென்னையில் இப்போதெல்லாம் சாயங் காலம் ஐந்து மணிக்கே பனி விழ ஆரம் பித்து விடுகிறது. அதுவும் கடற்கரைப் பக்கம் போனால் நம்மையறியாமலே கைகள் மார்போடு சேர்ந்து பிணைந்து கொள்ளு கின்றன. இவ்வாண்டு புயலைப் போலவே குளிரும் அதிகமாகத்தான் இருக்கிறது. இந்த மைய குளிரில் சர்வகலாசாலை நூற்றாண்டு விழா கலை அரங்கில் இம்மாதம் இரண்டாந் தேதியன்று ஓர் அற்புதம் நிகழ்ந்தது. இந்த மார்கழிக் குளிரில் அங்கு வசந்தம் வந்தது. மரங்களில் பூங்கொத்துக்கள் சிலிர்த்துக் கொண்டிருந்தன. மந்தமாருதம் வீசியது. மலர்கள் சிரித்துச் சிதறின. அற்புதமான காட்சி.

இப்படி மார்கழியில் சென்னைக்கு வசந் தத்தைக் கொண்டு வந்தவர்கள் ரஷ்யக் கலை ஞர்கள்தான். உஸ்பெகிஸ்தானியர்களின் கிராமிய நடனங்களுக்குப் 'பகோர்' (Bakhor) என்று பெயர். அதாவது வசந்தம். உஸ்பெக் நடனக் கோஷ்டியாரின் முதல் நடனமே பொற்கொடிகள் பூங்கொத்துக்களுடன் வசந் தோத்ஸவ நடனமாடி மகிழ்வூட்டுவதுதான்.

சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கத்தி னரின் ஆதரவில் நடைபெற்றது இந்நிகழ்ச்சி.

இந்நாட்டிய நிகழ்ச்சிகளில் இளமை, காதல் இவைகளே பிரதானமாக இடம் பெற் றிருந்தன. உஸ்பெகிஸ்தான் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் ஆடப்படும் புகழ் பெற்ற நடனங்களை அதன் பழமையின் பெருமையோடு புதுமையின் பொலிவையும் கலந்து அற்புதமான முறையில் அளித்தார்கள் கலைஞர்கள்.

ரஷ்யாவின் மக்கள் கலைஞரான முக்கரமா துர்கனெவ் பயவா என்பவரால் இந்த நாட் டியக் குழு 1957ல் உருவாக்கப்பட்டது.

ஆப்பிள் தோட்டம். அதில் பருவ எழில் பூத்த பாவையர்கள் தங்கள் காதலர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆனால் காளைகள் 'கன்னிகளைக் காண வரும் போது கட்டழகிகள் தங்கள் சிவந்த முகத் தைப் பட்டுத் துணியினால் மூடி மறைத்துக் கொள்கிறார்கள். வாலிபர்கள் அருகே நெருங் கும் போதோ கன்னிகள் மகிழ்ச்சி கொண்ட சிட்டுக்களாகப் பறந்தோடுகிறார்கள். உண்மை யில் மேடையில் காளைகள் வருவதில்லை. அவர் களை எதிர்பார்ப்பதும், வந்ததாகப் பாவித்துக் கொள்வதுமான கன்னிகளின் நடிப்பே நமக்கு இத்தனையையும் விளக்கி விடுகின்றது.

தாஷ்கெண்ட் பெண்களின் நடனத்தில் அந்தப் பாதங்கள் உண்டாக்கிய உயிருள்ள ஒலியையும், அந்தக் கண்களில் பொங்கிய மகிழ்ச்சிப் பூரிப்பையும் நம்மால் மறக்கவே முடியாது.

புக்காரா நடனப் பெண்கள் காட்டிய வேகத்திலே நமக்குப் பிரமிப்பே உண்டா கிறது. இது ஒரு சங்கிலித் தொடர் போல இயங்குகிறது. நடனப் பெண்கள் வெகு வேக மாகச் செயல்பட்டுப் பலவிதமான கோலங் களை—மேடையில் உருவாக்கிக் காட்டுகி றார்கள். 'பொம்மையின் நாட்டியம்' என்ற காட்சி சிரிக்க வைத்தாலும் பொம்மையைப் போலவே இயங்கிய நடனப் பெண் அதற் காக எத்தகைய பயிற்சியும் பக்குவமும் பெற் றிருக்க வேண்டும் என்பது சிந்திக்கத்தக்கது.

இந்த நடன நிகழ்ச்சிகளிலேயே பிரமாத மானது ஒரு தாள வாத்தியம்தான். நமது தப்பட்டை என்ற தோல் வாத்தியத்தைப் போன்ற ஒன்று. இதை உஸ்பெக் நடனக் காரர்கள் 'நகார்' என்றழைக்கின்றனர். இந்த நகாரைக் கொண்டு அதில் ஆயிரமாயி ரம் ஒலிக் கலவைகளை உண்டாக்கி நம் உள் ளத்தைக் கவர்ந்துவிட்டார் அதை இயக்கிய கலைஞர். ஆகா! அவர் கரத்தில்தான் அது எப்படி விளையாடுகிறது? அவரும் அத்துடன் எத்தனை லாகவமாக விளையாடுகிறார்? சக்கர

மாக இந்தத் தப்பட்டை அவர் கரத்தில் சுழலும்போதே அதில் அதே கை விரல்களால் தாள ஒலியையும் அவர் எழுப்புவது விந்தையாக, வியப்பாக இருக்கிறது.

'நகார்' ஒலி கேட்டு ஓடி வருகிறாள் நங்கை. காதலனின் அழைப்பாயிற்றே! வந்தவள் விழியாலும், தன் விரல்களாலும் பேசுகிறாள். அவனோ அவளுடன் ஒலியால் பேசுகிறான். 'நகார்' குழைகிறது. கொஞ்சுகிறது. 'குகுகு'க்கிறது. கர்ஜிக்கிறது. அப்பப்பா! 'தப்பட்டை' வாத்தியத்தை வைத்துக் கொண்டு என்னென்ன பண்ணி விட்டார் அந்தக் கலைஞர்.

நடனங்களின் அமைப்பு, அழகு, ஆடையணிகள், நிகழ்ச்சிகளின் ஒழுங்குமுறை — ஆகியவற்றை எத்தனைபாராட்டினாலும் தகும். ஒவ்வொரு நடனத்திலும் அந்தந்தப் பிரதேசக் கலாசாரம், பண்பாடு ஆகியவை பளிச்சென்று இடம் பெறும்படி அமைத்திருந்தார்கள்.

சென்னையில் நீல வைரம்


"மணி என்ன ஆகிறது?...."

"நாலேகால்.... ஏன்?"

"சினிமாவுக்குப் போக இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டுமே. அத்தனை நேரமும் எங்கு போவது, எப்படிப் பொழுதைக் கழிப்பது?"

இப்படிக் கவலைப்படும் இளைஞர்களுக்கும், 'அடாடா! இன்று மாலை ஐந்தரை மணி வண்டிக்கு டிக்கெட் புக் செய்து விட்டேன். மாட்னிக்குப் போனாலும் ஆறு மணிக்குத் தான் விடுவான். நல்ல படத்தைப் பார்க்க முடியவில்லையே. பகல் பொழுதில் படம் போடக் கூடாதா?' என்று அங்கலாய்க்கும் — ஓர் ஊரில் ஒரு நாள் மட்டுமே தங்கித் தினம் பிரயாணத்தில் இருக்கும் — வர்த்தகத் துறையினருக்கும் களிப்பூட்டும்படியான தொரு வைரம் தோன்றியிருக்கிறது சென்னையிலே. இந்த வைரம் நீல நிறமானது! இந்தியாவிலே முதன்மையானதும்கூட!

பிரபல வைர வியாபாரிகளான 'வீகம்ஸி' ஸ்தாபனத்தினர் தாங்கள் கட்டும் சினிமாத் தியேட்டர்களுக்கு வைரங்களின் பெயர்களையே வைக்கிறார்கள். அவைகளும் வைரங்களாகவே ஒளிவிடுகின்றன. முதலில் ஸஃபயர் தியேட்டரைக் கட்டிய வீகம்ஸியாரின் இரண்டாவது தியேட்டரின் பெயர்தான் 'ப்ளு டயமண்ட்'. இது ஒரு புது வகையான தியேட்டர். இதில் காட்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும் - காலை பத்து மணி முதல் இரவு ஒரு மணி வரை. சினிமாப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போது கொட்டகையின் காட்சி நேரங்களைப் பற்றி யோசிக்க வேண்டாம். நேரே 'ப்ளு டயமண்ட்' தியேட்டருக்குப் போகலாம். அங்கு காட்சி நடந்து கொண்டிருக்கும். பாதிப் படத்திலிருந்து பாருங்கள். அது முடிந்ததும் வெளியே வர வேண்டாம். உடனே தொடர்ந்து அதே படம் அடுத்த காட்சியாக ஓட ஆரம்பிக்கும். அதை ஆரம்பத்திலிருந்து பாருங்கள். நீங்கள் தியேட்டருக்குள்



நீல வைரத்தைத் திறந்து வைக்கிறார் மந்திரி திரு ஆர். வேங்கடராமன்


நுழையும் பொழுது எந்தக் காட்சியிலிருந்து பார்த்தீர்களோ அந்தக் காட்சி வரும் வரை பார்த்து விட்டு, முழுப் படத்தையும் பார்த்து முடித்த திருப்தியோடு திரும்பலாம். வியப்பாக இருக்கிறதல்லவா? வீகம்ஸியாரின் 'ப்ளு டயமண்ட் ஆர்ட் தியேட்டர்' இந்த வசதியைச் சென்னைவாசிகளுக்குச் செய்து கொடுத்திருக்கிறது. "உங்களுக்குச் சௌகரியமான நேரத்துக்குத் தியேட்டருக்குச் சென்று படம் பார்க்கலாம். 'ஆரம்பத்தில் பகல் ஒரு மணியிலிருந்து இரவு ஒரு மணி வரையே 'ப்ளு டயமண்ட்' இயங்கும். ரசிகர்களின் வரவேற்புக்குப்பின் அது பகல் பத்து மணியிலிருந்து செயல்படும்' என்கிறார் அதன் நிர்வாகஸ்தர் திரு யஷ்வந்த்.

இத்தகைய வசதியுடைய தியேட்டர் இன்று வரை இந்தியாவில் வேறெங்கும் கிடையாது. மந்திரி திரு வேங்கடராமன் அவர்கள் நீல வைரத்தைத் திறந்து வைத்து வீகம்ஸி உரிமையாளர் 'ஷா'வுக்கு 'சபாஷ்' போட்டு வாழ்த்தினார். "சினிமாத் துறையில் நீங்கள் நிறையச் சம்பாதியுங்கள், எங்களுக்கும் நிறைய வரி கொடுங்கள்" என்று கூறித் தியேட்டரைக் கலகலப்பாய் வாழ்த்தினார்.

'ப்ளு டயமண்ட் ஆர்ட் தியேட்டரி'ல் சினிமா மட்டுமல்லாது பல கலைகளுக்கும் இடமுண்டு என்று தெரிகிறது. இளம் ஓவியக் கலைஞர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக அவர்களுடைய சித்திரங்கள் இந்தத் தியேட்டரின் சுவர்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தேவையுள்ளவர்கள் அதை வாங்கிச் செல்லலாம். நீலவைரம் — பெரிய தியேட்டர் அல்ல. இருநூறு பேர்கள் மட்டுமே உட்கார்ந்து பார்க்கக் கூடிய சின்னஞ் சிறிய அழகான தியேட்டர்.

அறுபத்தேழில்





"முரசொலி மாறன்"


பவனி வந்த அலங்கார வண்டிகளிலொன்றில் அறிஞர் அண்ணா போலவும், ராஜாஜி போலவும், முஸ்லிம் லீக் தலைவர் போலவும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. போலவும் வேடமணிந்தோர் வந்தனர். 'அநீதியை ஒழித்து மக்கள் நலம் காணக் கூட்டு சேர்ந்திருக்கிறோம்' என்று பொறித்த எழுத்துக்கள் அதற்கு விளக்கம் தந்தன.

ஒரு வண்டியில் ஒருவர் அரக்கிபோல வேடமணிந்து பயங்கரமாகக் காட்சியளித்தார். அதுதான் 'இந்தி அரக்கி' என்று அறிந்த மக்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

அடுத்து 'செயிண்ட் ஜார்ஜ் கோட்டை'யே நகர்ந்து வந்தது. ஆம்; அந்த வண்டியின் ஜோடனை அத்தனை பிரமாதம்! '1967-ல் அண்ணா ஆட்சி' என்று அந்த ஆர்வ மிக்கத் தோழர்கள் கோட்டையின் மீது எழுதி வைத்திருந்தனர்.

இவ்வண்டிகள் நடமாடும் கண் காட்சிகளாய் இருந்தனவென்றால் இன்னொரு வண்டி நடமாடும் நாடகமாய் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதில் ஓர் இளைஞனின் உருவம் பிரேதம் போல் படுத்திருந்தது. அவன் மேனியெல்லாம் பொசுங்கிக் கறுத்திருந்தது. சில இடங்களில் அவன் தேகம் சுட்ட பழம் போல வெடித்தும் இருந்தது. அதைக் கண்டு 'த்சு' 'த்சு' கொட்டாத



★ கூட்டணி குறித்து ஆலோசனை நடத்தும் மும்பெரும் தலைவர்கள்.

★ அண்ணாவும் தம்பியும்.

சந்திப்போம்



வர்கள் இல்லை. ஆம்; அவன்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தமிழ் காக்கத் தீக்குளித்து உயிர் துறந்த தி. மு. கழகத் தியாகியின் சின்னம்; 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் தோள்' என்று சொல்லாமற் சொல்லும் வீர காவியம் !

அந்த நண்பர் கொஞ்சமாவது அப்படி இப்படி அசைய வேண்டுமே ! அது உண்மையில் மனிதரா, பொம்மையா என்று சந்தேகமே எழுந்து விட்டது பலருக்கு !

இப்படி வந்த கண்காட்சி வண்டித் தொடருக்குப் பின்னால் வெளியூரிலிருந்து வந்திருந்த தோழர்கள் தங்களது வாடகைக் கார்களில் அணிவகுத்து வந்தனர்.

அதற்குப் பின்னால் நூற்றுக் கணக்கான பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. தாங்கள் எந்த ஊர் கிளையைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பெருமையோடு அறிவிக்கும் 'பாவட்டா'க்களைத் தோழர்கள் பஸ்களில் கட்டியிருந்தனர். அந்த வாகனங்களுக்குள்ளும், மேல் தட்டிலும் தோழர்கள் உற்சாகமாக அமர்ந்து ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடி வந்தனர்.

அதில் ஒருவர், ''காமராச அண்ணாச்சி'' என்பார். வாகனத்தில் உள்ள மற்றவர்கள், ''அரிசி விலை என்ன ஆச்சு?'' என்பார்கள். இப்படி ஒவ்வொரு மந்திரியின் பெயரையும் மரியாதையோடு கூறி, ஒவ்வொரு பண்டத்தின் விலையும் 'என்ன ஆச்சு?' என்று கேட்டு வந்தனர். மற்றும், காமராசருக்குத் தெரியாத இந்தி — மந்திரிகள் படிக்காத இந்தி — ஒழிக என்றும் முழக்கமிட்டு வந்தனர். ''சந்திப்போம்.... சந்திப்போம்... 67ல் சந்திப்போம்!'' என்று அவர்கள் ஒலிப்பிய அறைகூவல் இடியோசையெனக் கேட்டது.



★ மகாநாட்டுக்குப் பெட்டி படுக்கை சகிதம் பெண் மணிகளும் ஏராளமாக வந்திருந்தனர்.

★ அண்ணாவின் தலைமையுரை.

ஊர்ந்து நகர்ந்த சுமார் ஐந்நூறு பஸ்களில் தொண்டர்கள் இப்படி எக்காளமிட்டு வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அலங்காரமான தேர் போல் அமைக்கப்பட்டிருந்த ஒரு வண்டியில் மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தமது தம்பிமார்கள் புடைசூழ அமர்ந்திருந்தார். அந்த வண்டியில் அவருடன் நாவலர் நெடுஞ்செழியன், மாநாட்டுத் திறப்பாளர் கலைஞர் கருணாநிதி, தியாகிகள் கோட்டத் திறப்பாளர் சி. பி. சிற்றரசு, கலைக் கண்காட்சித் திறப்

பாளர் ஏ. கோவிந்தசாமி, கொடியேற்றி வைக்கும் காஞ்சி கல்யாணசுந்தரம், தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்கள் மற்றும் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் நீல நாராயணன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

சுமார் மூந்நூறு அலங்கார வரவேற்பு வளைவுகளைத் தாண்டி, எட்டு மைல் தூரம் நகர்ந்து சென்ற இந்த ஊர்வலத்தின் தனிச் சிறப்புத்தான் என்ன? இதைவிட நேர்த்தியான ஊர்வலம் நடந்ததில்லையா என்ன? என்று கேட்கலாம்.

நிச்சயமாக இதைப் போன்ற ஊர்வலம் நடந்ததில்லை என்பதுதான் இதற்குப் பதிலாக இருக்க முடியும்.

எந்த ஒரு வரவேற்பு வளைவும் பெருந்தனக்காரர்கள் அமைத்துக் கொடுத்ததல்ல. ஆமாம்; இந்த ஊர்வலத்தில் எந்த அலுவலும் அரசாங்கப் 'பொதுத் துறை'யின் வாகனமே கிடையாது என்பது பெருமையுடன் கூறிக் கொள்ளக்கூடிய செய்தி.

வேறு ஊர்வலங்களின்போது நடப்பது போல் சாலையின் இரு முனைகளிலும் புதிய இரும்புக் குழாய்களை நட்டு, அதில் கட்சிக் கொடிகள் பறக்கவிடப்பட வில்லை.

தனியார் துறையும், பொதுத் துறையும் இணைந்த கூட்டுப் பொருளாதாரத் தத்துவத்தைச் (Mixed Economy) சித்திரிப்பதுபோல் பெரும் தொழில் அதிபர்களும், அரசாங்கமும் இந்த ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

முன்பு பிரதமர் நேரு அவர்கள் இறந்து சில தினங்களுக்குப் பிறகு சென்னையில் காங்கிரஸ் கட்சி நடத்திய திரு காமராஜ் அவர்களது பிறந்த நாள் ஊர்வலத்தில் அரசாங்கத்து மீன் இலாக்காவைச் சேர்ந்த வாகனங்களும், மராமத்து இலாக்காவைச் சேர்ந்த வாகனங்களும் கலந்து கொண்டன. இப்படி ஒரு கட்சியின் ஊர்வலத்தில் அரசாங்க வாகனங்கள் கலந்து கொள்ளலாமா என்று புகைப்பட ஆதாரங்களுடன் திரு மு. கருணாநிதி சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அப்படிக் கலந்து கொள்வது தவறில்லை என்று ஓர் அமைச்சர் பதில் கூறினார். கூட்டம் கூடும் இடங்களில் மீன் இலாகா வாகனங்கள் செல்வது பிரசாரத்துக்கு உதவும் என்று முதலமைச்சர் கனம் பக்தவத்சலம் கூறினார். அப்படியானால் அறிஞர் அண்ணா பிறந்த நாள் ஊர்வலத்துக்கு இதைவிட அதிகக் கூட்டம் கூடும்; அதற்கும் அத்தகைய வாகனங்களைக் காங்கிரஸ் அரசாங்கம் அனுப்புமா என்று திரு மு. கருணாநிதி குறுக்குக் கேள்வி கேட்டபோது அந்தப் பக்கமிருந்து பதிலேதும் வரவில்லை.

ஆளும் கட்சி ஊர்வலத்தின் லட்சணத்தைக் கூற இதைக் குறிப்பிட நேர்ந்தது.

இந்த ஊர்வலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் சாலையின் இருமருங்கிலும் நின்று அதைக் கண்டு களித்த மக்கள் வெள்ளமாகும். தேர்த் திருவிழாக்களுக்கு வருவது போல் நடுப்பகல் முதலே மக்கள் தங்கள் பேட்டைகளிலிருந்து குடும்பம் குடும்பமாய் ஊர்வலம் செல்லும் சாலையோரங்களில் குழுமி நின்றனர். முன்பு, புல்கானின் — குருஷேவ் வந்த போதும், எலிசபெத் ராணி யார் வந்த போதும்தான் இவ்வளவு கூட்டம் திரண்டது என்றும்; இல்லை, இல்லை, அதையும் இந்தக் கூட்டம் மிஞ்சி விட்டது என்றும் விவாதிக்கிற அளவுக்கு அந்தப் பெருந் திரள் இருந்தது என்பது மதிப்பிற்குரிய விஷயம்.

இவ்விதம் பிற்பகல் சுமார் நான்கு மணிக்கு 'ஜிம்கானா' மைதானத்தை விட்டு நகர ஆரம்பித்த ஊர்வலம் இரவு சுமார் ஒன்பதரை மணிக்கு விருகம்பாக்கத்தை அடைந்தது. ஆனால் ஊர்வலத்தின் 'தலை' பந்தலுக்குள் நுழைந்ததே தவிர, 'வால்' கோடம்பாக்கம் புதுப் பாலத்துக்கு இப்பால் இருந்தது என்பது கவனத்துக்குரியது.

சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால், மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியாகிய இந்த ஊர்வலம் மகத்தானது என்பதைவிட; இதில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் காட்டிய எழுச்சியும், கண்டு களித்த பொதுமக்கள் பெற்ற எழுச்சியும் மகத்தானது என்பதுதான் மிகவும் முக்கியமானது.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரம்கொள் கூட்டம் - அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்று
உடலினால் பலராய்க் காண்பர்

என்னும் புரட்சிக் கவிக்கேற்ப, இரண்டாம் நாள் (30—12—66) அதிகாலையிலேயே நீல மேகம் நகர் நிரம்பி வழிந்தது.

கோடம்பாக்கம் புதுப் பாலத்திலிருந்து மாநாட்டுப் பந்தல் வரை சங்கிலித் தொடர் போல் வாகனங்கள் அங்குலம் அங்குலமாக ஊர்ந்து கொண்டிருந்தன. அவ்வளவு நெரிசல்! சாலையின் இருபுறமும் எறும்பு வரிசை போல் மக்கள் சாரை சாரையாகப் போய்க் கொண்டிருந்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் துவக்கமாக; கழக தினசரியான 'நம் நாடு' பொறுப்பாசிரியரும், பல்லாண்டு காலம் இயக்கத்துக்கெனப் பாடுபட்டவருமான திரு காஞ்சி கல்யாண சுந்தரம் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்துக் கருத்துரை வழங்கினார்.

செவிக்கு உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த அதே நேரம் கண்ணுக்கும் உணவு காத்திருந்தது. ஆம்; தமிழக அரசியலில் இது வரை யாரும் கண்டிராத அதிசயமாக, தி. மு. க. தலைவர்களுக்குப் பக்கத்தில் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ராஜாஜி, முஸ்லிம் லீக் தலைவர் 'காயிதே மில்லத்' இஸ்மாயில் சாகிப், தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சி., நாம் தமிழர் கட்சித் தலைவர் திரு சி. ப. ஆதித்தன், 'பார்வர்டு பிளாக்' தலைவர் திரு மூக்கையா தேவர் ஆகியோர் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தது. 'நாளை மறுதினம் உதயமாவது புத்தாண்டு மட்டுமல்ல; ஒரு புதிய சகாப்தமும் கூட' என்று அறிவிப்பது போல் இருந்தது.

அடுத்து மாநாட்டைத் திறந்து வைத்துக் கலைஞர் மு. கருணாநிதி ஆற்றிய தொடக்க உரை காங்கிரஸ் ஆட்சியை ஏன் அகற்ற வேண்டும் என்பதற்கான புள்ளி விவரப் பெட்டகமாக இருந்தது.

"4000 கோடி ரூபாய் கடன் வாங்கிப் போட்ட மூன்று திட்டங்களினால் ஏழை

ளுக்குச் சரியான வாழ்வு கிடைக்க வில்லை. ஆனால் இந்தத் திட்டங்களினால் எழுபத்தைந்து பெரும் புள்ளிகள் பலன் பெற்றிருக்கிறார்கள். அவர்களது சொத்து மதிப்பு 6062 கோடி ரூபாய். இதற்குப் பெயர்தான் நண்பர்களே! ஜனநாயக சோஷலிஸம்! இந்த 6062 கோடி ரூபாய் களைக் காங்கிரஸ் அவர்களுக்குச் சொத் தாகச் சேர்த்துக் கொடுத்திருக்கிறது என்றால், கைம்மாறு கருதாமலா? நடக்குமா ? இந்தப் பண மூட்டைகள் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் தேர்தல் நிதியாக ஒரு கோடியே 56 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். அது மாத் திரமல்ல; பம்பாயில் ஒரு பெரிய முத லாளி தமது கட்சியின் தேர்தல் நிதிக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கான 'செக்' ஒன்றைக் கொடுத்ததாகக் காமராசரே அறிவித்திருக்கிறார். இதற்குப் பெயரா ஜனநாயக சோஷலிஸம்?''

என்று அவர் கொடுத்த புள்ளி விவரம் கருத்தைக் கவர்ந்தது.

'''நீ ஆளும் கட்சியாக வர விரும்பு கிறாயே; எதிர்க்கட்சியாகப் பரிணமித் தாயா?' என்று யாராவது கேட்பார்களே யானால் அவர்களுக்கு ஒருசிலவற்றைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மிக முக்கியமான பிரச்னைகளாகத் தி. மு. கழகம் சட்ட மன்றத்திலே சென்ற ஐந்து ஆண்டுகாலத்தில் கொடுத்த தனி யார் தீர்மானங்கள் 12; ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் 46; கவன ஈர்ப்புத் தீர் மானங்கள் 77; உரிமைப் பிரச்னைகள் 48; நாங்கள் கேட்ட கேள்விகள் 6107 ; நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் 2. **அந்த இருமுறையும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தப்பித்தார்கள் - பெரும் பான்மையால் - ஓட்டு பலத்தால்! ஆனால் விவாதத்தால் - உண்மைகளினால் அவர்கள் தப்பவில்லை; தலையிலே கை வைத்துக் கொண்டார்கள்''**

என்று, பொறுப்புள்ள எதிர்க் கட்சியாகச் சட்டசபையில் தி. மு. க. பணியாற்றியதை விளக்கிய திரு கருணாநிதி, கடந்த ஆண்டு களில் சென்னை மாநகராட்சியில் திறமை யுள்ள ஆளும் கட்சியாக இருந்து செய்த சாதனைகளையும் எடுத்துக் கூறி, தோழமைக் கட்சிகளின் துணையுடன் தி. மு. க.வை ஆட்சி பீட மேற்ற வேண்டிய அவசியத்தையும் விளக்கி, மாநாட்டினைத் திறந்து வைத்தார்.

பிறகு நாவலர் திரு நெடுஞ்செழியன், எழுந்து, ''காந்தியாரின் வலது கரமாக இருந்து அகில உலகப் புகழ்பெற்றவரும், இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனர லும், அகில உலகத்தோராலும் மதிக்கப்படும் அளவுக்கு அறிவாற்றல் பெற்றவருமான திரு ராஜாஜி அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது மட்டற்ற மகிழ்ச்சி தரு கிறது. அவரை வாழ்த்துரை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி முடித்த போது கைதட்டலால் கொட்டகையே அதிர்ந்தது.

''இவ்வளவு பிரமாதமாக ஏற்பாடுகள் நடந்திருக்கும் என்று நினைக்கவில்லை. எல் லாம் ஏதோ மாயம் போல நடந்திருக் கிறது ''

என்று ராஜாஜி தமது வியப்பைத் தெரிவித் தார்.

''உலகம் வியக்கக் கூடிய வகையில், வேறு கட்சியான சுதந்திரக் கட்சிக்குத் தலைவராக இருக்கிற நானும், தி.மு.க. வும் சேர்ந்திருப்பது சரித்திரத்தில் பதிய வேண்டிய ஆச்சரியமான சேர்க்கை. சரித் திரத்தில் பதியும். வெற்றி பெற்றால் நன்கு பதியும்..... நமது சேர்க்கையைக் கண்டு அச்சம் கொண்ட காமராஜர் படுத்துக் கொண்டே தேர்தலில் ஜெயிப் பேன் என்கிறார். படுப்பது நிச்சயம். ஜெயிப்பது சந்தேகம் ''

என்று அந்தக் 'குட்டிக் கதை மன்னர்' குறிப்பிட்ட போது குதூகலத்தால் துள்ளிக் குதிக்காதவர்கள் இல்லை.

அந்தப் பெரியவர் கூறியது எவ்வளவு உண்மை என்பதைப் பின்னால் வந்த செய்திகள் உறுதிப்படுத்தின. அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தமிழகம் வந்த போது, மற்ற எல்லா வேலைகளையும்விடத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வேலைக்கே முத லிடம் தந்து, 9—1—67 அன்று தமதுதொகுதி யில் சூறாவளிப் பிரசாரம் செய்திருக்கிறார். 'ஐந்து மணி நேரத்தில் பதினெட்டு நிகழ்ச்சி களில் கலந்து கொண்டார்' என்று ஏடுகள் தலைப்புத் தந்திருக்கின்றன.

இதுவா தூங்கிக் கொண்டே ஜெயிப்ப தற்கு அடையாளம் ?

ஒரே பட்டியல் மூலம் தனது அபேட்ச கர்கள் விவரத்தைத் தெரிவிக்கும் பெருமை தமிழ் நாடு காங்கிரசுக்கு இருந்து வந்தது. ஆனால் இன்றோ நான்கு பட்டியல்கள் வந்து விட்டன; இன்னும் தொகுதிகள் இருக்கின்

கோட்டை வாசலில்

''துணிச்சலாய் இரு!''- இதுமுதல் வாசகம்;
''துணிச்சலாய் எப்போதும் இரு!''- இது இரண்டாவது வாசகம்;
''அளவுக்கு மீறித் துணிச்சலாய் இருக்காதே!''- மூன்றாவது வாசகம் இது.



ஒரு கோட்டை வாசலில் பதித்துள்ள சலவைக் கல்லில் வீரர்களுக்காகப் பொறித்திருந்த வாசகங்கள்.

விலைவாசி உயர்வு !

தெருவில் நெருப்புப் பெட்டி வைத்து விற்றுக் கொண்டிருக்கும் கிழவன் ஒருவனுக்கு அந்தக் கனவான் தினம் ஐந்து பைசா கொடுத்துவிட்டு நெருப்புப் பெட்டி எதையும் எடுத்துக் கொள்ளாமலே போய் விடுவது வழக்கம்.

அன்று வழக்கம் போல் அவனுக்கு ஐந்து பைசா கொடுத்துவிட்டு நகர்ந்தார் கனவான். "ஐயா" என்று அந்தக் கிழவன் கூப்பிடவே திரும்பி வந்தார்.

"என்ன வேண்டும்?"

"ஐயா, நெருப்புப் பெட்டியின் விலை ஏறி விட்டது!" என்றான் கிழவன்.

- எஸ். எல். எஸ்

நன; அபேட்சகர்கள் தேடப்படுகிறார்கள். அது மட்டுமா? வெளியிட்ட பட்டியலிலும் மாற்றம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் வரலாற்றில் இதுவரை நடக்காத அதிசயம் இது !

இதுவா காங்கிரஸ் தாங்கிக் கொண்டே ஜெயிப்பதற்கு அடையாளம்?

வெறும் நகைச்சுவைக்காக திரு ராஜாஜி அவ்விதம் கூறவில்லை; நடைமுறையையே அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்பது இதனால் விளங்கும்.

"என் வாழ்நாளில் என் கட்சியை, என் கூட்டத்தைச் சேராத மக்கள் என்னிடம் இவ்வளவு அன்பு காட்டுவது கண்டு பரவசப்படுகிறேன்"

என்று திரு ராஜாஜி மனம் உருகிக் கூறுகிறார் என்பதை அவரது தழுதழுத்த குரல் காட்டிய போது அனைவரது உள்ளமும் அவர்பால் சென்றது.

"தி. மு. க. தம்பி மார்கள், பேரன் மார்கள் எல்லாருக்கும் என் மனப்பூர்வமான வாழ்த்து"

என்று ராஜாஜி கூறியபோது அந்த மக்கட் பெருங்கடல் தனது அலைக் கரங்களைத் தட்டி ஆர்ப்பரித்தது.

'அண்ணன் – தம்பி' என்று ஓர் அரசியல் கட்சியை நெருங்கிய குடும்பப் பாசத்தால் இணைத்து இயக்கும் பெருமை அறிஞர் அண்ணாவையே சேரும். அவர்தான் பதினெட்டு வயது இளைஞர் முதல், பல்லாடும் பருவம் வரை உள்ள அத்தனை தி. மு. க. உறுப்பினருக்கும் அண்ணன். அந்த அண்ணனின் தம்பியரைப் 'பேரன்மார்' என விளித்ததின் மூலம் தம்மை 'தி. மு. க.வின் தாத்தா' என அன்று ராஜாஜி உரிமை கொண்டாடிக் கொண்டார்.

"இந்த நட்பும் சேர்க்கையும் எந்த அளவுக்கு அரசியல் பலாபலனைக் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் இந்த நாட்டில் அருமையைப் போக்கி, வகுப்பு ஒற்றுமையை வளர்க்கச் செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை."

திரு ராஜாஜியின் இந்த வாசகங்கள் அவரது வார்த்தைக்கு மதிப்பளிக்கும் அத்தனை பேராலும் அமுல்படுத்தப்பட வேண்டிய பொன்மொழிகளாகும்.

தொகுதிப் பக்கம் அடியெடுத்து வைக்காமலே கேரளத்தைச் சேர்ந்த மஞ்சேரி தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குரிய முஸ்லிம் லீக் தலைவர் 'காயிதே மில்லத்' இஸ்மாயில் சாஹிப் அவர்கள் அடுத்துப் பேசிய போது, தி. மு. க.வுக்குத் தமது கட்சியின் அன்பையும் ஆதரவையும் உறுதிப் படுத்தினார்.

பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு மூக்கையா தேவர் எம். எல். ஏ. காங்கிரஸ் கட்சியைக் கலப்படக் கொள்கையின் 'சூப்பர் மார்க்கெட்' என்று வர்ணித்தார். காங்கிரஸ் கட்சியில் நடைபெற்ற அநியாயங்களை யெல்லாம் எடுத்துக் காட்டி, 'இந்தக் கொலைகார ஆட்சியை அகற்றிவிட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் கலந்து கொண்ட திரு எஸ். ஆர். சுப்பிரமணியம், "தி. மு. க. தலைமையில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ், ஆட்சிக்கு வராமல் இருக்க எதிர்க் கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றன. அதன்படி தி. மு. க. தலைமையில் காங்கிரஸை 'மைனாரிட்டி' கட்சியாக்குவோம்" என்று தம் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொண்டார்.

நாம் தமிழர் கட்சித் தலைவர் திரு சி. பா. ஆதித்தன், "எதிர்ப்பணியை உண்டாக்குவது சங்கடமான காரியம். இதற்குப் பொறுமை, சகிப்புத் தன்மை வேண்டும். அவை அத்தனையும் அறிஞர் அண்ணாவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. அடுத்த முறை தி. மு. க.வைச் சேர்ந்த அமைச்சர்கள், எதிர்க்கட்சியாக அமையவிருக்கும் காங்கிரஸ் கட்சிக்குப் பதில் சொல்ல வேண்டும்" என்ற கருத்தினை வெளியிட்டார்.

இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு எம். ஆர். வெங்கடராமன் எதிர்ப்பு அணியின் வெற்றிக்குத் தமது கட்சி அயராது உழைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவரும், சிலம்புச் செல்வரும், தியாகத் தழும்புகள் பெற்றவருமான திரு ம. பொ. சிவஞானம் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதைத் தமது நாற்பது ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் தாம் பெற்ற புது அநுபவம் என்று கூறினார். இதை முன்கூட்டியே செய்யாமல் காலம் தாழ்த்திச் செய்ததில் கவலைப்படுவதாகவும் தெரிவித்தார்.

["அறுபத்தேழில் சந்திப்போம்" என்ற இக் கட்டுரை வெளியாகப் போவதாகக் கல்கியில் அறிவிப்பு வந்த உடனேயே, மகாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களுக்கும் மன நிறைவு ஏற்படும் வண்ணம் விரிவான முறையில் கட்டுரை எழுதப்பட வேண்டும் என்று கோரி ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்தன. நேயர்களின் விருப்பத்துக்கு ஏற்ப 'முரசொலி மாறன்' அவர்கள் அடுத்த இதழிலும் இக்கட்டுரையைத் தொடருகிறார்.

- ஆசிரியர்]

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்

வெள்ளி விழா
இரண்டாவது
பரிசு நாவல்

இரண்டாம் அத்தியாயம்

தாமிரபரணியில் இரத்தம் கலந்தது!

ஸ்டேஷனை விட்டுத் தெருவுக்கு வந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தான், ரங்கமணி. ஆறு மாதங்களுக்கு முன் எப்படியிருந்ததோ அப்படியேதான் இருந்தது அம்பாசமுத்திரம். சாமான் தூக்கும் போர்ட்டர்கள்கூட மாறவில்லை. அதே கூலிகள்தாம் திரிந்துகொண்டிருந்தார்கள். கடைத் தெருவைக் கடந்து பெரியகுளம் தெருவுக்குள் நுழைந்தான். முதலில் அவனை வரவேற்றது, சொறி பிடித்த ஒரு நாய்தான். அவனைக் கண்டு முதலில் முறைத்தது. ஆனால் சிக்கிரத்திலேயே அவனை அடையாளம் கண்டு கொண்டது. அவனும் அந்தத் தெருவாசிதானே. வாலை ஆட்டிக் கொண்டு சிறிது தூரம் அவன் பின்னால் சென்றது நாய். பக்கத்துச் சந்திலிருந்து



வேறு ஒரு நாய் தலையை நீட்டவே, அதை விரட்டித் தன் யதேச்சாதிகாரத்தை நிலைநாட்டப் போய்விட்டது.

ஒரு வீட்டு வாசலில் போய் நின்றான் ரங்கமணி. கதவு சாத்தியிருந்தது. வாசலில் இவன் வந்து நின்றதும் எதிர் வரிசையிலிருந்தும், பக்கத்து வீடுகளிலிருந்தும் ஜன்னல் வழியாகப் பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். அவனை அந்த ஊரில் எல்லோருக்கும் தெரியும்; எல்லோரையும் அவனுக்கும் தெரியும். ஒருவரையொருவர் தெரியாமல் போகும் அளவுக்கு அந்த ஊரில் இன்னும் நாகரிகம் வளர்ந்து விடவில்லை.


''யாரு, ரங்கனா? பட்டணத்திலிருந்து வருகிறாயா?'' என்று நீட்டி முழக்கிக் கொண்டே பக்கத்து வீட்டுப் பாட்டி வந்து சேர்ந்தாள்.

''என்ன பாட்டி, சௌக்கியமா?''

''ஏதோ இருக்கிறேன்.''

''தாத்தா இருக்கிறாரா, ஊருக்கு எங்காவது...?''

''யாரு...உன் தாத்தாவைத்தானே கேட்கிறாய்? பாவம், எங்கே போகப் போகிறார்? உன் நினைவுதான் அவருக்கு. கதவைத் தட்டேன். அவர் உள்ளேதான் இருப்பார்'' என்றாள் பாட்டி.



ரங்கமணி கதவைத் தட்டினான். சிறிது நேரத்தில் கதவு திறந்தது. உள்ளேயிருந்து ஒரு கிழவர் வெளியே வந்தார். மாலை வெளிச்சத்தைக்கூட அவர் கண்களால் தாங்க முடியவில்லை. மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு, ஒரு கையினால் கண்ணில் விழுந்த ஒளியை மறைத்துக் கொண்டு ரங்கமணியை உற்றுப் பார்த்தார்.

''உங்கள் பேரன் ரங்கன் வந்திருக்கிறான்'' என்றாள், பக்கத்தில் நின்ற பாட்டி.

''நம்ம ரங்கனா? வாடா வாடா! வா வா!'' கிழவர் உணர்ச்சிப் பெருக்கால் திணறினார். ரங்கமணி வீட்டுக்குள் நுழைந்ததும் பாட்டி தன் வீட்டுக்குப் போய் விட்டாள். கிழவர் ரங்கமணியை அணைத்துக் கொண்டார். அந்த அணைப்பில் அவருடைய பாசத்தின் தவிப்பை உணர்ந்தான், ரங்கமணி. பாவம்! அந்தத் தள்ளாத வயதில் அவருக்குத் துணையிருக்க முடியவில்லையே என்ற எண்ணம் அவன் மனத்தில் ஆற்றாமையை உண்டாக்கியது.

இரவு முழுதும் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். பேரனைத் தொட்டுத் தொட்டுப் பேசினார் கிழவர். பாவம் அவருக்கு ஒரே தவிப்பு. அந்திய காலத்தில் அவருக்குள்ள ஒரே துணை அவன்தான். அவனும் எங்கே கைநழுவிப் போய்விடுவானோ என்று பயந்தார்.

* * *

ரங்கமணியின் தந்தையைப் பெற்ற பாட்டனார் அவர். வாழ்க்கையில் எத்தனையோ விதமாக அடிபட்டு ஓய்ந்து விட்டார். அந்தக் காலத்தில் மைனர் நெல்லையப்ப பிள்ளை என்றால் அம்பாசமுத்திரம் வட்டாரம் முழுவதும் தெரியும். அவ்வளவு தடபுடலாக இருந்தவர் அந்தக் கிழவர். அவருடைய மைனர் முறுக்கெல்லாம் அவருடைய மனைவி அவரைத் தனியே விட்டு விட்டுக் கண் மூடியபோது தளர்ந்து விட்டது. நெல்லையப்ப பிள்ளை மீண்டும் திருமணம் செய்து கொள்வார் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். சில தரகர்கள் கூட அவரைச் சுற்றி வளைத்தார்கள். ஒன்றிரண்டு தகப்பன்மார்கள் நெல்லையப்ப பிள்ளையின் சொத்துக்கு ஆசைப்பட்டுத் தங்கள் பெண்களை அவருக்கு மணம் முடிக்கத் துடித்தனர். ஆனால் நெல்லையப்ப பிள்ளையின் வைராக்கியம் எல்லாரையும் ஏமாற்றி விட்டது. ஒரே மகனை சாமிநாதனுக்காகத் தம் உல்லாசப் போக்கையே மாற்றி யமைத்து விட்டார்! அன்றிலிருந்து இன்றுவரையில் அந்தச் சிறு குடும்பத்தின் சுமைதாங்கியாகவே வாழ்க்கையை அர்ப்பணித்துக் காலத்தைக் கழித்துவிட்டார். சாமிநாதனை வளர்த்தார். என்ன வெல்லாமோ திட்டமிட்டார். எல்லாம் வெறும் கனவாய், கற்பனையாய்ப் போய் விட்டன.

சாமிநாதன் வளர்ந்து காளையாகத் திரிந்த பருவத்தில் நெல்லையப்ப பிள்ளை கட்டிய மனக் கோட்டைகளுக்கு அளவேது? ஆனால் அனைத்தையும் வெகு அலட்சியமாகச் சாமிநாதன் இடித்துத் தரைமட்டம் ஆக்கி விடுவார் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்? சாமிநாதனின் சிந்தையெல்லாம் புதுப் பாதையில் கடும் வேகத்தில் செல்ல ஆரம்பித்த பிறகுதான், நெல்லையப்ப பிள்ளைக்கு உண்மை தெரிந்தது. பாவம், அவர்தான் என்ன செய்ய முடியும்?

ஒரு நாள் மாலை வேளையில் உலவிவிட்டு வீடு திரும்பிய நெல்லையப்ப பிள்ளை, வீட்டின் உள்ளே இரண்டு பேர்களுடன் சாமிநாதன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த இருவரில் ஒருவர் தலைப்பாகையும் கீழ் நோக்கி வளர்ந்த மீசையும், பரந்த முகமும் கம்பீரமான தோற்றமும் உடையவர். பார்ப்பதற்குப் பெரிய மிராசுதார் போலிருந்தார். மற்றவர் வழுக்கு மொட்டையடித்த தலையும் வெறித்து நோக்கும் சிவந்த கண்களும் மேல் நோக்கி முறுக்கி விடப்பட்ட மீசையும், எதையும் லட்சியம் செய்யாத அலட்சியப் பார்வையும், உள் ஆழ்ந்த அமைதியும் கொண்டவர். இவர் பக்கத்தில் அவிழ்ந்த நிலையில் ஒரு தலைப்பாகை கிடந்தது. இருவரையும் வியப்போடு பார்த்தார் நெல்லையப்ப பிள்ளை.

''அப்பா! இவர்கள் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்றார் சாமிநாதன். இருவரையும் வணங்கி வரவேற்றார் நெல்லையப்ப பிள்ளை.

''இவர்களுக்குத் தூத்துக்குடி. புகழ் பெற்ற வக்கீல்! சிதம்பரம் பிள்ளை என்று பெயர்'' என்று கனவானைப் போல் இருந்தவரை அறிமுகம் செய்து வைத்தார் சாமிநாதன். பிறகு, ''இவர்களுக்கு எட்டயபுரம். பெயர் சுப்பிரமணிய ஐயர். நம் தாலுகாவைச் சேர்ந்த கடையத்தில்தான் கலியாணம் ஆகியிருக்கிறது. கவி பாடுவதில் மிகுந்த ஆற்றல் உண்டு'' என்று மற்றவரை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது அந்தக் கவிஞர், மீசையை முறுக்கி விட்டுக் கொண்டிருந்தார். நெல்லையப்ப பிள்ளை, அவர்கள் இருவரையும் மாறி மாறி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உங்களிடம் ஒரு காரியமாக வந்திருக்கிறார்கள்'' என்றார் சாமிநாதன். நெல்லையப்ப பிள்ளை புருவத்தை உயர்த்திக் கேள்வியைப் பார்வையில் தேக்கி, அவ்விருவரையும் பார்த்தார். சிதம்பரம் பிள்ளை பேசினார்:

''சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றை ஆரம்பித்திருக்கிறோம். அதில் நீங்களும் பங்குதாரராய்ச் சேர வேண்டும்...''

இதைக் கேட்டு நெல்லையப்ப பிள்ளை அதிர்ந்து விட்டார்.

''கப்பல் கம்பெனியா? வெள்ளைக்காரனுக்கு எதிராகவா?'' பதறிப் போய்க் கேட்டார் நெல்லையப்ப பிள்ளை.

''வெள்ளைக்காரன் என்ன, கடவுளுக்கே எதிராகக்கூட கம்பெனியை நடத்துவோம்'' என்று வெடுக்கென்று கூறினார் கவிஞர்.

''நீங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். நீங்களே இப்படி அரசாங்கத்துக்கு விரோதமாக...'' என்று நெல்லையப்ப பிள்ளை சொல்லி முடிப்பதற்குள் கவிஞர் குறுக்கிட்டார்:

''ஏன்? வெள்ளைக்காரன் இருக்கிறான் என்பதற்காக நாம் பட்டினி கிடக்க முடியுமா? நிர்வாணமாக அலைய முடியுமா? எந்தத் துறையிலும் தலையிட்டுச் சுதந்திர

மாக வாழ நமக்கு உரிமை இருக்கிறது, ஐயா, உரிமை இருக்கிறது. இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே காலத்தைக் கடத்திவிட் டீர்களே! நல்ல வேளை, உங்கள் மகனாவது நிமிர்ந்து நிற்கிறானே!''

கவிஞரின் படபடப்பான பேச்சு நெல்லை யப்ப பிள்ளையை அதிர வைத்து விட்டது. அவருக்கு இப்போதுதான் உண்மை விளங்கி யது. தன் மகன் படிப்பில் கவனம் செலுத் தாமல் ஊர் சுற்றும் காரணம் புரிந்துவிட்டது. உண்மையை உணர்ந்ததும் நெல்லையப்ப பிள்ளையின் உடலெல்லாம் நடுங்கியது.

''எங்களை யெல்லாம் இதில் இழுக்கா தீர்கள்'' என்று கூறி, கையிரண்டையும் கூப்பி வணங்கினார், நெல்லையப்ப பிள்ளை. இதைக் கண்டு கவிஞர் அலட்சியமாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் வெறுப்பும், சோகமும் கலந்திருந்தன. சிதம்பரம் பிள்ளை சொன் னார்: ''பிள்ளைவாள், உங்களுக்குச் செல்வம் இருக்கிறது. செல்வாக்கும் இருக்கிறது. நீங்களே இப்படித் தயங்கினால், நம் நாட்டில் மற்றவர்கள் நிமிர்ந்து நிற்க வழியேது? உங் களைப் போலுள்ளவர்கள்தான் முதுகெலும் பாக அமைய வேண்டும். நீங்களே குறுகி வளைந்தால் நம் நாடு அடிமைத்தனத்தி லிருந்து மீளப் போவதேயில்லை.''

''நம்மால் எல்லாம் வெள்ளைக்காரனை எதிர்க்க முடியுமா?'' என்று மலைத்தார் நெல்லையப்ப பிள்ளை.

''நம் சக்தியும், முயற்சியும் வீண் போகாது பிள்ளைவாள். முதலில் பொருளா தாரத் துறையில் போட்டியிட்டு வெள்ளைய னுக்கு இங்கு கடை போட வழியில்லாமல் செய்துவிட்டால் அவனே கப்பலேறிவிடு வான். நம் நாட்டை அவன் ஆளுவதெல்லாம் நம்மைச் சுரண்டத்தான். அவன் சுரண்டிச் சுரண்டி நாம் ஓட்டாண்டி ஆனதுதான் மிச் சம்'' என்றார் சிதம்பரம் பிள்ளை.

''பெரிய மலையைச் சுண்டெலி மோதுவது மாதிரிதான்'' என்றார் நெல்லையப்ப பிள்ளை.

''இல்லையப்பா, மலையையே தகர்க்கும் அருமருந்து'' என்று குறுக்கிட்டார் சாமி நாதன்.

''சபாஷ்டா, தம்பி!'' என்று உற்சாக மாகக் கத்திக் கொண்டே சாமிநாதனின் முதுகில் தட்டினார் கவிஞர். ''பிள்ளைவாள்! இவனை மகனாகப் பெற்ற நீங்கள் எவ்வளவு பெருமைப்பட வேண்டும் தெரியுமா? முடங் கிக் கிடக்கும் இந்தியாவை இவனைப் போன்ற வீரர்களால்தான் நிமிர்ந்து நிற்கச் செய்ய முடியும்'' என்றார் கவிஞர்.

''நீங்கள் கூறுவதெல்லாம் எனக்கு ஒன் றும் புரியவில்லை. வெள்ளைக்காரனுக்கு எதி ராக இருப்பது ஆபத்துத்தான்'' என்று முனகினார் நெல்லையப்ப பிள்ளை.

''அதற்காகத்தானே சக்தியைத் திரட்டு கிறோம். சுதேசிக் கப்பல் விடத் ஆரம்பித்து விட்டாலே வெள்ளைக்காரன் பதறிப் போவான். வெள்ளையனுக்கு எதிராக நீங்கள் தடியெடுக்க வேண்டாம், கத்தியைத் தூக்க வேண்டாம். பணம் கொடுங்கள் போதும். மற்ற வேலையை நாங்கள் பார்த்துக் கொள்ளு கிறோம்'' என்றார் சிதம்பரம் பிள்ளை.

''எவ்வளவு வேண்டும்?'' — நெல்லையப்ப பிள்ளை கேட்டார்.

''பதினாயிரம் ரூபாய்க்குப் பங்குகளை வாங் கிக் கொள்ளுங்கள்.''

''அடேயப்பா! அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்?''

''உங்களால் முடியுமா முடியாதா என் பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் இங்கே வந்திருக்கிறோம். உங்களுக்கெல்லாம் இது ஓர் அற்பமான தொகை.''

''அப்பா! பதினாயிரத்துக்குக் குறையாமல் வாங்கித் தருவதாக வாக்குக் கொடுத்து நான் இவர்களை அழைத்து வந்தேன்'' என் றார் சாமிநாதன்.

நெல்லையப்ப பிள்ளை செய்வதறியாது திகைத்தார். சிதம்பரம் பிள்ளை அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். சாமி நாதன் கெஞ்சும் பாவனையில் நின்றுகொண் டிருந்தார். கவிஞர் தம் சட்டைப் பையி லிருந்து ஒரு தாளை எடுத்துப் பென்சிலால் ஏதோ எழுதத் தொடங்கி விட்டார்.

''இதில் நீங்கள் பயப்படுவதற்கு ஒன்று மில்லை. கப்பல் கம்பெனியில் லாபம் வரும் போது அதில் உங்களுக்கும் பங்கு கிடைக்கும். பணத்தை ஆற்றிலா கொட்டுகிறீர்கள்? நல்ல காரியத்துக்குத்தானே கேட்கிறேன்'' என்றார் சிதம்பரம் பிள்ளை.

மன உளைச்சலுடன் இரும்புப் பெட்டியைத் திறந்து பதினாயிரம் ரூபாய் எடுத்துச் சாமி நாதனிடம் நீட்டினார் நெல்லையப்ப பிள்ளை.

''எப்படியும் செய்யுங்கள்'' என்றார் எரிச்சலுடன்.

''சிதம்பரம் பிள்ளையிடம் நீங்களே கொடுங்கள், அப்பா!'' என்றார் சாமிநாதன்.

''அதை நீயே செய்'' என்று சற்று வெறுப்புடன் கூறிப் பணத்தை நீட்டிக்கொண்டிருந்தார் நெல்லையப்ப பிள்ளை. இதைப் பார்த்துச் சிதம்பரம் பிள்ளை மனத்துக்குள் சிரித்துக் கொண்டிருந்தார். எழுதிக்கொண்டிருந்த கவிஞர் தலைநிமிர்ந்து பார்த்தார். என்ன நினைத்தாரோ, திடீரென்று எழுந்து சென்று நெல்லையப்ப பிள்ளையின் கையிலிருந்த பணத்தை வெடுக்கென்று பிடுங்கிச் சிதம்பரம் பிள்ளையிடம் கொடுத்தார். பிறகு கடகடவென்று சிரித்தார். நெல்லையப்ப பிள்ளை திகைத்து நின்றார்.

''பிள்ளைவாள்! வெள்ளைக்காரன் ஆட்சியில் எவ்வளவு கோழையாகி விட்டோம்!'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார், கவிஞர். சிரிப்பில் வெறுப்பு, கோபம், துக்கம் அனைத்தும் கலந்து அந்த இடத்தை ஆட்கொண்டன.

''பணத்தைப் பற்றிக் கவலையில்லை. பின்னால் சங்கடம் ஏதும் வந்துவிடக் கூடாது'' என்றார் நெல்லையப்ப பிள்ளை.

''சங்கடப்படாமல், துன்பமே இல்லாமல் வாழ்ந்துவிட முடியுமா? சீக்கு வந்து படுக்கையில் விழுந்து, நாறிச் சாவதைவிட ஒரு துணிவான பணியில் இறங்கிப் பலியாவது எவ்வளவோ புனிதமானது'' என்றார் கவிஞர்.

நெல்லையப்ப பிள்ளைக்கு நன்றி செலுத்தி விட்டுச் சிதம்பரம் பிள்ளை எழுந்தார். கவிஞர் கீழே அவிழ்ந்து கிடந்த தலைப்பாகைத் துணியை எடுத்துத் தூசியை உதறி விட்டுத் தலையில் தலைப்பாகை கட்டிக் கொண்டு, சிதம்பரம் பிள்ளையைப் பின்தொடர்ந்தார். வாசலில் வந்து வழியனுப்பியபோது நெல்லையப்ப பிள்ளையின் கையில் கவிஞர் தம் கையிலிருந்த தாளைத் திணித்தார்.

''பிள்ளைவாள்! தைரியமாக இருங்கள்! பயந்து பயந்து சாகாதீர்கள்'' என்று கூறிவிட்டுத் தெருவில் இறங்கிச் சிதம்பரம் பிள்ளையைத் தொடர்ந்து கம்பீரமாக நடந்து சென்றார். அவர்களைத் தொடர்ந்து சாமிநாதனும் சென்று விட்டார். தனியே வாசல் நடையில் நின்றவாறு அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார் நெல்லையப்ப பிள்ளை. ஏதோ ஒரு பயங்கரக் கனவிலிருந்து விடுபட்டதைப் போன்ற உணர்வு. கையில் கவிஞர் கொடுத்த தாள் இருந்தது. நடையில் நின்றவாறே, அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதியிருந்ததை வாசித்தார். அதில் எழுதியிருந்தது இதுதான்:

''நெஞ்சு பொறுக்குதில்லையே! - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே....''

''சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டு ஒருவன் - வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிவார்...''

தொடர்ச்சியாக இல்லாமல் தனித் தனியாக அமைந்திருந்த அந்தக் கவிதைகளைத் திரும்பத் திரும்பப் படித்தார் நெல்லையப்ப பிள்ளை. படிக்கப் படிக்க அவருக்கு நெஞ்சு விம்மியது. கவிதைக்கு அடியில் இருந்த பெயரைக் கூர்ந்து கவனித்தார். 'சுப்பிரமணிய பாரதி' என்று கவிஞர் கையெழுத்திட்டிருந்தார். ஒரு நொடியில் தம்மை எடை போட்டு விட்டாரே பாரதியார் என்ற நினைவில் கூனிக் குறுகிப் போனார் நெல்லையப்ப பிள்ளை. தம் மகனாவது வீரத்தோடு இருக்கிறானே என்ற எண்ணம்தான் அந்தச் சமயத்தில் அவருக்கு ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் உள்ளத்தில் பயத்தின் சாயல் மறையவில்லை.

எந்தச் சமயத்திலும் தம் மகனுக்கு எதுவும் நேரலாம் என்ற பயத்தோடுதான் அப்போது காலத்தைக் கடத்தினார். கிட்டத்தட்ட முப்பத்தி மூன்றாண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் நட்ட நடுத் தெருவில் அவர் கண் முன் நிகழ்ந்த நிகழ்ச்சி இன்னும் அவர் நினைவில் பசுமையாக இருந்தது.

அப்போது சாமிநாதனுக்குப் பதினெட்டு வயது. படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டுச் சிதம்பரம் பிள்ளையுடனேயே சுற்றிக் கொண்டிருந்தார். மகனின் சுதந்திர தாகத்திலும் துணிச்சலிலும் நெல்லையப்ப பிள்ளைக்கு வெறுப்பில்லை. ஆனால் அந்த இயக்கத்தில் தம் மகனை இழக்க நேரிட்டு விடுமோ என்ற பயம்தான் அவரைச் சூழ்ந்திருந்தது. தம் மகனைச் சிதம்பரம் பிள்ளைதான் கெடுக்கிறார் என்று எல்லாரிடமும் குறை கூறிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் மத்தியானம் அம்பாசமுத்திரத்தில் நெல்லையப்ப பிள்ளையும், சாமிநாதனும் இருந்தபோது, தூத்துக்குடியிலிருந்து ஒருவன் வந்தான்.

''பிள்ளையவர்களைத் திருநெல்வேலி கலெக்டர் கூப்பிட்டிருக்கிறார். நாளை திருநெல்வேலியில் உங்களை எதிர்பார்ப்பதாகப் பிள்ளையவர்கள் சொல்லியனுப்பியிருக்கிறார்'' என்று தகவல் கொடுத்தான். சாமிநாதன் துள்ளி எழுந்தார்.

''கலெக்டரைச் சிதம்பரம் பிள்ளை சந்திக்கக்கூடாது. அவரைக் கைது செய்யத்தான் இந்தச் சூழ்ச்சி'' என்று பதறினார் சாமிநாதன்.

''கலெக்டரைச் சந்திப்பது என்று முடிவு செய்து விட்டார்கள். கூடவே சுப்பிரமணிய சிவாவும் வருகிறார். உங்களை நெல்லை ரயிலடியில் சந்திப்பதாகக் கூறியிருக்கிறார்கள்'' என்றான் வந்தவன்.

சாமிநாதன் பயணத்துக்கு ஆயத்தமானார். நெல்லையப்ப பிள்ளை பதறினார்.

''சிதம்பரம் பிள்ளை கலெக்டரைச் சந்தித்தால், சந்தித்துவிட்டுப் போகட்டும். அதற்கு என் மகன் என்ன துணையா? இவன் வரமாட்டான்'' என்று இரைந்து கத்தினார் நெல்லையப்ப பிள்ளை.

''அப்பா! இது முக்கியமான விஷயம். சிதம்பரம் பிள்ளைக்கு எதிராக அரசாங்கத்தில் ஏதோ சதி நடக்கிறது'' என்று தவித்தார் சாமிநாதன்.

''ஆமாண்டா. அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அரசனைப் பகைத்தவன் அமைதி

யோடு இருக்க முடியுமா? அவர் தலைவிதி எப்படியோ? இந்த வம்பெல்லாம் நமக்கு எதற்கடா? திருநெல்வேலிக்கு நீ இப்போது போகக் கூடாது'' என்று தடுத்தார் நெல்லையப்ப பிள்ளை.

''சிதம்பரம் பிள்ளைக்கு ஆபத்து வந்திருக்கும்போது நான் வீட்டுக்குள் அடைந்து கிடக்க முடியாதப்பா'' என்று உறுதியாகக் கூறிவிட்டார் சாமிநாதன். அவரை இனித் தடுக்க முடியாது என்று தெரிந்து விட்டது. ஆகவே, நெல்லையப்ப பிள்ளை தாமும் சாமிநாதனுடன் புறப்பட்டு விட்டார்.

''நீங்கள் எதற்காக வருகிறீர்கள்?'' என்று சாமிநாதன் கேட்டார்.

''உன்னை அங்கு அனுப்பிவிட்டு நான் மட்டும் இங்கே தனியே வீட்டுக்குள் அடைந்து கிடக்க முடியுமா?'' என்று கூறிக்கொண்டே நெல்லையப்ப பிள்ளையும் புறப்பட்டுவிட்டார்.

மறுநாள் இருவரும் திருநெல்வேலி ரயிலடியில் காத்து நின்றார்கள். ரயில் வண்டியிலிருந்து சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் இறங்கியதும், அவர்களை எதிர் நோக்கி விரைந்தார் சாமிநாதன்.

''தம்பி, கலெக்டரைப் பார்க்கப் போகிறேன்'' என்றார் சிதம்பரம் பிள்ளை.

''இன்று போக வேண்டாம். உங்களைச் சிறையில் அடைக்கத்தான் இந்தச் சதி'' என்றார் சாமிநாதன்.

''அடைக்கட்டுமே. அதன் பிறகாவது மக்களுக்கு உணர்ச்சி வராதா?'' என்றார் சுப்பிரமணிய சிவா.

''தம்பி! தைரியமாக இரு. கலெக்டரைச் சந்திப்பது என்றே முடிவு செய்துவிட்டோம். அவரைச் சந்திக்காமல் இருந்து விட்டால் நம்மைச் சிறைப்படுத்தாமல் விட்டுவிடுவாரா, என்ன? நடப்பது நடக்கட்டும்'' என்றார் சிதம்பரம் பிள்ளை.

சிதம்பரம் பிள்ளையையும் சுப்பிரமணிய சிவாவையும் அனுப்பிவிட்டுச் சாமிநாதனும் நெல்லையப்ப பிள்ளையும் தாங்கள் தங்கியிருந்த சத்திரத்தை நோக்கி நடந்தார்கள்.

''பிடிவாதக்காரர்களாயிருக்கிறார்களே'' என்றார் நெல்லையப்ப பிள்ளை.

''என்ன நடக்குமோ தெரியவில்லையே?'' என்று மிகுந்த வேதனையுடன் கூறினார் சாமிநாதன்.

''எனக்கு என்னவோ இவர்கள் சொல்வது சரியாகத் தோன்றவில்லை'' என்று இழுத்தார் நெல்லையப்ப பிள்ளை.

''பின்னே எப்படித்தான் வெள்ளைக்காரனை விரட்ட முடியும்?'' என்று சலிப்புடன் எரிந்து விழுந்தார் சாமிநாதன்.

மகனின் கோபத்தைக் கண்டு மௌனமானார், நெல்லையப்ப பிள்ளை. அவருடைய மனத்தில் பயம் புகுந்து உறுத்திக்கொண்டேயிருந்தது.

ஃ ஃ ஃ

அன்று மாலை மூன்று மணியாகியும் சிதம்பரம் பிள்ளையும், சிவாவும் திரும்பாதது கண்டு உண்மையை அறிந்துகொள்ள கலெக்டரின் அலுவலகத்துக்கு விரைந்தார் சாமிநாதன். அவரைத் தொடர்ந்து நெல்லையப்ப பிள்ளையும் சென்றார். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று அவர் மனத்தில் தோன்றி விட்டது. மகனை நிழலைப் போல் தொடர்ந்தார். கலெக்டரின் அலுவலகத்தை அடைந்ததுமே உண்மை புலனாகி விட்டது.

சிதம்பரம் பிள்ளைக்கும் கலெக்டர் விஞ்ச் துரைக்கும் கடுமையான வாக்கு வாதம் நடந்ததாம். பிறகு சிதம்பரம் பிள்ளையையும், சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்ய கலெக்டர் உத்தரவிட்டாராம்.


இந்தச் செய்தியைக் கேட்டுத் திகைத்து நின்றார் சாமிநாதன். திடீரென்று ஆவேசம் வந்தவரைப் போல் தெருவில் நடந்தார். நெல்லையப்ப பிள்ளை பதறியடித்துக்கொண்டு தொடர்ந்து வந்தார்.

''நாம் ஊருக்குப் போய் விடலாம். அவர்களைக் கைது செய்த பிறகு இங்கிருந்து என்ன செய்ய?'' என்றார் நெல்லையப்ப பிள்ளை.

''என்ன செய்யவா? இந்த ஊர் முழுவதையும் திரட்ட வேண்டும். பழி வாங்க வேண்டும்'' என்று கத்தினார் சாமிநாதன்.

''நமக்கு எதுக்கடா இந்த வம்பு? சொன்னால் கேளு'' என்று கெஞ்சிக்கொண்டே பின்னால் ஓடிவந்தார் நெல்லையப்ப பிள்ளை. சாமிநாதனோ வெறிகொண்டவரைப் போல் அலைந்தார். எல்லா இடங்களிலும் செய்தியைப் பரப்பினார். திருநெல்வேலி நகரையே கொதித்து எழும்படி செய்து விட்டார்.

மறுநாள் ஊர் முழுவதும் ஒரே பரபரப்பு. கடைகள் மூடப்பட்டு விட்டன. ஆத்திரம்



இந்தப் பாக்கியத்தைப் பெற்ற சிறுமி யார்?

மானிலத்தை வாழ்விக்க வந்த மகாத்மாவின் அருகிலே அமர்ந்திருக்கும் சின்னஞ் சிறுமி யார் என்று தெரிகிறதா? அன்போடு அவள் கரம் பற்றியிருக்கும் மகாத்மாவின் அருகிலே அமரும் பாக்கியம் பெற்ற சிறுமி யார் என்று சிந்தித்துப் பாருங்கள். புரியவில்லையென்றால் 35ம் பக்கம் புரட்டிப் பாருங்கள். உடனே தெரிந்து விடும்!

கொண்ட மக்கள் பழிதீர்க்க முனைந்துவிட்டனர். போலீஸ் ஸ்டேஷன் தீக்கிரையாகியது. நகரசபை ஆபீஸ் கொள்ளை போயிற்று. மண்ணெண்ணெய்க் கிடங்கு பற்றி எரிந்தது. எங்கும் குழப்பம், வெறி, பழி வாங்கும் ஆவேசம்!

கட்டு மீறிய கூட்டத்தில் உறுமிக் கொண்டு சிங்கத்தைப் போல் காணப்பட்டார் சாமிநாதன். உடல் நடுங்கப் பயத்தோடு அவரைத் தொடர்ந்தார் நெல்லையப்ப பிள்ளை. கூட்டம் தெப்பக்குளத்தை நெருங்கி விட்டது. அப்போது கலெக்டராக இருந்த விஞ்ச் துரையும், சப்-கலெக்டராக இருந்த ஆஷ் துரையும் போலீஸ் படையுடன் வந்து சேர்ந்தார்கள். போலீசைக் கண்டதும் நெல்லையப்ப பிள்ளைக்குத் தலை சுற்றியது.

''சாமிநாதா! போலீஸ் வந்துவிட்டது. துப்பாக்கி வேறு வைத்திருக்கிறார்கள். போய் விடலாம் வா'' என்று பதறினார்.

''என்னதான் செய்துவிடுவான் பார்க்கலாம்'' என்று உறுமினார் சாமிநாதன்.

கூட்டம் முன்னேறியது.

''அப்படியே நில்லுங்கள். யாரும் ஓர் அடி கூட முன்னேறக் கூடாது'' என்று ஆங்கிலத்தில் அலறினான் ஆஷ் துரை. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் அதையே தமிழில் அலறினார். ஆனால் அதை யாரும் லட்சியம் செய்யவில்லை.

''வந்தே மாதரம்'' என்று உரக்கக் கத்தினார் சாமிநாதன். அது ஒரு மந்திரச் சொல் போல் அனைவரின் காதுகளிலும் போய் மோதியதும் கூட்டத்தில் வெறி கிளம்பி விட்டது. இந்தச் சமயத்தில் கூடியிருந்த சுமார் ஐயாயிரம் பேர்களும் ''வந்தே மாதரம்'' என்று ஒரே குரலாகக் கோஷமிட்டார்கள். அந்தக் கோஷத்தின் அதிர்ச்சியைத் தாங்காமல் நிலைகுலைந்தார்கள் வெள்ளைக்கார அதிகாரிகள். சப்-கலெக்டர் ஆஷ், கூட்டத்தை வெறித்துப் பார்த்தான். கள் குடித்தவன் மாதிரி அவன் கண்கள் சிவந்திருந்தன. கோபத்தால் அவன் உடல் சிறிது நடுங்கியது. இடுப்பில் தொங்கிய கைத் துப்பாக்கியை உறையிலிருந்து உருவினான்.

''பாரத மாதாவுக்கு....'' — சாமிநாதன் முழக்கமிட்டார். ''ஜே!....'' — கூட்டம் எதிரொலித்தது.

கூட்டத்தினரின் உற்சாகம் அளவுகடந்து விட்டது. திடீரென்று ஆஷ் தன் கைத் துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கிச் சுட்டான். முன்னணியில் நின்ற முஸ்லிம் இளைஞன் சுருண்டு இரத்த வெள்ளத்தில் விழுந்தான். என்ன நடந்து விட்டது என்பதே புரியாமல் பலர் திகைத்து நின்றனர். புகைந்து கொண்டிருந்த துப்பாக்கியுடன் வெறி பிடித்து நின்றான் ஆஷ். கூட்டத்தில் பீதி புகுந்து கொண்டது. மக்கள் நாலாபுறமும் சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.

''ஓடாதீர்கள். நில்லுங்கள். வந்தே மாதரம்....'' என்று கத்தினார் சாமிநாதன். ஓடும் கூட்டம் சிறிது நின்றது. ''வந்தே மாதரம்'' என்று பதிலுக்குக் கூட்டத்திலிருந்து கோஷம் கிளம்பியது. இந்தக் கோஷத்தைத் தன் மீது விழுந்த சாட்டையாக உணர்ந்தான், ஆஷ். பக்கத்தில் நின்ற கலெக்டர் விஞ்ச் துரையிடம் ஏதோ கூறினான். உடனே விஞ்ச், தன் கைத் துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கிச் சுட்டான். ''வந்தேமாதரம்'' என்று கூவிக் கொண்டு ஒரு வாலிபன், தலையிலிருந்து இரத்தம் பொங்கி வழியக் கீழே சாய்ந்தான். மக்கள் அலறினார்கள். வெள்ளைக்காரர்கள் பேய்போலச் சிரித்தார்கள்.

நெல்லையப்ப பிள்ளைக்குப் பயத்தால் உடல் நடுங்கியது. சாமிநாதனின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஒரு சந்துக்குள் ஓட முயன்றார். ஆனால் சாமிநாதன், அவரை மீறிக் கொண்டு கூட்டத்துக்குள் பாய்ந்தார். கலெக்டர், கூட்டத்தை நோக்கி மீண்டும் கைத் துப்பாக்கியை நீட்டினான். சாமிநாதன் ஆவேசம் கொண்டு தமக்குப் பக்கத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்துக் குறி பார்த்து வீசினார். விஞ்ச் துரையின் காதைப் பதம் பார்த்து விட்டது, அந்தக் கல்! ஏற்கனவே சிவந்திருந்த அந்த வெள்ளையனின் முகம் காதிலிருந்து வழிந்த இரத்தத்தால் இன்னும் கோரமாகக் காட்சி தந்தது. இதைக் கண்டதும் ஆஷ், வெறி பிடித்தவனாகி விட்டான். கண் மூடித்தனமாகக் கூட்டத்தை நோக்கிச் சுட்டான். நல்ல வேளையாக அவனுடைய துப்பாக்கியில் இரண்டு குண்டுகள்தாம் இருந்தன. அந்த இரண்டும் இரண்டு நெல்லைவாசிகளின் உயிரைப் பறித்து விட்டன. இதற்குள் போலீசும் வெறி கொண்டு தாக்கவே, கூட்டம் சிதறி ஓடியது. நெல்லையப்பபிள்ளை, பதறிப் போய்ச் சாமிநாதனைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு சந்து வழியாகத் தலை தெறிக்க ஓடினார்.

சத்திரத்துக்கு வந்ததும் இருவரும் உணர்ச்சிப் பெருக்கால் நிலைகுலைந்து இருந்தனர். கண் முன்பே மனித வேட்டையைக் கண்ட நெல்லையப்ப பிள்ளை, பீதியினால் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தார். கூட்டத்தில் நான்கு பேர்கள் குண்டடிபட்டுச் செத்து விழுந்த காட்சி, அவர் மனத்தில் ஆழப் பதிந்து விட்டது. பயத்தினால் அவர் உடல் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டேயிருந்தது.

சாமிநாதனோ கோபத்தின் கொந்தளிப்பில் மூழ்கிக் கிடந்தார். ஆஷ் துரையின் வெறிச் செயல், அலட்சியப் போக்கு அனைத்தையும் எண்ணிக் கொதித்தார். நான்கு பேர்கள் பலியானதை நினைத்துப் பொருமினார். பழி வாங்கும் உணர்ச்சி மேலோங்கியது. அடிபட்ட புலியைப் போல் சத்திரத்துக்குள் உலவிக் கொண்டிருந்தார். உடனே ஊருக்குத் திரும்பி விடத் துடித்தார், நெல்லையப்ப பிள்ளை. அதைச் சாமிநாதனிடம் சொல்லவும் அவருக்குப் பயம்.

''அந்த வெள்ளைத்தோல் பரங்கியைப் பழி வாங்காமல் விட்டு விடுவதா?'' என்று முனகிக் கொண்டேயிருந்தார் சாமிநாதன்.

மறு நாள் காலை தூத்துக்குடியிலிருந்து வந்த செய்தி சாமிநாதனைத் திகைக்க வைத்தது. திருநெல்வேலியில் சுட்டுவிட்டு அன்று மத்தியானமே தூத்துக்குடி சென்றுவிட்ட ஆஷ், மாலையில் தூத்துக்குடியில் வண்டிப்

பேட்டைப் பக்கம் பொதுக் கூட்டம் நடத்த மக்கள் செய்திருந்த ஏற்பாட்டைத் தகர்க்க முனைந்து, வண்டிப் பேட்டையில் கூடியிருந்த கூட்டத்தை இரக்கமின்றித் துப்பாக்கி முனை யில் கலைத்தானும் !

இந்தச் செய்தியைக் கேட்டுப் பற்களை நறநறவென்று கடித்தார் . சாமிநாதன். கோபத்தின் உக்கிரம் தாங்காமல் அவருக்கு அழுகையே வந்து விட்டது.

''எங்களையெல்லாம் வெறும் நாய்களாக நினைத்து விட்டானு அந்தப் பரங்கிப் பயல்? வெள்ளையனுக்கு நாசகாலம் நெருங்கி விட் டது'' என்று கத்தினுர்.

ரயிலடியில் சுப்பிரமணிய பாரதியாரைச் சந்தித்தார். அவரை அழைத்துக் கொண்டு சத்திரத்துக்கு வந்தார். பாரதியாரைப் பார்த்ததும் நெல்லையப்ப பிள்ளைக்குப் பகீ ரென்றது. இந்த முரட்டுக் கவி எதையாவது விபரீதமாகச் செய்து வம்பை இழுத்து விடுவாரோ என்று பயந்தார். மகனும் பாரதியாரும் பேசிக்கொண்டிருந்த அறையை விட்டு வெளியே சென்று, பக்கத்து வராந்தாவில் போய் அமர்ந்து கொண்டு உள்ளே நடந்த பேச்சை உன்னிப்பாகக் கவனித்தார்.

சிதம்பரம் பிள்ளையின் கைதும், முந்தின நாள் நடந்த சம்பவமும் சாமிநாதனை அளவுக்கு மீறிப் பாதித்து விட்டன. பாரதியாரிடம் நடந்தவற்றைக் கூறியபோது 'ஓ'வென்று அழுது விட்டார். வாஞ்சை யோடு சாமிநாதனை அணைத்துக் கொண்டார் பாரதியார்.

''நீ கண்ட காட்சிகள் உன்னை எவ்வளவு தூரம் பாதித்து விட்டன'' என்ருர் பாரதி யார் இரக்கத்துடன்.

''அவ்வளவு அலட்சியமாக அற்ப ஜந்துக் களைக் கட்டுப் பொசுக்குவது போல் கட் டானே, வெள்ளைக்காரன்'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினுர் சாமிநாதன்.

''அழக்கூடாது, தம்பி, அழக் கூடாது. இது அழ வேண்டிய கட்டமல்ல. திருநெல் வேலியில் தோன்றிய இரத்தக் கறை, லண்டன் நகரத்தில் படியும் சம்பவம் இது. இந்தக் கறை, வெள்ளைக்காரனின் சொப்ப னத்திலும் தோன்றி அலற வைக்கும். மக்கள் தூங்கவில்லை. எழுந்து விட்டார்கள். நம்மையெல்லாம் பன்றியாக, நாயாக அல் லவா நினைத்துவிட்டான் வெள்ளைப் பரங்கிப் பயல்'' என்று கோபத்தோடு கூறித் தரையை அழுத்தமாக உதைத்தார் பாரதியார். பிறகு சொன்னுர்: ''சிதம்பரம்பிள்ளை, இந்த மண் ணில் இந்த அளவுக்குச் சுதந்திரத் தீயை மூட்டி விட்டிருக்கிருரே! அதை நினைத்தால் என் உடல் எல்லாம் சிலிர்க்கிறது.''.

''வெள்ளைக்காரப் பயலுடன் கடுமை யாக வாதம் செய்தாராம்'' என்ருர் சாமி நாதன்.

''சிதம்பரம் பிள்ளை பேச்சிலும் மகா சூரர் தாம். பேசியிருப்பார். வெள்ளைக்காரனின் மானமே கப்பலேறும்படி பேசியிருப்பார். தம்பி, ஒரு பாட்டுத் தோன்றுகிறது சொல்லு கிறேன்; எழுது'' என்ருர் பாரதியார். சாமிநாதன் தாளையும் பென்சிலையும் எடுத் தார். பாரதியார் சொன்னுர் :

''நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினுய் கனல் மூட்டினுய்
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி காட்டுவேன்....

இப்படித்தான் பிள்ளையவர்களைப் பார்த் துச் சொல்லியிருப்பான் அந்தப் பரங்கி...சரி, இன்னும் எழுது....

கூட்டம் கூடி வந்தே மாதரம் என்று
கோஷித்தாய் எமைத் தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்கவென்றே கப்பல்
ஓட்டினுய் பொருள் ஈட்டினுய்....

கொடுத்து வைத்திருந்தது இவருக்குத்தான்!



மகாத்மாவின் அருகில் இருக்கும் பாக்கியம் பெற்ற அச்சிறுமி இன்று பாரதத்தின் பிரதம மந்திரியாக விளங்கும் ஸ்ரீமதி இந்திராகாந்தி.

லால்பகதூர் தாஷ்கெண்டில் வீர மரணம் எய்தியபின் அடுத்தபடி யார் பிரதம மந்திரி என்ற பிரச்னை எழுந்தது. மொரார்ஜியா, இந்திரா காந்தியா என்று பலப் பரீட்சை நிகழ்ந் தது. போட்டி முடிந்து வெளியே வந்த பார்லி மெண்ட் அங்கத்தினர் ஒருவரிடம், கூட்டத்தி லிருந்த ஒருவர், ''ஆணு பெண்ணு?'' என்ற கேள்விக் குரலை எழுப்பினுர். ''பெண்தான்!'' என்று புன்னகை பூத்தபடியே நவின்றுவிட்டு நகர்ந்தார் மற்றவர். பிரதமர் பிறந்த கதைஇது!

இளைஞ்சிறு வயதிலேயே சிறுமி இந்திரா வுக்கு மற்றக் குழந்தைகளோடு விளையாடவோ, பொம்மைகளோடு விளையாடவோ பிடிக்காது. கூடியிருக்கும் வேலைக்காரர்களுக்கு மத்தியில் மேஜை மேல் நின்று சொற்பொழிவாற்றுவது அவர் பொழுதுபோக்காக இருந்தது!

சற்று நிறுத்தினர், பாரதியார். நெற்றிப் பொட்டைத் தடவினர். அண்ணாந்து முகட்டைப் பார்த்தார். தலைப்பாகையைக் கழற்றிக் கீழே வைத்து விட்டுத் தலையைத் தடவிக் கொடுத்தார்.

''கட்டு விழுந்திடவே புத்தி வருந்திடச்
சொல்லுவேன் குத்திக் கொல்லுவேன்
தட்டிப் பேசுவாருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் பழி கொள்ளுவேன்....

பரங்கிப் பயல் நினைத்ததைச் சாதித்துவிட்டான்'' என்றார் பாரதியார். அவர் சொன்னதை எழுதிவிட்டுத் தலை நிமிர்ந்த சாமிநாதன்; ''என் கையில் மட்டும் அப்போது துப்பாக்கி இருந்திருந்தால், பழி தீர்த்திருப்பேன். எனக்கிருந்த ஆவேசத்தில் ஆஷ் பக்கத்தில் போய் அவனைக் கீழே தள்ளிக் காலால் மிதிக்க வேண்டும் போலிருந்தது. அப்பாதான் என்னைப் பார்த்து இழுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டார்கள்'' என்றார் பரிதாபத்துடன்.

பாரதியார் மேலும் சொல்லத் தொடங்கினர்:

''சதையைத் துண்டு துண்டாக்கினும் என் எண்ணம்
சாயுமோ ஜீவன் ஓயுமோ
இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ நெஞ்சம் வேகுமோ....

தம்பி, இந்தப் பாட்டில் உணர்ச்சி இருக்கிறதோ இல்லையோ, சிதம்பரம்பிள்ளையின் பேச்சில் அனல் தெறித்திருக்கும். அதில் பொசுக்கியிருப்பான் விஞ்ச் துரை'' என்று கூறிப் பயங்கரமாகச் சிரித்தார் பாரதியார். சாமிநாதன் எழுதிய தாளை வாங்கி மடித்துத் தம் பைக்குள் போட்டுக் கொண்டு தலைப்பாகை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

''தம்பி! சிதம்பரம் பிள்ளையை எப்படியும் விடுதலை அடையும்படி செய்துவிட வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்றிரவே கட்டாயப்படுத்திச் சாமிநாதனை அம்பாசமுத்திரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்விட்டார் நெல்லையப்ப பிள்ளை.

* * *

முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவம் நெல்லையப்பபிள்ளையின் மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. பழைய காலத்து நினைவுகளில் ஆழ்ந்து விட்ட கிழவர், திடீரென்று என்ன நினைத்தாரோ, பக்கத்தில் படுத்திருந்த பேரனைத் தொட்டுப் பார்த்தார். பிறகு சிரித்துக் கொண்டார்.

''என்ன தாத்தா? நான் எங்கேயாவது போய் விட்டேனோ என்று பார்க்கிறீர்களா? எங்கும் போய்விட மாட்டேன்'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

'' உன் அப்பனும் இப்படித்தான் சொன்னான். திடீரென்று போய் விட்டான்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் கிழவர்.

''தூங்காமல் எதை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ?''


''உன் அப்பனைப் பற்றித்தான். கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன் என்றான். செக்கிழுத்த தியாகி சிதம்பரம் பிள்ளை இருந்தாரே அவருக்கு அப்போது ஆறு வருஷச் சிறைத் தண்டனை கிடைத்தது. அவர் விடுதலை ஆன பிறகுதான் கலியாணம் செய்து கொள்வேன் என்றான். அவர் விடுதலை ஆகி வந்த பிறகும் நாளைக் கடத்தினான். பிறகு சிதம்பரம்பிள்ளையே கண்டித்துச் சொன்ன பிறகு கலியாணத்துக்குச் சம்மதித்தான். பிறகாவது இருந்தானா? காந்தி பெயரைச் சொல்லிக் கொண்டு திரிந்தான். அவனைத் தொட்ட பாவத்துக்கு உன்னைப் பெற்றுவிட்டு ஒரு வருஷத்துக்குள் அந்தப் புண்ணியவதி போய்ச் சேர்ந்தாள். நான் இருந்து அனுபவிக்கிறேன் நரகத்தை !'' என்றார் கிழவர்.

'' இப்போது என்ன வந்து விட்டது, உங்களுக்கு?''

''நீ கலியாணம் பண்ணிக் கொள்- எனக்கு வேண்டியது அவ்வளவுதான்.''

''நான்தான் சொல்லிவிட்டேனே, நாடு விடுதலை அடைந்த பிறகுதான் என்று!''

''சரிதாண்டா, விடுதலையும் நீயும்....அலை ஓய்ந்த பிறகு நீந்த நினைத்த மாதிரிதான். எல்லாம் என் தலைவிதி'' என்று முனகிவிட்டு மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார் நெல்லையப் பபிள்ளை. (தொடரும்)







சென்னை மியூசிக் அகாடமி சங்கீதப் போட்டியில் பேராசிரியர் கல்கி நினைவுத் தம்புராப் பரிசைத் திரு ஆர். வேங்கடசாமி நாயுடுவிடமிருந்து பெறுகிறார் குமாரி கருணா.



▲

ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்களிடமிருந்து ஆசிரியருக்கான தேசிய விருதைக் கடையம் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ டி. கே. ஷண்முகசுந்தர முதலியார் பெறுகிறார்.

★

◄ மதுரையில் ஜனவரி 1ந் தேதி தமிழ்நாடு சுதந்திரக் கட்சியின் மூன்றாவது மகாநாடு அதி விமரிசையாக நடைபெற்றது.

பாரதியாரின் 85 வது பிறந்த தின விழா கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. இருபத்தைந்து வங்காளி, ஹிந்தி, குஜராத்தி, மராத்தி இலக்கிய அமைப்புக்கள் இவ்விழாவில் பங்கு கொண்டது அமரகவி பாரதியாரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தது. மத்திய அரசாங்க செய்தித் துறை அமைச்சர் தொடங்கி வைக்க, மத்திய அரசாங்க சட்ட அமைச்சர் திரு வி. ஆர். பட்டாபிராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள, டாக்டர் சுநீத்குமார் சட்டர்ஜி தலைமை தாங்க விழா மிகச் சிறப்பாக நடந்தது.



அத்தியாயம் 2

நூல் ஏணி

இதழ்கள் வறண்டு சொல்லற்ற நிலையிலே நின்ற கணவனுக்குப் பொன்மணி பழச்சாறு தருவது உண்மை! ஆனால் அவன் எதிர்பார்த்து நின்றது எது?

கரங்களை நோக்கினான்; பானகம் கிடைத்தது. ஒரு பெண்ணின் அன்புக்குக் காத்திருந்தான். ஆனால் இன்னொரு வீர விளையாட்டு அல்லவா இப்போது குறிக்கிடுகின்றது !

''ஏன் இப்படித் திகைப்போடு பார்க்கிறீர்கள்? ஏன் உங்களுடைய வீர விழிகள் இப்படிக் கலங்குகின்றன ? ஐயோ, உங்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேனா? கருணை கூர்ந்து என்னை மன்னியுங்கள்!''

சொற்கள் பதறியவாறு இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதாள் பொன்மணி! வானத்தில் நின்ற நிலவும் மேகக் கூட்டங்களும் ஒரு விநாடி தங்கள் இயக்கங்களையே மறந்து நின்றன, புதிய மணமக்களின் அந்த முதல் இரவு நிகழ்ச்சியைக் கண்டு திகைத்து !

''பொன்மணி! ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்லிவிடு! பிறகு நீ என்னை எது செய்யச் சொன்னாலும் செய்து முடிக்கிறேன். ஒரே ஒரு சிறு ஐயத்துக்கு மட்டும் தெளிவு கொடுத்து விடு. பிறகு உன் உரிமைக்காக நான் மாதங்கள் அல்ல, ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்





இருப்பேன். உன் அழகின் மீது, உன் புகழ்பெற்ற கோசர் குலத்துப் பெருமையின் மீது ஆணையாகச் சொல். என்னை மணந்ததில் உனக்கு எள்ளத்தனையும் கசப்பு இல்லையே; இம்மியளவும் மனக் கலக்கம் இல்லையே?''

''ஐயய்யோ! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்! அப்படிப்பட்ட ஓர் உணர்ச்சி எனக்கு இருக்குமானால் அது என்னைச் சாம்பலாக்கி விடும்! ஐயோ, இன்னொரு முறை அவ்வாறு சொல்லாதீர்கள்! எங்கள் கோசர் குலத்தின் பெருமையையே நீங்கள் தான் மீண்டும் நிலைநாட்டப் போகிறீர்கள் என்று அல்லவா ஆசையோடு கனவு காண்கிறேன் நான்! உங்களை அடைந்ததில் வெறுப்பா கசப்பா! என்ன விபரீதச் சொற்கள்! கோசர் குலத்தின் நற்காலம் என்றல்லவா உள்ளம் களிப்படைகிறேன்!''

பொன்மணியின் விழிகள் கலங்கின. அந்த முகத்திலே துலங்கிய மெய்யுணர்வு அழலாடியின் விழிகளிலே தீபம் ஏற்றியது!

''பொன்மணி, இந்த விநாடிதான் என் உள்ளம் அமைதி பெற்றது. உன் அழகிலும்,

உன்னுடைய குண நலன்களிலும் ஆசை கொண்டவன் நான். பல முறை நான் பல பொது நிலையங்களிலே உன் தந்தையோடு உன்னைப் பார்த்ததுண்டு. ஏதேதோ கனவுகள் நானாகவே கண்டதுண்டு. கடைசியில் உன் பொருட்டு இப்படி ஒரு 'ஏறு கோள்' விளையாட்டு நடக்கப் போவது அறிந்ததும் என் உள்ளம் என்ன ஆட்டம் ஆடியது தெரியுமா? கலக்கத்தினால் அல்ல! நீயும் நானும் எங்கோ சோலையிலும், ஆற்றின் கரையிலும், மலை முகட்டிலும் பள்ளத்தாக்கிலும் ஒருவரையொருவர் சந்தித்து, மோகித்து, தந்தைக்கும் தாய்க்கும் தெரியாமல் ஓடிப் போய், பிறகு சமாதானம் ஆகி — இப்படியெல்லாம் மணப்பதைவிட வீரக் களத்திலே வீர விளையாட்டு விளையாடி என் ஆற்றலைப் பல பேருக்கு மெய்ப்பித்து, அதன் பிறகு உலகம் ஒப்புக் கொள்ளும் முறையில் உன்னை மணக்கக் கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறதே என்று களியாட்டம் ஆடினேன். உன்னை அடைவதற்காக அந்த ஒரு காளை மாடு மட்டுமில்லை, அங்கிருந்த அத்தனை காளைகளையும் சேர்த்து அமுக்கிப் பிடித்திருக்க வேண்டும் என்று சொன்னால்கூட அந்த வேகத்தில் ஒரே மூச்சில் சாதித்து மீண்டிருப்பேன். அப்படியெல்லாம் வீரத்தோடு கச்சை கட்டி நின்று வெற்றி பெற்றுக் கரமும் பற்றிய பிறகு, ஏறுகளைப் பிடித்தவனுக்கு ஒரு பெண் இதயம் பிடிபடவில்லை என்றால் எப்படியிருக்கும்! காளை மாட்டை வசமாக்கினேன், ஆனால் அதற்குரிய பெண்ணின் இதயந்தான் வசமாகவில்லை என்றால்—''

''ஐயோ மீண்டும் மீண்டும்....''

''இல்லை. இல்லை. நீ உறுதி சொல்லும் வரை, சற்று முன் வரை, அப்படி ஒரு வீணான கலக்கம் கொண்டு தடுமாறி விட்டேன். இனி அது ஒன்றும் இல்லை. மனம் தெளிவடைந்தது. நீ என்னுடையவள் என்பது, உலகத்துக்கு மட்டும் அல்ல, என் மனத்துக்கே இப்போது உறுதியாகி விட்டது. இனி இந்த உறுதியில் பதினொன்று உலகங்களையும் ஏழு கடல்களையும் சுருட்டிப் புரட்டிக் கொண்டு வா என்றாலும் இதோ ஆயத்தமாக நிற்கிறேன். வீண் தாமதம் இல்லாமல் உடனே சொல். நான் போர்வீரன். என் செயல் எல்லாம் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு. உன் அன்பு கிடைத்து விட்டது. அது போதும் எனக்கு! இனி உன் கண் இமைப்பில் செயல் நடக்கும்!''

அழலாடியின் சொற்களில் வீர உல்லாசம் எழுந்து விளையாடியது! அதைக் கேட்கக் கேட்கப் பொன்மணியின் உள்ளத்தில் பாற்கடல் பாய்ந்தது.

''அன்பே, புகழ் பெற்ற கோசர் குலத்தைப் பற்றிச் சொன்னீர்களே, அந்தக் குலத்துக்கும் துளு நாட்டுக்கும் ஏற்பட்ட வரலாற்றுப் புகழ் நிரம்பிய பகைமை உங்களுக்குத் தெரியும் அல்லவா?'' என்று கேட்டுக் கொண்டே சாய்ந்திருந்த நிலா இருக்கையை நிமிர்த்தி வைத்தாள் பொன்மணி. குறிப்பை உணர்ந்த அழலாடி அந்த இருக்கையிலே வந்து அமர்ந்துகொண்டு ''தெரியும்'' என்றான்.

அழலாடி அமர்ந்த இருக்கைக்கு அருகில் சற்றுச் சிறிய இருக்கை ஒன்றில் தான் அமர்ந்து கொண்டு பேச்சைத் தொடர்ந்தாள் பொன்மணி.

''எந்த நிகழ்ச்சியைச் சொல்கிறீர்கள்?''

''அதுதான். இப்போதுள்ள நன்னனுடைய முன்னோன் பெண் கொலை புரிந்த நன்னன் என்று பெரிய பெயர் எடுத்தானே அந்த நிகழ்ச்சிதானே. தன்னுடைய அடையாள மரமாகிய மாமரத்தின் கனியை, தண்ணீரில் மிதந்து போனதை, ஒரு பெண் எடுத்துத் தின்றுவிட்டாள் என்று அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தானாமே படுபாவி. அந்த நிகழ்ச்சியைத்தானே சொல்லுகிறாய்? அதுதான் — அந்த நிகழ்ச்சிதான் புலவர்கள் பாடக்கூடிய அளவுக்கு முக்கியம் பெற்று விட்டதே இந்த வட்டாரங்களில் — ''

''ஆமாம். அது யார் என்று நினைக்கிறீர்கள், அந்தப் பெண்?''

''யாரோ கோசர் தலைவனின் மகள் என்று கேள்வி. ஒரு தலைமுறை கடந்து விட்டதல்லவா? உறவு சரியாகத் தெரியாது எனக்கு!'' என்றான் அழலாடி.

''அன்பே, இது வரை அப்படியிருந்தது சரி. இனி மேல் யாரோ கோசர் மகள் என்றெல்லாம் பேசலாமா நீங்கள்? நானும் கோசர் மகள் தான் — மறந்து விட்டீர்களா?''

''கண்ணே உண்மை. நீ சொல்வது முற்றிலும் உண்மை. நேற்று வரை யாரோ கோசர் என்று நான் சொல்லலாம். இனி அப்படிச் சொல்லக்கூடாது. அதை உணர்கிறேன்!''

இவ்வாறு தீர்மானமாகச் சொன்னான் அழலாடி. பொன்மணி தொடர்ந்து சொல்லுவாள்.

''அன்பே, கோசர் குலத்தின் முதன்மையான கிளையில் தோன்றிய பெண்ணணங்கு நேரிழை. தகப்ப

ஸ்ரீஹரியின் சுற்றுப்பயணம்

டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் 25-1-67 மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு 26-1-67 திருவிதாங்கூர் போய்ச் சேருகிறார். அங்கு லக்ஷ்மி விலாசம் வாஞ்சியூர் திருவிதாங்கூர், என்னுமிடத்தில் தங்குகிறார். 31-1-67 மாலை அவ்விடமிருந்து புறப்பட்டு 1-2-67 மாலை சென்னை வந்து சேருகிறார்.

னுக்கு ஒரே மகன்! அவனுடைய கதி அவ்வாறு ஆனதும் தந்தை என்ன பாடு பட்டிருப்பார் என்று சொல்லவும் வேண்டுமா! பழிக்குப் பழி என்று துடித்தது அவருடைய உள்ளம். ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்! கொலை செய்தவனோ ஈவு இரக்கம் இல்லாதவன் என்பதோடு, நாட்டையே ஆள்கிற கொடுங்கோல் மன்னன்! துளு நாடு என்றால் யாரும் அஞ்சுகிற நிலை! மூவேந்தர்களுமே கலங்குகிறார்கள் என்றால் நேரிழையின் தந்தை என்ன செய்திருக்க முடியும். நெருங்கிய உறவினர்களை, சிற்றப்பன் பெரியப்பன் மக்களையெல்லாம் அழைத்து ஒன்று கூடிப் பேசினார். எல்லாரும் வஞ்சினம் எடுத்தார்கள். பழிக்குப் பழி என்றார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. கோசர் குலத்தைப் பிடித்த பழி இன்னும் துடைப்பார் இன்றி நிற்கிறது. ஒரு தலைமுறை சென்றோடி விட்டது. இப்போது நன்னன் மகன் அரசாண்டு வருகிறான். பழியும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது!''

இவ்வாறு சொல்லி நெட்டுயிர்ப்போடு நிறுத்தினாள் பொன்மணி. அழலாடி கேட்டான்:

''நேரிழையின் தந்தை கடைசி நாட்களில் துளு நாட்டில் இருக்கவில்லையோ?''

''இல்லை. இந்த முல்லைமூதூருக்கு வந்து எங்கள் வீட்டிலேதான் மடிந்தார் அந்த மாபெரும் வீரர். அவரை ஆதரிப்பதுகூட அரசப் பெருங்குற்றம் என்று எல்லாரும் அஞ்சினார்கள். என் தந்தை மட்டும் உறவுக்கும் அன்புக்கும் அரச கோபத்தைவிட அதிக முக்கியம் கொடுத்தார். அப்போது அவர் இளைஞர். அச்சம் அறியாத வயது. நேரிழையின் தந்தையை வீட்டில் வைத்து ஆதரித்ததோடு அவருக்கு வைத்தியமும் செய்து பார்த்தார்—''

''வைத்தியமா?''

''ஆமாம். கடைசி நாட்களில் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம். 'நேரிழை, நேரிழை' என்று கதறுவாராம். வேறு எதுவும் பேச வராதாம். வாய் குழறுமாம். வைத்தியர்களுமே அவருக்கு மருந்து கொடுத்து உதவ அஞ்சினார்களாம்! அரச அச்சம் அப்படி! என்றாலும் இந்த வீட்டில் அவரை மிகவும் அன்போடு பேணிப் பாதுகாத்து ஆதரவு கொடுத்தார் தந்தை. நோய்தான் வாசியாக வில்லை. இறந்து விட்டார். மனித நடமாட்டம் இல்லாத எங்கோ ஒரு காட்டுக்குள்ளே ஒரு மறைவான இடத்தில் அவருடைய நடுகல் நிற்கிறது. எத்தனையோ பகைவர்களை வென்ற அந்த வீரக் கோசர் தலைவன், தன் மகளைக் காப்பாற்ற முடியாமல், தன் மகளைக் கொன்றவனைப் பழி தீர்த்துக் கொள்ள முடியாமல், நடுகல் ஒன்றைத் தவிர வேறு எந்த மதிப்பும் அறியாமல், மாண்டு மடிந்து அமைதியற்றுப் போனார். இதையெல்லாம் நேரில் கண்டு கலங்கியவர் அல்லவா என் தந்தை? ஆகையால் தனக்குப் பிறக்கும் ஆண் மகன் நன்னர்களைப் பழி வாங்குவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று துடியாய்த் துடித்தார் என் தந்தை. அப்படிப்பட்ட தந்தைக்கு நான் ஒரு பெண் பிறந்தேன்! தந்தைக்கு எப்படியிருந்திருக்கும் என்று நீங்களே ஊகித்துப் பாருங்கள்!''

பொன்மணிக்குக் கண் கலங்கியது. அழலாடி கேட்டான்:

''பொன்மணி, நீ சொல்வது அனைத்தும் புரிந்து கொண்டேன். ஆனால் உன் தந்தை உன்னிடத்தில் அப்படிச் சோர்வு கொண்டிருப்பதாகவே யாராலும் இப்போது ஊகிக்கவே முடியவில்லையே! அத்தனை—''

''என் தந்தைக்குச் சோதிடத்தில் மட்டில்லாத நம்பிக்கை. நான் பிறந்தபோது அப்படியே மனம் ஒடிந்து தள்ளாடிப் போயிருந்த என் தந்தையிடம் யாரோ ஒரு சமணத் துறவி வந்து ஒரு நிமித்திகம் சொன்னாராம்!''

''நிமித்திகமா?''

''ஆம். தந்தையிடம் அவர் சொன்னாராம்: 'பெண் குழந்தை பிறந்துவிட்

டதே என்று மிகவும் நொந்து போயிருக்கிறாய் நீ. அந்தக் குழந்தை பிறந்த நேரத்து வானிலைக் கணக்கின் படி, உங்கள் கோசர் குலத்தின் மறு மலர்ச்சிக்கு இந்தக் குழந்தையே காரண மாக விளங்கப்போகிறாள். உங்கள் குலப் பழி தீரப் போகிறது!' என்று அந்தச் சமணத் துறவி சொன்னாராம். அதி லிருந்து மீண்டும் மறு வாழ்வு பெற்றுத் தெளிவடைந்து வாழத் தொடங்கினார் தந்தை. இப்போதும் என்ன சொல் கிறார், தெரியுமோ?''

'' என்ன சொல்லுகிறார், உன் தந்தை ?'' என்று ஆவல் பொங்கக் கேட்டான் அழலாடி.

''என் வயிற்றில் பிறக்கப் போகும் வீர மகன்தான் கோசர் குலத்துக்கு ஏற் பட்ட நிந்தையைத் துடைத்துப் பழிக் குப் பழி வாங்கப் போகிறானும். என் பிள்ளைதான் வீர வாளிலே நன்னர் குலத்து அரச இரத்தத்தைக் கொண்டு வந்து அந்த நடு கல்லிலே தெளிக்கப் போகிறானும்!''

இந்தச் சொற்களைக் கேட்டதும் அழலாடியின் வீரத் தோள்கள் விம்மின. அப்போது பொன்மணி சொன்னாள்.

''என் தந்தை அப்படிச் சொல்கிறார். ஆனால் ஆனால்—''

''ஆனால் என்ன பொன்மணி?''

''ஆனால் எனக்குப் பிறப்பதும் பெண் குழந்தையாக இருந்து விட்டால்—'' பொன்மணியின் கண்கள் மறுபடியும் கலங்கின. அடுத்த விநாடி பொல பொல என்று கண்ணீர்த் துளிகள் சிந்திச் சிதறின. முந்தானையிலே முகத் தைப் பொதிந்து கொண்டாள் பொன்மணி.

திலா இருக்கையிலிருந்து எழுந்தான் அழலாடி. சொன்னான்:

''கண்ணே, நிலைமையும் நிகழ்ச்சி களின் சிக்கலும் சேர்ந்து இப்படியெல் லாம் தடுமாற வைக்கின்றன உன்னை யும் உன் தந்தையையும். பெண் குலத் தின் பெருமையை எப்படி யாரால் எடுத்துச் சொல்ல முடியும்? இந்த உலகிலே வீரத்தைப் பெற்றெடுப்பதும் வீரத்தைப் பேணி வளர்ப்பதும் பெண்மை! ஒரு வீர ஆடவனுடைய வீரம் அவனோடு முடிந்தது. ஆனால் ஒரு வீர அன்னையின் தாய்ப்பாலோ ஒரு வீரத் தமிழ் மரபின் வீரத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கொடுத்து உயிரூட்டி வீர வம்சத்தைக் காக்கிறது. முல்லைமூதூர்க் களத்திலே அந்தத் திமிர் பிடித்த காளை மாட்டை அடக்கியது நானு, இல்லை, என் அன்னை எனக்கு ஊட்டிய பாலமுதம்! நான் இலக்கி யங்கள் படித்தவனில்லை. தர்க்க நூல்கள், அரசியல் பட்டாங்குகள் ஒன்றும் கற்றவனில்லை. எனக்குச் சோதிடம் தெரியாது. அதில் நம்பிக் கையும் கிடையாது. நான் சண்டை செய்கிற முரடன். என் பேச்சு எல் லாம் அப்போதே சொன்னேனே, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு !''

அழலாடியின் கைகள் இரண்டும் வீரப் பெருணர்ச்சியிலே ஆடின. கண் களிலிருந்து அழல் சிந்திக் கொண் டிருந்தது !

''அன்பே, என்ன சொல்லுகிறீர்கள், நீங்கள் ?''

''பொன்மணி, வேறு என்ன சொல்ல வேண்டும் நான். எனக்கு ஒரு பெண் பிறந்து அந்தப் பெண் குழந்தையை யும் சேர்த்து உங்கள் கோசர் குலம் ஓரக் கண்ணால் பார்க்க வேண்டிய நிலைக் குக் காத்திருக்க வேண்டாம் நாம். உன் மன உறுதியை மெச்சுகிறேன், நான். உன்னை உடைமை கொள்ளும்

கிண்டல் கடிதம் !

அமெரிக்காவின் தலை சிறந்த ஓவிய மன்னனான நார்மன் ராக்வெல் ''சாட்டர் டே ஈவினிங் போஸ்ட்'' பத்திரிகைக்கு அட்டைப் படம் போட்டுக் கொண்டு வரும்போது தம்மையும் அறியாமலேயே படத்தின் கீழ் போடும் தம் பெயரை இதழுக்கு இதழ் பெரி தாக்கிக் கொண்டே போனார். இதைக் கவனித்த ஆசிரியரிடமிருந்து ''அன்புள்ள ராக்வெல் அவர் களுக்கு, நீங்கள் படத்தின் கீழ் உங்கள் பெயரை எவ்வளவு பெரிதாய்ப் போட்டாலும் பாதகமில்லை. ஆனால் தயவு செய்து அதைப் பத்திரிகையின் பெயரை விடப் பெரிதாக மட்டும் போடாமல் பார்த்துக் கொள் ளுங்கள். ஏனென்றால் ''போஸ்ட்'' பத்திரிகையில் தான் ராக்வெல் வரவேண்டுமே தவிர ''ராக்வெல்'' பத்திரிகையில் போஸ்ட் வரக்கூடாது பாருங்கள்!'' என்று கிண்டலான கடிதம் ஒன்று வந்தது !

— அடந்தை பாண்டியன்




போது உன் கடமைகளையும் சேர்த்தே நான் உடைமை கொள்ளுகிறேன். கோசர் குலத்தின் பழியைத் துடைப்பது முதலாவது கடமை. அதன் பிறகு மறுமலர்ச்சி பெற்ற அந்தக் குலத்தைத் தழைக்கச் செய்வது அடுத்த கடமை. முதலாவது கடமையை முதலிலே செய்து விட்டு அதன் பிறகு உன் கரங்களைப் பற்றுகிறேன்!''

நிலா முற்றத்தில் ஒரு தெய்வ அமைதி குடிகொண்டது. பொன்மணி அழலாடி இருவருமே மௌனமாக இருந்தார்கள். பிறகு பொன்மணி கேட்டாள் :

''அன்பரசே, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? கோசர் குலத்தின் நிந்தையை எப்படி நீங்கள் துடைக்கப் போகிறீர்கள் ?''

''பொன்மணி, அதெல்லாம் என்னைக் கேளாதே. எனக்கே தெரியாது அது இப்போது! நான் அரச மன்றங்களை விரும்பாதவன். போர்க் களம் மட்டுமே தெரியும் எனக்கு. தந்திரங்கள், சூழ்ச்சிகள், செயல் ஆராயும் நுட்பங்கள் ஆகிய பயிற்சிகள் எல்லாம் எனக்கு இல்லை. ஆனால் செயலிலே பயிற்சி உடையவன். என்னிடம் ஆராய்ச்சிகளைக் கேட்காதே. அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் படித்த முதலாவது வீர இலக்கியம் என்னைப் பெற்றெடுத்த என் அன்னை. இன்று இப்போது நான் என் வாழ்வில் எனது இரண்டாவது இலக்கியத்தை. பெண்மைக் குலத்தின் வீரப் பாடலை இதோ என் கண் முன்னே இந்த நிலவின் ஒளியில் படிக்கிறேன். இந்த இரண்டு இலக்கியங்களும் போதும் எனக்கு. என் கடமை நிறைவேறி விடும்!''

ஃ ஃ ஃ



'செம் பொன் மாடம்' என்று பெயர் தாங்கிய அரண்மனை அது! நன்னர்கள் என்ற துளுநாட்டு மன்னர்களுக்குரிய மலையடிவார மாளிகை அது! தலைநகரை விட்டு ஓய்வுகொள்ளும் நாட்களிலே அரசனும் மிக நெருங்கிய சுற்றத்தார்களும் மட்டுமே சென்று, மலை வளம் கண்டு களிக்கவும், இனிய சூழலிலே சில நாட்கள் தங்கவும் என்றே நன்னர்கள் தங்களுக்குரிய ஏழில் மலையின் அடிவாரத்தில், ஆற்றின் கரையிலே, கட்டியிருந்த அழகான தங்கள் அரண்மனை அது!

நன்னன் ஓய்வு நாடிச் சென்றிருந்த காலம் அது! நேரம் நிசி தாண்டியபின் வேளை! இருளோ மலையடிவாரத்திலே கப்பிப் படர்கிற கன்னங்கரிய காரிருள்!

மலையிலே இரிகிற மேகம் ஒன்று கீழே இறங்கி வந்து, அரண்மனையை நாடி நகருவதுபோல ஒரு மனித உருவம், ஒரு மனித மேகம் கால்கள் நிலத்திலே பாவாதவாறு படர்ந்துசெல்கிறது!

உடம்பெல்லாம் ஏதோ கருநீல வண்ணத்தைக் கொண்டு ஒரு பூச்சு ! அந்தக் கருநீல உடம்பிலே ஒரு கருநீலத் துணி, கச்சை கட்டியவாறு! புலி போன்ற தோற்றம். துயில் கொள்ளாத கண்கள். அஞ்சாத நெஞ்சம். குறி தப்பாத அம்பு. இடைக் கச்சிலே நச்சு தோய்ந்த கூரிய வாள். ஒரு சிறிய பையிலே துணிப் பந்தம். இன்னொன்றிலே 'கொடு நாவி' என்ற நச்சு மருந்துப் பொடிகள். அரையில் சுற்றிய நூல் ஏணி! உடும்பு!


என்ன மிடுக்கு! என்ன பம்மல்! எத்தனை விரைவு! எத்தகைய ஒளிவு மறைவு! அந்தக் கைகளிலும் கால்களிலும் இருளும் மின்னலும் ஒன்றாக இணைந்து மாறி மாறி இயங்குகிற அரிய ஆற்றல்! வானமும், வையமும், ஏழில் மலையும், மேகக் கூட்டங்களுமே அறிவு மயங்குகின்றன அந்தத் தோற்றத்திலே!

நன்னனுடைய அழிவுக்காலம் என்று வரும், என்று வரும் என்று கோசர்கள் மட்டுமல்லாமல், துளுநாட்டுக்குள்ளேயும் பலர் எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தார்கள் போலும்! அப்படிப்பட்ட உள் ஆட்களிலே யாரோ கையாட்கள் உதவி கொடுத்திருக்க வேண்டும் ! இல்லையென்றால் அந்த நேரத்தில் அந்த வட்டாரத்தில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்த மனித உருவம் அத்தனை தன்னம்பிக்கையோடு விறுவிறு என்று எப்படி முன்னேறுகிறது ?

செம்பொன் மாடத்தில் அரசன் துயில் கொள்ளும் மையமான பள்ளி அறையைக் குறி பார்த்து இப்போது நூலேணி பாய்கிறது.

உடும்புப் பிடியிலே தொங்கிய நூலிலே, மின்னலும் இருளுமாகப் பின்னிப் பிணைந்த அந்த மனித உருவம் 'மளமள' என்று எவ்வி மேலே மேலே சென்றது ! **(தொடரும்)**


வேதனை
வேண்டாம்
தலைவலி, தொண்டைவலி
ஜலதோஷம்
ஆகியவற்றை
ஙிவாரின்
விரைவாகவும்,
அபாயமின்றியும் நீக்குகிறது.
இரண்டு வில்லைகள் கொண்ட
1 பாக்கெட்
விலை 10 பைசாதான்
தயாரிப்பாளர்கள்:
டேப்லெட்ஸ் பிரைவேட் லிட்.,
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்ஸ், மதராஸ்-2
ஸோல் ஸெல்லிங் ஏஜெண்டுகள்:
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
& பார்மஸ்யூடிகல்ஸ் லிட்.,
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்ஸ், மதராஸ்-2
EP.TI-2


காஸ்டரால்
சுகந்த காஸ்டர் தைலம்
Castorol
தேசத்தின் ஆரோக்யத்திற்கு!
விவேகமுள்ள ஆண்களும் பெண்களும்
கால்கெமிகோவின் காஸ்டராலையே
விரும்புவதற்குக் காரணம், அடர்த்
தியான கேசவளர்ச்சியை
அதிகமாக்குவதற்குரிய
அதன் அரும் குணங்களை
அவர்கள் அறிவார்கள்.
தயாரிப்பாளர்கள்:
தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்.,
கல்கத்தா—29.
CF-18-65 Tamil
தென் இந்திய ஆபீஸ்:
5/149, பிராட்வே, சென்னை-1



போப்பாண்டவரின் ஆசி!

இப்பொழுது போப்பாண்டவராக இருக்கும் ஜான் அவர்கள் ஒரு நாள் பாரசூட் வீரர்களுக்கு ஆலோசனை கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் கூறினார்: "நீங்கள் வானிலிருந்து குதிப்பது சரி. ஆனால் நீங்கள் வானுக்கு உயர வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!"

தகவல்: வி. முத்துக்குமரன்



"நம்ம ஹீரோவுக்கு அர்ஜெண்டாகக் கிளிசரைன் வேண்டுமாம். வீட்டிலிருந்து போன் பண்ணுகிறார்."

"எதற்காகவாம்?"

"அவருடைய மாமியார் காலமாயிட்டாங்களாம்."



தூங்கியபடியே நீந்த முடியுமா?

ஈ, எறும்பு முதலிய பூச்சிகளுக்குக் கேட்கும் சக்தி கிடையாது. அவை ஊமைச் செவிடுகள்.

வரிக் குதிரையின் மேலுள்ள வரிகள் வெள்ளை நிறமானவை; கறுப்பு அல்ல.

நாய் உணவில்லாமல் சாவதை விட விரைவாகத் தூக்கம் இல்லாததால் இறந்துவிடும்.

வாத்துக்கள் தூங்கிக் கொண்டே நீந்துகின்றன.

வண்ணத்துப் பூச்சிகள் தங்கள் கால்களினாலேயே ருசியை அறிகின்றன.

நீர்ப் பரப்புக்கு மேல் மிதக்கும் பொருளைப் பிடித்துக்கொள்ள வேண்டுமானால் கருமீன் மல்லாந்து கொண்டுதான் மு

முட்டையிலிருந்து வெளிப்படும் முதலைக் குஞ்சு, தான் வெளிப்பட்ட முட்டையைவிட மூன்று பங்கு நீளமானதாக இருக்கும்.

- காழி ஜெஸா

சிந்தனைக்கு!

- குடையும் நம் மனமும் ஒரு விதத்தில் வெகு ஒற்றுமை. இரண்டும் மிகுதியாகப் பயன்படுவது விரிவிலேதான்!
- பயமில்லாமல் இருக்க நெஞ்சில் திடமும் தைரியமும் வேண்டும். இந்தத் திடதைரியங்களை ஒழுக்கமும் உண்மையும் வழங்குவது மாதிரி வேறொன்று வழங்காது.
- படுத்துக் கிடக்கும் ஏணி எழுந்து நிற்கும்போதுதான் பயன்படுகிறது. இப்படி எழுந்து நிற்கும் ஏணி ஒரே வடியாக நெட்டுக் குத்தலாக நின்றால் பயன் கிடையாது. கொஞ்சம் சாய்வாக இருக்க வேண்டும். -மயிலன்

மின்மினிக் குடை!

ஜப்பானில் புதியதோர் குடை புழக்கத்தில் வந்துள்ளது. இரவு வேளைகளில் மழைபெய்யும்போது போக்குவரத்து விபத்துக்களிலிருந்து பாதசாரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பெரும் உதவியாக உள்ளது இக் குடை. டபேடா துணியால் தயாரிக்கப்படும் இது பார்ப்பதற்குச் சாதாரணக் குடையைப் போலத்தான் காட்சி யளிக்கிறது. ஆனால் ஒளியைப் பிரதிபலிக்கும் ஏதோ ஒரு பொருள் குடையின் விளிம்பில் தைக்கப்பட்டுள்ளது. இது இரவில் ஒளி வீசிக் குடையை ஏந்திச் செல்லும் பாதசாரியை 200 அடி தூரத்துக்குச் சுட்டிக் காட்டுகிறது. இந்த மின்மினிக் குடை தயாரிக்கும் கம்பெனியை ஜப்பான் நாட்டுப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சங்கம் வெகுவாகப் பாராட்டியுள்ளதாம்.


ஆதாரம்: நியூஸ் வீக். தகவல்: ஏ. கே. கந்தசாமி

பேசத் தோன்றாமல் திணறிய விஞ்ஞானி !

அறுபதுகளின்டு விஞ்ஞானி ஐன்ஸ்டீனை ஒரு கல்லூரி ஒன்றில் விருந்து வைத்துப் பேசுமாறு வேண்டிக் கொண்டனர். விருந்து சுவைத்து பின்னர் மேடையில் நின்று, "பேசுவதற்கு இப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை. தோன்றினால் மீண்டும் வருகிறேன்" என்று கூறிப் பேச்சை முடித்துக் கொண்டாராம்! மீண்டும் அவருக்குப் பேசலாம் என்று ஆறு மாதங்கள் கழித்துத் தோன்றியதாம். அந்தக் கல்லூரிக்கு ஒரு தந்தி கொடுத்து அன்று பேசி விட்டு வந்தாராம்.

ஆதாரம்: 'இருபதாம் நூற்றாண்டு மேதைகள்'
தகவல் : எஸ். ராமு

● ● ● ●



இதே மேதை சொன்னதொரு கதையைக் கேளுங்களேன்

ஒரு மாளிகையில் நடந்த விருந்துக்கு தொடர்நிலைக் கோட்பாட்டைக் கண்டு பிடித்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் வந்திருந்தார். அப்பொழுது விருந்து வைத்த பெண்மணி அவரைப் பார்த்து, "உங்களுடைய கோட்பாட்டை ஒரு சில சொற்களில் விளக்குங்கள்" என்று கேட்டுக் கொண்டாள்.

"கோட்பாட்டை விளக்குவதற்கு முன், உங்களுக்கு ஒரு கதை கூறுகிறேன். அதைக் கேளுங்கள் முதலில்" என்றார் ஐன்ஸ்டீன்.

"சரி" என்றாள் அவள்.

"நான் ஒருமுறை ஒரு குருடருடன் நடந்து கொண்டிருந்தேன். அப்பொழுது நான் எதையோ பற்றிப் பேசி வரும்போது 'எனக்குப் பால் நிரம்பப் பிடிக்கும்' என்றேன்.

"'பாலா! அது என்ன?' என்று கேட்டார் அந்த அந்தகர்.

"'அது ஒரு வெண்மையான திரவம்' என்றேன் நான்.

"'திரவம் என்றால் எனக்குத்தெரியும். வெண்மை என்றால் என்ன?' என்று கேட்டார் அவர்.

"'கொக்கு இருக்கிறதல்லவா? அதன் இறகின் நிறம்' என்றேன் நான்.

"'இறகு எனக்குத் தெரியும். கொக்கு என்றால் என்ன?' என்று கேட்டார் அவர்.

"'வளைந்த கழுத்துள்ள ஒரு பறவை' என்றேன் நான்.

"'கழுத்து என்றால் எனக்குத் தெரியும். வளைந்திருப்பது என்றால்தான் எனக்கு விளங்கவில்லை' என்றார் அவர்.



"உடனே நான் அவர் கையைப் பிடித்து நிமிர்த்தி வளைத்தேன். 'வளைந்திருப்பது என்றால் இப்படி இருப்பதுதான்' என்றேன்.


'விளங்கி விட்டது. பால் எப்படி இருக்கும் என்பது விளங்கி விட்டது எனக்கு' என்றார் அந்த அந்தகர். அது போல்தான் அம்மா இருக்கும் நான் சொல்வதும் நீங்கள் புரிந்து கொள்வதும்" என்றார் ஐன்ஸ்டீன்.

— அடந்தை பாண்டியன்

சில பேருக்குப் பெண்டாட்டி என்றால் எத்தனை உயிர்! இதைப் படியுங்கள் :

மனைவி இறந்து போய் விட்டாள் என்று சவப் பெட்டியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்கள். வழியிலே ஒரு விளக்குக் கம்பத்தில் பெட்டி மோதிக்கொண்டதும் அப்போது உள்ளே முனகல் சத்தம் கேட்கவே பெட்டியை இறக்கிப் பார்த்தார்கள். இறந்து போனாள் என்று எவளை நினைத்தார்களோ அவளுக்கு மூச்சு வருவது தெரியவே, உடனே டாக்டரிடம் தூக்கிக் கொண்டு போனார்களாம். கம்பத்தில் மோதிய அதிர்ச்சியில் மயக்கம் தெளிந்து அவள் பிழைத்து விட்டாள். அப்புறம் கொஞ்ச காலம் இருந்து, இறந்து போனாள். இந்தத் தடவையும் முன் மாதிரியே சவப் பெட்டியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போன போது முன்பு இடித்த அதே கம்பம் எதிர்ப்பட்டது. அதைக் கண்டதும் கணவன் ஓடோடி வந்து "ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இடித்துக் கொள்ளப்போகிறது!" என்று அலறியபடி எச்சரித்தானாம்!"

-- அ. கி.மூர்த்தி





Running water, 24-hours-a-day, in your factory, in your office, in your home—you can have it easily, conveniently, economically with Myers or Wasp Pumps.


With a hundred years of experience behind them, there is scarcely any water problem that the makers of Myers or Wasp pumps cannot solve. May we know *your* water problem ?

Myers or **Wasp**

PUMPS *for every purpose*

WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.

Kal-M, 330, Thamu Chetty Street, Madras-1





37. மதம் காத்த மந்திரியார்

சிவனருட் செல்வர் வழிபாடே அவனருள் பெறுதற்கு எளிய சாதன மாகும். மக்களை மகிழ்வித்தால் அம்மக்களுக்குரிய தந்தையார் தாமே மகிழ்ச்சி யுறுவார். அது போன்றே, அடியவர்க்குச் செய்த உபசாரங்கள் அத்தனையும் இறைவருக்குச் செய்தனவாகும்.

"நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடுங் கோயில் பரமர்க் கங்காமே"

என்பது திருமந்திரம்.

பட்டினத்துச் சுவாமிகள் இறைவனை நேரே வழிபட்டவர். பத்திரகிரியார் பட்டினத்தடிகளை வழிபட்டவர். பட்டினத்தாருக்கு முன் பத்திரகிரியாரே முத்தி பெற்றார்.

சிவ நிந்தையினும் அதிபாதக மானது அடியவர் நிந்தனை. கதிரவன் முன் மணிக்கணக்கில் நிற்கலாம். ஆதவன் அருள் பெற்ற நொய் மணலில் சில நிமிஷங்கள்கூட நிற்க முடியாது.

இரணியன் திருமாலைப் பலகாலும் நிந்தித்தான். திருமாலின் அருள் பெற்ற பிரகலாதரை நிந்தித்துச் சில காலமேனும் வாழாது மாய்ந்து ஒழிந்தான்.

குலச்சிறை நாயனார் அடியவர் பக்தியில் சிறந்தவர்.

பலரும் புகழ்ந்துரைக்கும் பழைமையான நாடு பாண்டி நாடு. முத்தும் முத்தமிழும், சந்தனமும், செந்தண்மையும் உடைய நாடு அது. அந்நாட்டில் வளப்பங்களுடன் கூடிய தலம் மணமேற்குடி. (இது இக்காலத்தில் சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ளது.) ஆவுடையார் கோயிலி லிருந்து தென் கிழக்கில் பதினாறு மைல் தொலைவில் உள்ளது. கன்னலும் செந்நெல்லும் விளையும் வயல்கள் அவ்வூரைச் சூழ்ந்திருந்தன. தரும சீலர்கள் பலரும் வாழ்கின்ற அத்திருப்பதிக்குத் தலைவராக விளங்கினார் குலச்சிறைநாயனார். குலத்தைக் காப்பாற்றுபவராதலின் அவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. குலச்சிறை நாயனார், திருத் தொண்டில் திண்மையும் உண்மையும் பூண்டவர்.

காரணங் கண்ணுதற் கன்பர் என்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை
யாரும் அன்போடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்(து)
ஈர நன்மொழி எந்த இசைத்துளார்.

அடியவரிடம் பக்தி கொண்டவர்கள் குலத்தின் உயர்வு தாழ்வைக் கருதக் கூடாது. எக்குலமாயினும் அடியவரைச் சிவமாகவே எண்ணி வழிபட வேண்டும். அவ்வாறு திருத்தொண்டர்களைப் பணிந்து ஏத்துவார் நாயனார்.

உடம்பை வளர்ப்பது உணவு; உணர்வை வளர்ப்பது கல்வி; உயிரை வளர்ப்பது சமயம். உயிரின்றி உணர்வும், உடம்பும் சிறப்பைப் பெற முடியாது. ஆக, சமய ஞானமே சகல நலங்களுக்கும் ஆணி வேராகும். சமய ஞானம் இல்லாத வாழ்வு அஸ்திவாரமில்லாத மாடி வீட்டுக்குச் சமமாகும் என உரைத்தவர் குலச்சிறையார். மதுரையை அரசு புரிந்த நின்றசீர் நெடுமாறனாரிடம் தலைமை அமைச்சராக விளங்கிய குலச்சிறை நாயனார் சைவ சமயத்துக்கு இடர் வந்த போது, ஞான சம்பந்தப் பெருமானுக்குக் கைங்கரியம் புரிந்து இடரை நீக்கினார். பாண்டிமாதேவியாருடைய சிறந்த திருத்தொண்டுக்கு உண்மைத்

தொண்டராகி நின்றார். இதையெல்லாம் சம்பந்தர் வரலாற்றில் காணலாம்.

பயிரை வளர்த்தால் மட்டும் போதாது; பயிரை அழிக்க முற்படும் களையைப் பறிப்பதும் அவசியம் என்று உணர்ந்தார் குலச்சிறையார். அனல் வாது புனல் வாது புரிந்து தோல்வியுற்ற சமணர்களை அரச நீதிப்படி கழுவிலேற்றித் தண்டித்து ஏற்றம் பெற்றார். நின்ற சீர் நெடுமாறனிடம் நீண்ட காலம் முதல் அமைச்சராக இருந்து, உலகமெல்லாம் சைவநெறியைப் பரப்பி இறுதியில் இறைவன் இணையடி சேர்ந்தார்.

38. குரு அருள் கண்டவர்

திருவருளே இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குரிய சிறந்த சாதனமாகும். பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்குரிய மரக்கலம் இறைவன் திருவடி. அம்மரக்கலத்துக்கு மாலுமி குருநாதர்.

குருநாதர் கண்மணிக்கு நிகரானவர். கண்மணி, வழியையும், குழியையும் உணர்த்தும். நன்மை, தீமையை உணர்த்துவார் குருநாதர். குருநாதரில்லாதவர் குருடனுக்கு நிகராவார். பெருமிழலைக் குறும்பநாயனார் குரு பக்தியால் திருவருள் பெற்றது மட்டுமின்றி, அட்டமா சித்திகளையும் அடைந்தவர்.



மிழலைநாடு தொன்மையான புகழ் படைத்த நாடு. பெருமிழலை என்ற நகரம் அந்நாட்டின் தலைநகர். மாந்தோப்பும், தென்னை, பலா, பாக்கு முதலியவைகளின் சோலைகளும் அந்நகரைச் சூழ்ந்திருக்கும். சிறப்பு மிக்க பெருமிழலையில் மிழலைக் குறும்பர் வாழ்ந்தார். முற்காலத்தில் குறுநில மன்னர்களில் சிலர் குறும்பர் என்ற பெருடையவராய் இருந்தனர். அம்மரபில் வந்தவர் இவர். பெருமிழலை என்பது ஊரின் பெயர்; குறும்பர் என்பது மரபின் பெயர். இரண்டும் சேர்ந்து இவர் பெருமிழலைக் குறும்பர் எனப்பட்டார். இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை. இவர் சிவனடியார்கட்கு உவந்து தொண்டுகளை அவர்கள் கூறுமுன் குறிப்பறிந்து செய்து வந்தார்.

மையார் தடங்கண் பரவையார்
மணவாளன்தன் மலர்க் கழல்கள்

கையால் தொழுது வாய்வாழ்த்தி
மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்

"செய்யாள் கோனும் நான்முகனும்
அறியாச் செம்பொற் றாளிணைக்கீழ்

உய்வான் சேர உற்றநெறி
இதுவே" என்(று) அன்பினில் உய்த்தார்.

மையெழுதிய நீண்ட கண்களையுடைய பரவையாரின் கணவனுராகிய சுந்தரமூர்த்தி நாயனுருடைய திருவடிகளைக் குறும்பர் கையினுல் தொழுவார்; வாக்கினுல் வாழ்த்துவார்; கருத்தினுல் கருதி வழிபடுவார். இதுவே, மாலும் அயனும் அறியாத மணிகண்டர் மலரடிக் கீழ்ச் சேர்ந்து உய்வதற்கு உரிய நெறி என்று அன்புடனும், உறுதியுடனும் நிலைத்து நின்றூர். நாள்தோறும் நம்பியாரூரருடைய திருநாமத்தை உச்சரிக்கின்ற நலத்தினுல் அணிமாதி அஷ்டசித்திகளையும் பெற்றூர். உள்ளத்தில் அன்பு மேன்மேலும் பெருக, பஞ்சாக்கரமே உறவும் செல்வமும் உணர்வும் என்று தேர்ந்து தியானம் செய்த வண்ணமாக இருந்தார்.

நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே

ஆளும் படியால் அணிமாதி சித்தியான
அணைந்ததற்பின்

மூளும் காதலுடன் பெருக முதல்வர்
நாமந் தஞ்செழுத்தும்

கேளும் பொருளும் உணர்வுமாம்
பரிசுவாய்ப்பக் கெழுமினார்

வன்றெண்டராகிய சுந்தரர் கொடுங்கோளூரை அடைந்தார். திருவஞ்சிக் களத்தில் எழுந்தருளிய இறைவரைத் தொழுது திருப்பதிகம் பாடி, சேரமான் பெருமாள் நாயனுரது அரண்மனையில் தங்கியிருந்தார். அப்போது, திருக்கயிலை மலையை அடையும் பெருவாழ்வு நாளை எய்துகிறது என்பதைத் திருவுள்ளத்தில் உணர்ந்தார்.

பிராணவாயுவைப் பிடித்து வெளியே விடாமல் அடக்கிச் செய்யும் யோகம் ஹடயோகம் எனப்படும். அது ஞானநெறியன்று. பிராண வாயுவைத் தொடர்ந்து சஞ்சரிக்கச் செய்து, இடை, பிங்கலை நாடிகளிற் செல்லா வண்ணம் தடுத்து, சுழுமுனை நாடியிற் செலுத்தி உடல் வேறு, தான் வேறுகப் பிரிந்து நிற்கும் வகையைக்



கைவரப் பெறுவதே சிவயோகமாகும். இந்தச் சிவயோக நெறியில் நின்று நம்பியாரூரருடைய திருவடியை நம்பி நாளும் தியானித்துக் கொண்டிருந்த பெருமிழலைக் குறும்ப நாயனார், நம்பியாரூரர் நாளை கயிலை மலை செல்லும் குறிப்பினை யோகக் காட்சியின் வாயிலாக அறிந்தார். ''வன்றொண்டர் திருக்கயிலை மலை செல்ல, குருநாதனை இழந்து, கண்மணியைப் பிரிந்து வாழ்வாரைப் போல் இங்கு வாழமாட்டேன். இன்றே சிவபெருமான் திருவடியைச் சார்வேன்'' என்று சிவயோக நெறியில் கபால மூலம் திறந்துகொண்டு கன்னுதற் பெருமான் கழலிணையைச் சார்ந்தார்.

சிவயோக நெறியில் நின்ற ஆன்மா உடம்பு முகந்து கொண்ட பிராரப்தங் கனைத் தனக்குத் தொடர்பு இன்றி உடலுமாய் கழியுமாறு செய்து. கழிந்தபின் பலகாலும் செய்த சாதனத்தினால், கழுமுனை நாடி வழியே

சுதந்திரக் கட்சியின் சாதனைகள்

1. அரசாங்கம் நிலங்களைக் கூட்டுப் பண்ணையின் கீழ் கொண்டுவர இருந்த திட்டத்தை சுதந்திரக் கட்சி வன்மையாக எதிர்த்து வந்ததன் பயனாக அத்துறையில் அரசாங்கத்தின் வேகம் மழுங்கி விவசாயியின் நிலம் உழுவனிடமே இன்று இருக்கிறது.

2. விவசாயியின் நிலத்தை எப்பொழுது வேண்டுமானாலும் அரசாங்கம் பறித்துக் கொள்ள உரிமை அளிக்கும் 17வது அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்தப் பிரேரணை நிறைவேறுவதை எதிர்த்துப் போராடி ஓராண்டு காலம் தாமதிக்கச் செய்தது. அத்துடன் அது நிறைவேறியும்கூட அமுலுக்கு வராதபடி அதைச் செல்லாக்காசாக்கி உள்ளது.

3. சுதந்திரக் கட்சி நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்று இடைவிடாது கோரிவந்ததன் பயனாக இக் கொள்கையை சில ராஜ்யங்களிலுள்ள காங்கிரஸ் அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

4. தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை சுதந்திரக் கட்சி வன்மையாக எதிர்த்து வந்ததன் மூலம், பொற் கொல்லர்களும், கைவினைஞர்களும் நடத்தி வந்த போராட்டத்தில் அவர்கள் வெற்றி காண முடிந்தது.

5. உணவு தான்யங்களையும் மற்றஉணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்வோரை 'முக்கிய உணவுப் பொருள்கள் கட்டுப்பாடு சட்ட'த்தின் விபரீத விளைவுகளிலிருந்து காப்பாற்றுவதில் வெற்றிபெற்றுள்ளது. அத்துடன், ஓர் அதிகாரி கைப் பற்றிய பொருளை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாகப் பறித்துக் கொள்வதையும் தடுத்துள்ளது.

6. நிர்வாகத் துறை பற்றிப் பொது மக்கள் தங்கள் குறைகளைக் கூறிப் பரிகாரம் காண ஒரு புது அமைப்பை(ஆம்புட்ஸ்மன்)— பல மேனாடுகளில் இருப்பது போல் பாரத நாட்டிலும் — நிறுவ வேண்டும் என்று வற்புறுத்தி வந்துள்ளது. இது இன்றைய காங்கிரஸ் வட்டாரத்திலும் ஏற்கப்பட வேண்டிய கொள்கை என்று பேசப்பட்டு வருகிறது.

7. சுதந்திரக் கட்சி எம். பி.க்களும், எம். எல்.ஏ.க்களும் அரசாங்கம் கொண்டு வரும் பல மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் கமிட்டிகளில் அங்கம் வகித்து அம் மசோதாக்களால் உண்டாகக்கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்க்கப் பாடுபட்டு உள்ளனர்.

8. ஆண்டுதோறும் மக்கள் சபையிலும், ராஜ்ய சட்டசபைகளிலும் கொண்டு வரப்படும் பட்ஜெட்டுகளைச் சுதந்திரக் கட்சி எம். பி.க்களும், எம். எல்.ஏ.க்களும் நுட்பமாக ஆராய்ந்து, பல நேர்முக மறைமுக வரிக் கொடுமைகளிலிருந்து மக்களுக்குப் பரிகாரம் தேடித் தந்துள்ளனர். அரசாங்க நிர்வாகச் செலவையும் ஓரளவு குறைக்க வழி செய்துள்ளது சுதந்திரக் கட்சி.

9. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அதற்காக அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் பணவீக்கக் கொள்கையைப் பற்றியும் சுதந்திரக் கட்சி ஆரம்ப முதலே கடும் எச்சரிக்கை செய்து வந்தது. சுதந்திரக் கட்சி கூறி வந்தது எல்லாம் உண்மை என்று நிரூபணமாகி விட்டது. அது மட்டுமின்றி இப்படிப்பட்ட தவறான கொள்கையைக் கடைப் பிடித்தால் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டியிருக்கும் என்று சொல்லி வந்ததும் உண்மையாகி யிருக்கிறது.

10. சுதந்திரக் கட்சியின் சட்டசபை, மக்கள் சபை அங்கத்தினர்கள் விழிப்புடன் இருந்து பணியாற்றியதால், அவர்கள் மற்ற அங்கத்தினர்களுடன் சேர்ந்து, பல தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த மத்திய ராஜ்ய சர்க்கார் மந்திரிகளை அப்புறப்படுத்த முடிந்தது. இப்படி சென்ற ஐந்தாண்டுகளில் நிர்வாகத் தவறுகள் காரணமாகவும் லஞ்ச ஊழல்கள் புகார்கள் காரணமாகவும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அல்லது ராஜிநாமா செய்த காங்கிரஸ் மந்திரிகளின் எண்ணிக்கை மிகப்பலவாகும்.

11. சுதந்திரக் கட்சியின் ராஜ்யக் கிளைகள் அரசாங்கத்தில் நிலவும் ஊழல்களையும் தவறான நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்டி மக்களுக்குப் பல முக்கியமான கஷ்ட நிவாரணப் பணிகள் புரிந்துள்ளன.

பிராணனைச் செலுத்தி, பிரமரந்திர வழியைத் திறப்பித்து, மேலைப் பெருவெளியில் நிறுத்தும். கபாலவெளியைத் திறப்பித்துக் கொண்டு ஒளிமயமாகச் செல்லும். அவ்வாறு சென்ற ஆன்மா மீண்டும் வந்து பிறவாது.

பெருமிழலைக் குறும்ப நாயனர் சிவயோக நெறி நின்றவராதலின், கருவி கரணங்களை ஒருமுகப்படுத்தி, சுழுமுனை நாடி வழியே பிராண வாயுவைச் செலுத்தி, பிரமரந்திர வழியே சென்று, மேலைப் பெருவெளி சார்ந்து, கபாலத்தினைத் திறப்பித்து ஒளி வடிவாகத் திருக்கயிலாய மலையைச் சேர்ந்தார்.

நாலு கரணங் களுமொன்றாய்
நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக்
கருத்துஞ் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி
எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம்
அணைவார் கயிலை முன்னடைந்தார்.

(தொடரும்)


-திட்டங்கள்

சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அல்லது சுதந்திரக் கட்சியின் ஆதரவு பெறும் அரசாங்கம் என்ன சாதிக்கும்?

1. சென்ற இருபதாண்டுகளாக ஆட்சி செலுத்தியவர்களால் அதலபாதாளத்தில் வீழ்த்தப்பட்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தைக் கைகொடுத்துத் தூக்கிவிட்டு அது ஒரு நிலையில் நிலைபெற்று நிற்க வழி செய்யும்!

2. அரசாங்கச் செலவுகளைக் குறைக்கும்.

3. நேர்முக மறைமுக வரிகளைக் குறைக்கப் பாடுபடும். நில வரியை ரத்து செய்யும்.



4. தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கி விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும். ரூபாயின் மதிப்பை நாணயமான உறுதியான நிலையில் நிறுத்த முயலும்.

5. மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க விவசாயிக்கு உதவும்.

6. அரசாங்கத்தின் அனாவசியமான குறுக்கீடு, கட்டுப்பாடுகள் ஆகிய தளைகளிலிருந்து விவசாயம், வாணிபம், தொழில்கள் – பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை விடுதலை செய்யும்.

7. பர்மிட், லைசென்ஸ்–கோட்டா ஆட்சி முறையை அப்புறப்படுத்தும்.

8. திட்டக் கமிஷனைக் கலைத்துவிட்டு, நாட்டைத் திவாலா நிலைக்குக் கொண்டு செல்லும் நான்காவது திட்டத்தையும் கைவிடும்.

9. தொழில் துறையாயினும் சரி, வியாபாரத் துறையாயினும் சரி சர்க்காரோ தனிநபர்களோ ஏகபோக உரிமைகள் அநுபவித்தால் அதை ரத்து செய்யும்.

10. வாங்குபவரின் நலனே பிரதானம் எனக் கொண்டு, நாணயமான போட்டி வர்த்தக முறையை ஏற்படுத்தும்.

11. காங்கிரஸ் ஆட்சியில் பறிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மக்களுக்குத் திரும்பவும் நல்கும். தனி நபர் சுதந்திரத்தைக் கண்ணே போல் காக்கும்.

12. உலக நாடுகளிடையில் இந்தியா பெற்றிருந்த பெருமதிப்பை மீண்டும் உயர்த்தப் பாடுபடும்.

13. எல்லாருக்கும் அடிப்படைக் கல்வியை இலவசமாக அளிக்கும்.

14. அரசாங்கத் துறையில் பேராசை பிடித்த பகாசுரத் திட்டங்களைக் கைவிட்டு தனியார் போட்டி மனப்பான்மையுடன் தொழில் வளத்தை நாட்டில் பெருக்கத் திட்டமிட்டு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும். அரசாங்கமே மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமான இனங்களுக்கு மட்டுமே சர்க்கார் துறையில் திட்டம் தீட்டப்பெறும்.

15. நமது நேச நாடுகளுடன் நட்புறவு பூணுவதன் மூலம் நம்மால் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ள ராணுவச் செலவுகளைக் குறைக்கும். இந்தப் பணம் பிறகு உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தப்பட்டு நல்ல பலன் தரும். இதனால் பணவீக்கமும் குறையும்.

16. இந்தத் தலைமுறையினருக்கே நல்வாழ்வு அளிக்கப் பாடுபடும்.



17. இன்றைய சுபிட்சமே, நாளைய வளர்ச்சிக்கு அஸ்திவாரம் என்ற அடிப்படையில் செயலாற்றும்.

18. நாட்டில் உள்ள சிறந்த அறிவாளிகளைக் கொண்டு ஒரு தேசிய சர்க்கார் அமைக்கப் பாடுபடும்.

க்ருஷன் ஸால்ட்ஸ்

அருந்துங்கள்

ரத்தத்திலுள்ள அசுத்தங்களை

அகற்ற உதவுகிறது அது.

அதன் பயன்
மிக்க 7-வழிச்
செயல் முறை
உங்கள் உடல்
நலனைத்
தக்கபடி
பாதுகாக்கிறது



நிக்கோலஸ் (N) தயாரிப்பு

தூய்மைக்கும் தரத்திற்கும் சீல்கள்
பெறும் உத்தரவாதம்

KS. G 6

பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட் சென்னை-17

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் செக்கப்பூச் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூலகாரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடையமுடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடேர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப் பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

சாபம்



அ. சுந்தரமூர்த்தி

பல ஆண்டுகளுக்கு முன்பு.

ஒரு நாள். கதிரவன் மேலை வானத்தில் மறைந்து கொண்டிருந்தான். இளஇருள் பரந்து கொண்டிருந்தது. நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் அடர்ந்து வளர்ந்திருந்த புளிய மரங்களின் இலைகளினூடே அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்மினிகள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. பறவைகள் எல்லாம் தம் சிறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு தத்தம் கூடுகளை அடைந்து விட்டன. இராப் பறவைகள் மட்டும் ஒன்றிரண்டு கிரீச்சிட்டுக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் பறந்து கொண்டிருந்தன.

ஆறும் பிறை மங்கிய தன் நிலவை அள்ளி வீசிக் கொண்டு உச்சி வானத்திலிருந்து சரிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ காட்டு மல்லிகையின் நறுமணம் தென்றலுடன் வந்து விரவி, விளையாடிக் கொஞ்சிக் குலவிக் கொண்டிருந்தது.

சாலையோரத்தில் ஒரு மண்டபம். அது இடிந்து பாழடைந்து கிடந்தது. அதைச் சுற்றிலும் பிரம்மாண்டமான மரங்களும், அவற்றுடன் பிணைந்தேறிப் படர்ந்திருந்த கொடி வகைகளும் அம்மண்டபத்துக்கு ஒரு பயங்கரத் தோற்றத்தை அளித்தன. மண்டபத்தின் மதிற்சுவர்கள் ஆலுக்கும், அரசுக்கும் இடங் கொடுத்துத் தாமே பிளவுண்டு இடிந்து கிடந்தன.

என்னையும், என் சேவகனையும் இறக்கி விட்டு மோட்டார் வண்டியானது பேரிரைச்சலுடன் புகைப்படலங்களைப் போக்கிக் கொண்டு வெகு விரைவுடன் நெடுஞ்சாலையை விழுங்கி ஓடிற்று. ''டபுள் ரைட்'' என்ற கண்டக்டரின் கட்டைக் குரல் அண்மையிலிருந்த ஒரு குன்றினின்றும் எதிரொலித்தது.

நான் மண்டபத்தின் திண்ணையின்மேல் அமர்ந்தேன். என் சேவகன் என் அண்மையில் நின்று கொண்டிருந்தான்.

''பொன்னு!'' என்று அழைத்தேன்.

''ஐயா !'' என்றான் அவன்.

''நாளைக் காலை ஏழு மணிக்குத் தேர்தல் தொடங்குகிறது. இதுவரையில் இங்கு யாருமே வரக் காணுமே? மணியக்காரரும் வரவில்லை. ஓட்டு அறைகள் கட்டும் தட்டிகளைக் காணும். வோட்டுப் பெட்டிகள், ஏனைய சாதனங்களும் இன்னும் வரவில்லை. உம்.... பொன்னு !''

''எசமான்!''

''இம்மண்டபத்தைச் சுற்றி இருபது மூன்று மைல் தொலைவு வரையில் கிராமமே இல்லை. ஜனசஞ்சாரமும் அடங்கிவிட்டது. மணியக்காரர் இங்குதான் சற்றுத் தொலையில் குடியிருக்கிறார் என்று கேள்வி. அவரைத் தேடிக் கண்டுபிடித்து இரவு உணவுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வா. அவரையும் கையோடு அழைத்துக் கொண்டு வர வேண்டும். மறந்து விடாதே. தெரியுமா ? ஊம்... பொன்னு! கொஞ்சம் கடச் கடத் தண்ணீரும் ஒரு செம்பில் வாங்கி வா.'' — இவ்வாறு உத்தரவிட்டுப் பொன்னனை அனுப்பி வைத்தேன்.

என் பாட்டரி விளக்கின் உதவியால் மண்டபத்தை ஆராயத் தொடங்கினேன். விளக்கொளியைக் கண்டு ஏதேதோ பறவைகளும், வௌவால்களும் படபடவென்று ஒலித்து அங்கும் இங்கும் மண்டபத்துக்குள் பறந்தோடின. உள்ளே தாழ்வாரங்களில் சிற்சில இடங்களில் புதர்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அங்கு நுழைவதற்கே அச்சமாக இருந்தது. இவற்றையெல்லாம் திருத்தி நாளை விடிவதற்குள் வோட்டுச் சாவடி ஒன்றை அமைக்கும் பணியை இப்போதே தொடங்க வேண்டும். 'போலிங் ஆபீசராக' நியமனம் செய்யப்பட்டிருந்த எனக்கு மணியக்காரர் மாலை மூன்று மணிக்கே இம்மண்டபத்துக்கு வந்திருந்து எல்லா வகையான உதவிகளையும் செய்ய வேண்டும் என்று தேர்தல் தாசில்தாரரின் உத்தரவு. அவ்வுத்தரவைத்தான் மணியக்காரர் இவ்வளவு ஒழுங்காக நிறைவேற்றியிருக்கின்றார்!

மண்டபம் மிகவும் பெரியது. அது ஓர் இரண்டு கட்டு வீடு. இரண்டு பெரிய முற்றங்கள் அவற்றைச் சுற்றிலும் நான்கு தாழ்வாரங்கள். ஒவ்வொரு தாழ்வாரத்திலும் யாத்திரிகர்கள் தங்குவதற்கெனப் பத்துப் பன்னிரண்டு அறைகள் தடுக்கப் பெற்றிருந்தன. முன்னே இரண்டு விசாலமான ஹால்கள் ஒன்றற்கப்புறம் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்தின் உட்புறத்தையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு மீண்டும் வெளியே வந்து வெளித் திண்ணையின் மேல் அமர்ந்தேன். விளையாட்டாகத் திண்ணையின் ஓரத்தில் சுவரின் மேல் என் பாட்டரி விளக்கொளியை வீசினேன். சுவரில் ஏதோ பளபளவென்று மின்னிற்று. நெருக்கத்தில் சென்றேன். அது சுவரில் புதைக்கப்பட்டிருந்த ஒரு கற்பலகை எனத் தெரிந்தது. அதன்மேல் ஏதோ எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் பல சிதைந்து போயிருந்



பேரன்: 'சோபர்ஸ்' இந்தியப் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாராம்!
பாட்டி: அப்படியா! வரதட்சிணை என்ன கொடுக்கப்போகிறானாம்?

தாலும், என்ன எழுதப்பட்டுள்ளது என்பதைப் படிக்க முயன்றேன். சில நிமிடங்களில் அந்தக் கல்வெட்டை நன்றாகப் படிக்க முடிந்தது. அக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் இதுதான்: ''ஸ்வஸ்தி ஸ்ரீ... யாண்டு... மாதம்.... நாள்... வெள்ளிக்கிழமை, யானுகிய பச்சைக் குளம் ஜமீந்தார், வேங்கடரமண கவுண்டர் இதனால் எழுதி வைக்கும் சாஸனம் என்னவென்றால்—இப்பவும் இந்தச் சாலையில் போக்குவரவு செய்யும் யாத்திரிகர்களுக்குத் தங்க வசதியும், மூன்று வேளை வயிறார உணவும் அளித்து வருவதற்கு இந்தச் சத்திரத்தைத் தானமாக விட்டிருக்கிறேன். ஆலமரக் கழனி ஒரு வட்டம் இருபது காணிகள் நன்செய், கோனான் கொல்லை பத்துக் காணிகள் புன்செய், காளியான் தோப்பு ஆறு காணி விஸ்திரணம் இவைகளை இந்தச் சத்திரத்தின் பராமரிப்புக்கு மானியமாக அளிக்கிறேன். இந்தத் தருமத்தை எனக்குப் பின்வரும் என் ஆண் வழிச் சந்ததியார் பராமரித்து வரக் கடவதாக. இந்தத் தருமம் என்னளவேனும் தவறுமானால், அந்தத் தவறுதலுக்குக் காரணமாக இருக்கும் என் சந்ததியார் யாராயிருப்பினும் தன் சொத்துக்களை இழந்து, தொழுநோயினால் இடர்ப்படக் கடவது. அவருடன் இந்தச் சந்ததியின் தொடர் அற்றுப் போக வேண்டியது. என் குல தெய்வம் பச்சையம்மன் மேல் ஆணை.''

இக்கல்வெட்டைப் படித்தேன். வேடிக்கையாக இருந்தது. ''யாரோ, எப்போதோ இடும் ஆணை, எந்தப் பரம்பரையில் யாரைப் பிடிப்பது!'' என்று கூறிக் கொண்டே கலுக்கென்று வாய் விட்டுச் சிரித்து விட்டேன்.

அடுத்த விநாடி.

''ஏன் ஐயா, சிரிக்கிறீர்கள்? இதில் என்ன தவறு இருக்கிறது?'' என்று ஒரு குரல் என்னைக் கேட்டது. குரல் மிக அண்மையிலிருந்து வந்தது. கும்மிருட்டில் எழுந்த அத்திடீர்க் குரலைக் கேட்டவுடனே நான் திடுக்கிட்டேன். அக்குரல் மனிதக் குரல் போலவே இல்லை. ஏதோ காட்டு விலங்கு ஒன்று பேசுவது போன்றிருந்தது. அதில் ஒரு குழைவோ, பண்போ, கனிவோ, இனிமையோ காணப்படவில்லை. ஆனால் கடுமை, வெப்பம், ஏமாற்றம், ஏளனம் இவை பிரதிபலித்தன. கனத்து வந்த அவ்விருளில் நான் கூர்ந்து நோக்கினேன். தளர்ந்த, கரிய ஒரு மனித உருவம், ''ஈ—ஈ'' என்று என்னை நோக்கி நகைத்தது. அங்கமெலாம் தொழு நோயால் அழுகிவிட்டிருந்தது. அந்தக் காரிருளில் அவ்வுருவத்தின் உடலெல்லாம் கரைந்து போகப் பல் வரிசைகள் மட்டிலும் பயங்கரமாகப் பளிச்சிட்டன.

''யாரப்பா நீ! இங்கே இந்த வேளையில் என்ன செய்கின்றாய்? என்னை ஏன் சிரிக்கக் கூடாது என்கின்றாய்?'' என்று வியப்புடன் வினவினேன்.

''ஐயா, நான் யார்? இங்கே என்ன செய்கின்றேன்? நன்றாகக் கேட்டீர்கள்! எத்தனையோ பேர் என்னைக் கேட்ட கேள்வி தான். அந்தச் சாசனத்தைப் படித்தீர்கள் அல்லவா?''

''ஆம் அப்பா, படித்தேன்.''

''சாசனகர்த்தா தவறு இழைப்பவர்களுக்குக் கொடுத்துள்ள சாபத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை அல்லவா?''

''ஆம் அப்பா, நான் அதை நம்பவில்லை.''

''ஐயா! உண்மைக்குக் காலம் என்பது ஒன்றுண்டா! அது காலம் கடந்தது அல்லவா? தருமம் என்றும் அழியாதது. ஆனால் அதை அழிப்பவன் என்றேனும் ஒரு நாள் அழிந்தே தீருவான். இதோ! என்னைப் பாருங்கள், இந்த மாபாவியைப் பாருங்கள். என்னைப் பற்றிக் கூறிக் கொள்ள வெட்கப்படுகிறேன். ஆனாலும், கூறிக் கொள்ளத்தான் வேண்டி இருக்கின்றது. இல்லாவிட்டால் உண்மை எப்படி விளங்கும்?

''இந்தத் தருமத்தை வைத்து விட்டுப் போன ஜமீந்தார் வேங்கடரமண கவுண்டரின் ஏழாவது தலைமுறைப் பேரன் இந்தப் பாவியான நான். என் தகப்பனார் காலம் வரையில் இந்தத் தருமம் செழித்து ஓங்கி நடைபெற்று வந்தது. சுருங்கச் சொல்லுகிறேன். நான் என் இளமையில் மைனர் விளையாட்டுகள் விளையாடினேன். என் விதியும் விளையாடிற்று. இந்தத் தருமச் சொத்தின் மானியங்களை எல்லாம் விற்றுக் குடிக்கும், சூதுக்கும் அழித்தேன். அன்னதானம் வறண்டு போய் விட்டது. சத்திரத்தில் முட்புதர் மண்டி விட்டது. ஜமீந்தார் இட்ட சாபமும் என்னைப் பற்றிக் கொண்டது. ஐயா, பற்றிக் கொண்டது'' என்று கூறி அவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

என் நெஞ்சம் பிளந்தது. என் தொண்டை வறண்டது. என் கண்களிலும் நீர் துளிக்கத் தொடங்கியது.

என் சட்டைப் பையில் கைவிட்டேன். ஓர் ஐந்து ரூபாய் நோட்டு கிடைத்தது.

"இந்தாப்பா! இதை எடுத்துக் கொள். போ. உன் விதி. ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்" என்று ரூபாய் நோட்டை அவன் கையில் வைத்தேன். அவன் அதை எடுத்துக் கொண்டு என்னை வாயார வாழ்த்தி விட்டுப் பின்னடைந்தான்.

சில நிமிடங்கள் பொறுத்துச் சற்றுத் தொலைவில் ஒரு விளக்கு வந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து என் சேவகனும், மணியக்காரரும் விரைந்து நடந்து வந்து என்னை அடைந்தனர்.

என் கண்களில் பொங்கி வழிந்து கொண்டிருந்த கண்ணீரை மணியக்காரர் கண்டு விட்டார்.

"சார்! அந்தக் குஷ்டரோகி இங்கு வந்தானா?" என்று வியப்புடனும், ஆவலுடனும், கவலையுடனும் கேட்டார்.

"ஆம்" என்றேன்.

"எவ்வளவு கொடுத்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஐந்து ரூபாய்!" என்றேன்.

"அடபாவி! இன்னும் மூன்று நாட்களுக்கு அவனுக்கு உணவுக்கு வழி கிடைத்து விட்டது" என்றார்.

"ஏன், அவன் யார்?" என்று கவலையுடன் வினவினேன்.

"அவன் யாரோ தெரியாது. இந்த மண்டபத்தில் வந்து உட்காருபவர்களையெல்லாம் அவன் ஏய்த்துச் சம்பாதிக்கிறான். இந்தச் சாசனத்தைக் கொண்டு ஒரு கதை கட்டி வருபவர்களின் நெஞ்சையுருக்கித் தன்னை நம்பும்படி செய்து விடுகின்றான். அயோக்கியன்! அவனிடம் ஏமாந்தவர்கள் இதுவரையில் நூறு பேராவது இருக்கும்" என்று கூறினார் மணியக்காரர்.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உலகமே சுழன்றது. மூளை குழம்பிற்று.

மணியக்காரர் தொடர்ந்து பேசினார்: "சார்! இந்தச் சாசனகர்த்தா என்னுடைய ஏழாம் தலைமுறைத் தாத்தா. அவருடைய மகன் காலத்திலேயே இத்தருமம் அழிந்து விட்டதாகவும், அந்த மகனுக்குத் தொழு நோய் பிடித்துக் கொண்டதாகவும் எங்கள் பரம்பரையில் வழி வழி ஒரு கதை நிலவி வருகிறது. இம்மண்டபத்தில் முளைத்துள்ள ஆலம், அரச மரங்களுக்கு இருநூறு வயதாவது இருக்கும். இப்போது இதற்கு நான் தான் தர்மகர்த்தாவாக இருக்கின்றேன். இருந்து என்ன பயன்? மானியமில்லாமல் இதை எவ்வாறு பராமரிப்பது?" என்று இரக்கத்துடன் கேட்டார் மணியக்காரர்.

"எவ்வாறு பராமரிப்பது?" என்று நானும் அச்சொற்களை எதிர் ஒலித்தேன்.

மாணிக்கத்தை வெறுத்த மனிதன்!



ஆதாரம்:
தாகூரின் 'கனி கொய்தல்'

தகவல்:
குடந்தை சீனிவாசன்

சனாதன் என்ற துறவி கங்கை நதிக் கரையில் தனது துளசி மாலையை உருட்டிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பிராமணன் அங்கு வந்து, "ஐயா நான் ஏழை. எனக்கு உதவி செய்யுங்கள்" என்றான்.

சனாதன் பதில் சொன்னான்: "எனக்குச் சொந்தமானது இந்தத் திருவோடு ஒன்றுதான். என்னிடமிருந்த எல்லாவற்றையும் நான் முன்னமே எல்லோருக்கும் கொடுத்து விட்டேன்." பிராமணன் "எனது கனவில் என் தெய்வம் தோன்றி உங்களிடம் போகும்படி சொன்னார்" என்று கூறினான். சனாதனுக்கு உடனே ஞாபகம் வந்தது. ஆற்றங்கரையில் கூழாங் கற்களின் மத்தியில், தான் கண்ட விலை மதிக்க முடியாத மாணிக்கத்தை யாருக்குக் கொடுக்கலாம் என்று மண்ணில் புதைத்து வைத்திருந்தான். அந்த இடத்தைப் பிராமணனுக்குக் காட்டினான். பிராமணன், அந்த மாணிக்கத்தைத் தோண்டி எடுத்தான். தரையில் உட்கார்ந்து கொண்டு சூரியன் மறையும் வரை சிந்தனையில் மூழ்கி யிருந்தான். பின்னர் பிராமணன் மெதுவாக சனாதனிடம் வந்து கேட்டான்: "குருவே! உலகச் செல்வத்தையே வெறுத்துத் தள்ளும் ஆன்மச் செல்வத்தில், ஒரு முந்திரி அளவு எனக்குத் தரலாமா?" இப்படி சொல்லிவிட்டுப் பிராமணன் அந்த மாணிக்கத்தைத் தண்ணீரில் விட்டெறிந்தான்.

கிருதா மீசை முனியாண்டிக்கு அன்று வழக்கத்தைவிட அதிகமாகத் தன் கிருதா மீசை மீது மோகம் பெருகி விட்டது. கண்ணாடியைப் பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். விற்பனைக்காக இரண்டொரு முகம் பார்க்கும் கண்ணாடிகள் எப்போதும் அவன் கடையில் தொங்கிக் கொண்டிருக்கும். அவற்றில் ஏதாவது ஒன்றைக் கையில் எடுத்துக் கிருதா மீசைக்குரிய களை தன் முகத்தில் தாண்டவமாடுகிறதா என்று அடிக்கடி அழகு பார்த்துக் கொள்வது முனியாண்டியின் வழக்கம்தான். ஆனால் இன்று அவன் பார்த்துக் கொண்டதற்கும் மற்ற நாட்களில் பார்த்துக் கொண்டதற்கும் வித்தியாசம் இருந்தது. அந்த மீசை மட்டும் அவன் முகத்தில் இல்லாதிருந்தால் அன்று காளியண்ணனே வாய்விட்டு அவனைப் பற்றி அவ்வளவு உயர்வான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பானா ?

கீழூரிலிருந்து இருவரும் லாரியில் உச்சிக் கடவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது அந்தப் பேச்சு நிகழ்ந்தது.



வழியில் வேலன்கடவு டீக் கடையைக் கண்டதும் லாரி டிரைவர் லாரியை அங்கேயே நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான்.

''ஏன் பாய்...ரேடியேட்டருக்குத் தண்ணி ஊத்தணுமா?'' என்று கேட்டான் முனியாண்டி.

''இல்லே, எனக்கு ஒரு சாயா ஊத்திக்கிடணும். அப்பத்தான் வண்டி மேலே ஓடும் போலே இருக்கு'' என்று

முள்ளும் மலரும்

உமாசந்திரன்

முதல் பரிசு நாவல்

கூறிய டிரைவர் பாஷா, டீக்கடையை நோக்கி நடந்தான்.

முனியாண்டியும் காலாற லாரியை விட்டு இறங்கி ஒரு மரத்தடியில் போய் நின்று பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''லாரியிலே ஒரு கண்ணு வச்சுக் கிடணும். நான் டவுர்லே வாங்கின சாமான் பொட்டலங்க எல்லாம் அப்படியே வச்சிருக்கு. எவனாவது அசத்திட்டுப் போயிடப் போறான்'' என்று கூறிய காளியண்ணன் லாரிப் பக்கம் திரும்பி நின்று கொண்டான்.

''இன்னிக்கு உனக்கு ஒரேயடியா தங்கச்சி ஞாபகம்தான் போலேருக்கு'' என்று சிரித்தான் முனியாண்டி.



"சாதாரணத் தங்கச்சியா அது? இதுவரைக்கும் அதுக்கு என்ன செய்திருக்கேன்? போக வரத் திட்டாமே இருந்தா அதுவே மேலு. நான் ஓர் அண்ணன் இருந்து அதுக்கு என்ன தான் பிரயோசனம்னு தெரியலே" என்றான் காளி.

பீடிப் புகையை இழுத்த முனியாண்டி புகையை மூக்கிலேற்றிக் கொண்டு இருமியவாறே கூறினான்—"ஏன் அப்படி அலுத்துக்கிடறே காளி? தங்கச்சிக்கு நீ என்ன கொறை வச்சிட்டே? சம்பாதிக்கிறதை வீணாக்காமே வீட்டிலே கொண்டு போய்ப் போட்டுச் சோறு தண்ணிக்குக் கவலையில்லாமே வச்சிருக்கியே அது போதாதா? உன்னையொத்தவங்களெல்லாம் வீட்டைப்பத்தின கவலையேயில்லாமே விடலித்தனமாச் சுத்திக்கிட்டுத் திரியறதைத்தானே சாதாரணமா பார்க்க முடியுது!"

"மத்தவங்க மாதிரி நானும் சுத்தனும்னு சொல்லறியா? அப்படியெல்லாம் சுத்தக்கூடிய ஆளுதான். என்னை லகான் போட்டு இழுத்து வச்சிருக்கறது எது தெரியுமில்லே? இந்த வள்ளிக்குட்டியோட நினைப்பு. அப்படி ஒரு தங்கச்சி எனக்கு இருக்கிறதினாலேதான் நான் நாலு பேரு மதிக்கும்படியா ஒரு ஆளா வளைய வந்துக்கிட்டிருக்கேன்."

"ஆச்சு, இன்னும் எத்தனை நாளைக்கு அது உன் வீட்டிலேயே இருக்கப் போகுது? காலாகாலத்திலே யாரு கையிலேயாவது புடிச்சுக் குடுக்க வேண்டியதுதானே?" என்று மீண்டும் பீடிப் புகையை உறிஞ்சினான் முனியாண்டி.

காளியண்ணன் அவனையே உற்றுப் பார்த்தான்.

"ஏ முனியாண்டி, நீயும் உன் கிருதா மீசையும்! நாளைக்கே அதை எடுத்துப் போடு!" என்றான் சட்டென்று.

முனியாண்டிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"இதோ பாரு காளி, மீசை வச்சுக்கிடறதும் வச்சுக்கிடாததும் என் இஷ்டம். நீ கேட்க வேண்டியதில்லே" என்றான் விறைப்பாக.

"வெறப்பிலே கொறைச்சல் இல்லே. நீயெல்லாம் முகத்திலே மீசை வச்ச ஆம்பிளையா இருந்து என்ன பிரயோசனம்னு கேக்கறேன்."

"என்ன காளி, திடீர்னு இப்படி என்னை அவமானப்படுத்திப் பேசறே?" என்றான் முனியாண்டி திகைப்புடன்.

"பின்னே என்ன? என் தங்கச்சியை யாரு கையிலேயாவது புடிச்சுக் குடுக்கணும்னு சொல்ல நீ யாரு? உனக்கெல்லாம் முகத்திலே கிருதா மீசை எதுக்குன்னு கேக்கறேன்."

"இதோ பாரு காளி, மறுபடியும் என் மீசையைப் பழிச்சே, எனக்குப் பொறுக்காது."

"கோவம் வந்து என்ன பிரயோசனம்? வெத்தலெ பாக்குப் பழத்தோட பரிசப் பொருளைத் தட்டிலே எடுத்து வச்சுக்கிட்டு என் வீடு தேடி வந்து, 'காளி, நான் நல்லபடியா கடை வச்சு நடத்திக்கிட்டிருக்கேன். கையிலே நாலு காசு கிடைச்சிக்கிட்டிருக்கு. உன் தங்கச்சியை வச்சுக் காப்பாத்த எனக்குத் திராணி உண்டு. எனக்கே வள்ளியைக் கட்டிக் குடுத்திடு' அப்படின்னு கேக்கத் துப்பில்லே. நூத்துக் கிழவி மாதிரி பேச வந்துட்டான்!"

தன் செவிகளையே நம்பாமல் திகைத்து நின்றான் முனியாண்டி.

"காளி, நிஜமாத்தான் சொல்லறியா?"

"அந்த அளவுக்குக்கூடத் துணிச்சல் இல்லாத பசங்கள்ளாம் சாதாரண மீசை வச்சுக்கிடறதுக்கே லாயக்கில்லே. இந்த லட்சணத்திலே கிருதா மீசை என்ன வேண்டிக் கிடக்கு?"

"காளி, சத்தியமாச் சொல்றேன், இந்த மாதிரி அபிப்பிராயம் உன் மனசிலே இருக்கும்னு மட்டும் தெரிஞ்சிருந்தா..."

"இப்பத் தெரிஞ்சிருச்சில்லே? இனி மேலாவது உனக்குத் துணிச்சல் பொறக்குதா இல்லையான்னு நானும் பாக்கறேன்" என்று கூறிய காளியண்ணன் கையிலிருந்த பீடித் துண்டைக் கீழே போட்டுக் காலால் தேய்த்து விட்டு லாரியில் போய் உட்கார்ந்தான்.

ஏதோ கனவுலகத்தில் நடப்பவன் போல் தள்ளாடியவாறே அவனைத் தொடர்ந்து நடந்து சென்ற முனியாண்டியும் அவன் அருகே உட்கார்ந்து கொண்டான். இதற்குள் டிரைவர் பாஷாவும் டீத்தண்ணியை ஊற்றிக் கொண்ட சுறுசுறுப்போடு வந்து உட்கார்ந்து கொள்ளவே லாரி புறப்பட்டது.

மறுபடியும் காளியண்ணன் அந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுப்பான் என்று மீண்டும் மீண்டும் அவன் முகத்தைப் பார்த்தான் முனியாண்டி. ஆனால் காளியண்ணன் அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. உச்சிக் கடவை அடைந்து அவன் இறங்க

வேண்டிய இடம் வந்த பிறகு கூட அவன் அதைப் பற்றி ஒன்றும் பேசாமல் சாதாரணமாக விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

இப்போது முகக் கண்ணாடியில் தனது இருதா மீசையின் அழகைப் பூரிப்புடன் பார்க்கவாறே தனது அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தான் முனியாண்டி. வள்ளிக்கேற்ற பரிசுப் பொருளாக என்ன எடுத்துப் போகலாம் என்று கற்பனைகளை ஓடவிட்டுக் கொண்டிருந்தபோது அவன் சிந்தனையில் ஒரு சந்தேகம் தலை தூக்கியது. இவ்வளவும் காளியண்ணன் கேலிக்காகச் சொன்ன வார்த்தைகளாயிருக்குமோ? உண்மையென்று நம்பி அவன் வீட்டுக்குப் பரிசம் போடப் போய் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டு திரும்பினால் என்ன செய்வது?

இந்தக் குழப்பம் அவன் குதூகலத்தைக் குட்டிச்சுவராக அடிக்க ஆரம்பித்த சமயத்தில்தான் காளியண்ணன் வேகமாக அந்த வழியே வந்து கொண்டிருப்பது முனியாண்டிக்குக் கையில் பிடித்துக் கொண்டிருந்த கண்ணாடியில் தெரிந்தது. சட்டென்று வியப்புடன் அந்தத் திசையில் திரும்பிப் பார்த்தான். உண்மையிலேயே காளியண்ணனின் முகத்தில் ஆவேசம் அலைமோதிக் கொண்டிருந்தது.

''என்ன காளியண்ணே?''

''புறப்படு''

''எங்கே?''

''எங்க வீட்டுக்கு. இன்னிக்கே பரிசம் போட்டாகணும்.''

''மெய்யாகவா காளியண்ணே? இத்தனை நேரமும் அதைப் பத்தித்தான் யோசிச்சுக்கிட்டிருந்தேன்.''

''யோசனை என்ன யோசனை? இந்த நிமிஷமே என்கூடப் புறப்பட்டாகணும். மறு பேச்சுப் பேசினே இந்த எடத்திலேயே உன் மென்னியைத் திருகிடுவேன். என் ஒத்தைக் கையே போதும் அதுக்கு.''

''ஏ அப்பா... என்ன கெடுபிடி பண்றே? பரிசப் பொருள், வெத்திலே பாக்குப் பழம் எல்லாம் சேகரம் செய்ய வேண்டாமா?''


''அதுக்குக்கூட வகையில்லாத கடையாவா வச்சிருக்கே? கடையையே அலாக்காத் தூக்கி மேம்பாறைக் கசத்திலே போட்டுடுவேன், ஜாக்கிரதை'' என்று கத்தினான் காளி.

பரக்கப் பரக்க ஏதேதோ சாமான்களை அள்ளி எடுத்து ஒரு பையில் போட்டுக் கொண்ட முனியாண்டி, கல்லாப் பெட்டியைப் பூட்டிச் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு உதவி ஆள் மூக்கன் பக்கம் திரும்பினான். ஒரு மூலையில் உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தான் மூக்கன். முனியாண்டி ஒரு வாழைக் காம்பை அவன் மேல் வீசி எறிந்ததும் அவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

''கடையைப் பாத்துக்கடா கழுதை. தூங்கி வழிஞ்சே தொலைச்சிடுவேன் தொலைச்சு.'' என்று அவனைப் பார்த்து ஆத்திரம் தீரக் கத்திவிட்டுக் காளியண்ணனுடன் புறப்பட்டான் முனியாண்டி.

''அத்தை, வந்திருக்கிறது யாருன்னு பாரு!'' என்று குரலில் குதூகலத்தை வரவழைத்துக் கொண்டு கூறியவாறே உள்ளே நுழைந்த காளியண்ணன் ஒரு பாயை உதறி நடுக் கூடத்தில் விரித்துப் போட்டான்.

''உட்காரு முனியாண்டி.. மாயாண்டி நீயும்தான்.'' — வரும் வழியிலேயே எதிர்ப்பட்ட மாயாண்டியையும் தங்களுடன் இழுத்து வந்திருந்தான் காளி.



தீயருவி எப்படி உண்டாகிறது?

ஆதாரம் : நேஷனல் ஜியாக்ரபிக்
தகவல் : இரா. கோபால்

அருவியென்றால் நீரருவியைத்தானே பார்த்திருப்பீர்கள்? தீயருவியைக் காண வேண்டுமோ? அமெரிக்காவில் யோஸ்மெட் எனும் காட்டுப் பகுதியில் கோடைக் காலத்தின் ஒவ்வொரு நாள் மாலையிலும், சுமார் 300 அடி உயரத்திலிருந்து தீக் கங்குகளாகக் கொட்டும் அரிய காட்சியைக் காணலாம். இந்தத் தீயருவி எப்படி உண்டாகிறது? காடுகள் சூழ்ந்த இடமாகையால், மரங்களில் தீப்பிடித்துத் தீயின் கங்குகள் தரையில் பரந்து கிடக்குமாம். காட்டிலாகாவினர் நீண்ட கூடப்பாறைகளினால் இந்தத் தீக்கங்குகளை மலையினின்றும் ஒருசேரக் கீழே தள்ளுவார்களாம். இந்தக் காட்சியைக் காண்பதற்காக ஆண்டுக்கு ஒரு கோடிப் பேர் அங்கு போகிறார்கள்.

உள்ளிருந்து வந்த அஞ்சலையத்தை வந்திருப்பவர்களைப் பார்த்ததும் திகைத்து நின்றாள்.

''என்ன பாக்கறே அத்தை? முனியாண்டியண்ணன் நம்ம வள்ளிக்குட்டிக்குப் பரிசம் போட வந்திருக்கு. எங்கே அது? வெத்திலே பாக்குப் பழமெல்லாம் எடுத்து வைக்க ஒரு தட்டு எடுத்து வரச் சொல்லு'' என்று கூறிக்கொண்டே தானும் உட்கார்ந்தான்.

அஞ்சலையத்தைக்குக் கைகால் ஓடவில்லை. வள்ளி அப்போதுதான் வாய்க்காலில் பாத்திரங்களைக் கழுவி எடுத்துகொண்டு அடுப்பறைக்கு வந்திருந்தாள். யாரோ வந்திருக்கும் உணர்வு ஏற்பட்டதும் இயல்பாக நிலைப்படியருகே வந்து நின்று எட்டிப் பார்த்தாள்.

முனியாண்டி அவளைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். எந்தக் காளியண்ணனுக்காகப் பயந்து கொண்டு இத்தனை நாளும் அந்த இளிப்பை அடக்கி வைத்திருந்தானோ, அந்தக் காளியண்ணனே இப்போது பரிசம் போடச் சொல்லிக் கட்டாயப்படுத்தி அவனை அழைத்து வந்திருக்கிறான் என்ற நினைப்பில் முனியாண்டியின் பற்கள் தாமாகவே இளித்தன.

''வள்ளிக் குட்டி, ஒரு பெரிய தட்டாப் பாத்து எடுத்து வா கண்ணு'' என்றான் காளியண்ணன்.

வாய்க்காலில் கழுவி எடுத்து வந்த பாத்திரங்களைக் கையிலேந்தியவாறே நிலைப்படிக்கு வந்திருந்த வள்ளி, அவற்றை உள்ளே கவிழ்த்து வைத்துவிட்டு, அண்ணன் கொண்டு வரச் சொன்ன தட்டைத் தேடினாள். இதற்குள் அஞ்சலை அத்தையும் உள்ளே வந்து அவளருகே நின்றாள்.

''அத்தை, அண்ணன் எதுக்காகப் பெரிய தட்டு வேணும்னு சொல்லிச்சு?''

''வெத்திலே, பாக்குப் பழமெல்லாம் எடுத்து வைக்க.''

''என்ன விசேஷம்?''

''முனியாண்டி உனக்குப் பரிசம் போடப் போகுதாம். காளித் தம்பி வரும்போது கூடவே அழைச்சுக்கிட்டு வந்திடுச்சு. பொதுவுக்கு மாயாண்டியையும் கையோட அழைச்சுக்கிட்டு வந்திடுச்சு.''

''அப்படியானா அண்ணனுக்கு என்னைப்பத்தின எல்லா விவரமும் தெரிஞ்சு போயிடுச்சா?''

''அப்படித்தான் தோணுது.''

''இப்ப என்ன செய்யறது அத்தை?''

''அது புரியாமத்தான் நானும் முழிச்சுக்கிட்டிருக்கேன்'' என்றாள் அஞ்சலை.

''ஏ வள்ளி, ஒரு தட்டு எடுத்து வர்றதுக்கா இவ்வளவு நேரம்?'' என்று காளை மாட்டுக் குரலில் உரக்கக் கத்தினான் காளி.

''இதோ கொண்டு வந்திட்டேண்ணே'' என்று குரல் கொடுத்த வள்ளி அஞ்சலையத்தை எடுத்துக் கொடுத்த தட்டையெடுத்துக்கொண்டு நடுக் கூடத்துக்கு ஓடிப்போய் அவன் எதிரில் வைத்து விட்டு மீண்டும் அத்தையிடம் ஓடிவந்தாள்.

''அத்தை, அண்ணன் முகத்தைப் பார்த்தாலே பயமா யிருக்கு. அதுக்கெதிரா ஒரு வார்த்தை கூடச் சொல்ல எனக்குத் தைரியமில்லையே அத்தை'' என்றாள் தழு தழுக்கும் குரலில்.

''அந்த அங்காயிப் பிசாசு டீக்கடையிலே ஏதேதோ கேட்டதுன்னு சொன்னயே, அதுதான் மூட்டி விட்டிருக்கும்னு நெனைக்கிறேன். தம்பி மூஞ்சியைப் பார்த்தாலே அது ஒரே ஆவேசத்திலே இருக்குன்னு நல்லாத் தெரியுது. இந்த நிலைமையிலே நாம என்ன சொன்னாலும் அது காதிலே போட்டுக்கிடாதே'' என்று பதை பதைத்தாள் அத்தை.

''அத்தை, நானும் பேசப் பயப்படறேன். நீயும் பேசப் பயப்படறே. பின்னே எப்படித்தான் இதைத் தடுக்கறது?'' என்று கூறும்போதே வள்ளியின் கண்களில் நீர் முட்டியது.

''அத்தே, அத்தே!... வீட்டுக்குப் பெரிய மனுசி நீ இருந்துதானே நடத்தி வைக்கணும். நீ உள்ளேயே பதுங்கிக்கிட்டிருந்தா எப்படி?'' என்று காளியண்ணன் உறக்கக் கூறியதைக் கேட்டதும் அஞ்சலையத்தை வள்ளியைத் தேற்றும் முறையில் அவள் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு மற்றவர்கள் இருந்த பக்கமாக விரைந்தாள்.

நிலைப்படியருகே நின்றவாறே அவள் கூறினாள்...

''எல்லாம் சரிதான் தம்பி. முனியாண்டித் தம்பி பரிசம் போட வந்திருக்கிறதைப் பத்தி ரொம்ப சந்தோஷமாகத்தான் இருக்கு. ஆனா வள்ளிக்குட்டியையும் இதைப் பத்தி ஒரு வார்த்தை கேட்டுடவேண்டாமா?''

''என்ன கேக்கணும்?'' — காளியண்ணனின் சிவந்த விழிகள் கடுமையாக உருண்டன.

''கலியாணம் நாலு நாளைச் சேதி இல்லையே தம்பி. ஆயிரம் காலத்துப் பயிராச்சே. அது. வாழவேண்டிய

அவேதனில் ஏன் அற்புத 'எபேப்' சேர்க்கப் பட்டுள்ளது?



தலைவலி, நோவுகள், ஜலதோஷம், ஃப்ளூ முதலியவற்றிலிருந்து உங்களுக்கு, மேலும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணம் அளிப்பதற்கு தான்.



அற்புத 'எபேப்' அடங்கிய
ஸ்க்விப்*

அவேதன்®

சில நிமிடங்களுக்குள் செயல புரிந்து, மணிக் கணக்காகப் பயனளிக்கிறது!

சாப்பிடும் அளவு: 1–2 டேப்லெட்டுகள்

சில வகுச் உபாதைகளுக்கு அவேதன் சாப்பிடுவகை - தலைவலி, பல்வலி, நரம்புகளில் வலி, ஜலதோஷம் ஃப்ளூ, பெண்களின் அசௌகரியமான நாட்கள், மற்றும் இதர வலிகள்

SQUIBB*

ஸாராபாய் கெமிகல்ஸ்

ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காரம்சந்த் பிரேம்சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi SC-34A/66 Tam.

பொண்ணு மனசு எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்கிடாமே எப்படிப் பாக்கு வெத்திலே மாத்திக்க முடியும்?''

''அனாவசியம். அறியாத பொண்ணு அறிஞ்சவங்க மனசுப்படிதான் நடக்கணும். என் தங்கச்சிக்கு எது நல்லது, எது கெட்டதுன்னு எனக்குத் தெரிஞ்சதை விடவா அதுக்குத் தெரியப் போகுது?'' என்று கண்டிப்பான குரலில் கூறிய காளியண்ணன் தன் கையில் பாக்கு வெற்றிலையை அள்ளி எடுத்தவாறு முனியாண்டியின் பக்கம் திரும்பி, ''ஏ மாப்பிளே, என்ன முழிக்கறே...எடு பாக்கு வெத்திலே'' என்று அதட்டினான்.

உதறும் கையால் பாக்கு வெற்றிலையைத் துளாவியவாறே பதற்றத்துடன் அவன் முகத்தைப் பார்த்தான் முனியாண்டி.

அதே சமயம் மங்கா திடும் பிரவேசமாக உள்ளே வந்தாள். அவளைப் பார்த்ததும் காளியண்ணன் விழிகள் இன்னும் பயங்கரமாகச் சிவந்தன.

''ஏ மங்கா, நீ எங்கே வந்தே இப்போ?'' என்று கத்தினான்.

விறைப்பாக இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு நின்ற மங்கா பாயில் வைக்கப்பட்டிருந்த தாம்பாளத்தை நோட்டம் விட்டாள். ''என்ன நடக்குது இங்கே? அடேடே அந்த மூக்கம் பய சொன்னது சரிதான்'' என்று ஏளனக் குரலில் கூறிய அவள் சட்டென்று முனியாண்டியின் பக்கம் திரும்பினாள்.

''ஏய்யா, எங்க வள்ளியக்காவுக்குப் பரிசம் போடவா வந்திருக்கே நீ?'' என்று கேட்டுவிட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். ''ஏய்யா, உன் கடையிலே மூலைக்கொண்ணு மூணு முகம் பாக்கற கண்ணாடி தொங்குதே. எதிலேயாவது உன் மூஞ்சியைப் பார்த்துக்கிடக் கூடாது? இந்தக் குரங்கு மூஞ்சிக்கு எங்க வள்ளியக்காவா கேக்குது? என்ன துணிச்சலய்யா உனக்கு?'' என்று மீண்டும் கடகடவென்று சிரித்தாள்.

''ஏ குரங்கு...இங்கேருந்து போறயா இல்லையா?'' என்று கத்தினான் காளியண்ணன்.

''எதுக்குப் போகணும்? எங்க வள்ளியக்காவுக்கு நான் இல்லாம கலியாணப் பேச்சு நடத்திட முடியுமா? ஏய்யா, என்ன அண்ணன்ய்யா நீ. எப்படிப்பட்ட தங்கச்சிக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பாத்து வந்திருக்கே? வெக்கமா இல்லே உனக்கு?''



மனைவி: நன்றாக இருக்கிறது! இன்னிக்குப் பெண் பார்க்க வர்றாங்க நீங்க 'கிரிக்கெட் மாட்ச்'க்குப் போவதாவது?

மணப்பெண்: ஆமாம், அப்பா! அந்த 'டிக்கட்'டை என்னிடம் கொடுங்கள் நான் போகிறேன்!

''மங்கா, என் கோபம் எந்த அளவுக்குப் போகும்னு எனக்கே தெரியாது. நீ இன்னமும் இந்த விஷயத்திலே தலை யிட்டே இந்த இடத்திலேயே உன்னைக் குழிதோண்டிப் புதைச்சிடுவேன்.''

''புதைச்சிடு. அதும்மேலே எனக்குச் சமாதி எழுப்பி அந்த மேடை மேலே தான் இந்தக் கலியாணம் நடக்க முடியும். துப்புக்கெட்ட ஆளு! யாரோ சொன்ன பேச்சைக் கேட்டுக்கிட்டு தங்கச்சி வாழ்விலேயே கொள்ளி வைக்கப் பாக்கிறியே. நீயும் ஒரு அண்ணனு?'' என்று சீற்றத்துடன் கத்தினாள் மங்கா.

திகைப்புடன் ஓரடி முன்வந்தாள் அஞ்சலையத்தை. ''மங்கா, அந்த அங்காயிப் பிசாசு மூட்டிவிட்டுத்தான் இவ்வளவும் நடக்குதா?'' என்று கேட்டாள்.

''ஆமா அத்தே... இதோ உக்காந்திருக்காரே நாட்டாமை ஸ்தானத்திலே. அவர் வீட்டுப் பிசாசு மூட்டிவிட்ட கொள்ளிதான் இது. பெருஞ்சாதியை அடக்கி வைக்கத் துப்பில்லாமே பரிசத்துக்கு நாட்டாமை நடத்த வந்திருக்கிற மூஞ்சியைப் பாரு. தூ!''

மங்காவின் இந்த நேரடித் தாக்குதலால் மாயாண்டி வெலவெலத்துப் போனான். ''காளித் தம்பி, எனக்கு ஒண்ணும் தெரியாது. என்னை இதிலே இழுக்காதே தம்பி. நான் போயிடறேன்'' என்று எழுந்திருக்க முயன்றான் அவன்.

அவன் கையைப் பிடித்துச் சுண்டி இழுத்து அவனை உட்கார வைத்த காளியண்ணன் உக்கிரமாக மங்காவை நோக்கினான்.

''ஏ மங்கா, பொஞ்சாதியை அடக்கி வைக்க மாயாண்டியண்ணனுக்கு துப்பு இருக்கோ இல்லையோ, என் தங்கச்சியை அடக்கி வைக்க எனக்குத் துப்பு இருக்கு. இந்த விஷயத்திலே என் தீர்ப்புத்தான் முடிவானது. முனியாண்டிதான் அவ கழுத்திலே தாலி கட்டணும். ஏ மாப்பிளே, இன்னும் ஏன் திருதிருன்னு முழிச்சிக்கிட்டிருக்கே! பிடி பாக்கு வெத்திலே'' என்று தன் கையிலிருந்த பாக்கு வெற்றிலையை அவன் பக்கம் நீட்டினான். முனியாண்டி தயக்கத்துடன் அதை வாங்கக் கையை நீட்டப் போன அதே சமயத்தில் மங்கா சட்டென்று பாய்ந்து காளியண்ணனின் கையை ஒரே தட்டாகத் தட்டி விட்டாள். பாக்குகளும் வெற்றிலைகளும் நாலா பக்கமும் சிதறின.

தாங்க முடியாத ஆவேசத்துடன் அவள் கூந்தலைப் பற்றியபடியே எழுந்த காளியண்ணன் ''துரோகி, அவ்வளவு திமிரா உனக்கு. உன்னை என்ன செய்யறேன் பாரு'' என்று கர்ஜித்தவாறு அவளைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு போய் அவள் தலையைச் சுவரில் மோத ஆரம்பித்தான்.

''தம்பி, வேண்டாம் வேண்டாம்...'' என்று கத்திக் கொண்டே முன்னே பாய்ந்து அவனைத் தடுக்க முயன்றாள் அஞ்சலையத்தை.

''தடுக்காதீங்க அத்தை.. இந்த ஆளு என்னைக் கொன்னாலும் கொல்லட்டும். ஆனா இவங்க பாக்கு வெத்திலை மாத்திக்கிடறது மட்டும் ஒருநாளும் நடக்காது! என் உயிரே போனாலும் சரி'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறினாள் மங்கா.

''மங்கா... மங்கா!''

வள்ளியின் குரல் கேட்டதும் ஒரு கணம் திகைத்து நின்ற காளியண்ணன் மங்காவைப் பிடித்திருந்த பிடியைச் சற்றுத் தளர்த்தி அவள் பக்கம் திரும்பினான். உள்ளிருந்து ஓடிவந்த வள்ளி, சட்டென்று பாய்ந்து மங்காவின் தோளைப் பற்றித் தன் பக்கம் இழுத்துக்கொண்டு படீரென்று அவள் கன்னத்தில் ஓர் அறை விட்டாள்.

''அக்கா'' என்று திகைப்புடன் கத்தி விட்டாள் மங்கா.

''அக்காவாம் அக்கா!... உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கா? எனக்கும் எங்கண்ணனுக்கும் மத்தியிலே தலையிடறதுக்கு நீ யாரு?''

''நான் யாரா? அக்கா, நீதான் இந்தக் கேள்வியைக் கேக்கிறியா?''

''சந்தேகமில்லாமே. எங்கண்ணன் வார்த்தையை நான் என்னிக்காவது தட்டி நடந்திருக்கிறேனா? அதைப் புரிஞ்சுக்கிடாமே எனக்காக உயிரைக் குடுக்க வந்திருக்காளாம் உயிரை! பைத்தியம்... பைத்தியம்.''

கலங்கிய கண்களுடன் நிதானமாக அவளைப் பார்த்தாள் மங்கா.

''அக்கா, மெய்யாத்தான் சொல்லறியா? நீயும் சம்மதிச்சுத்தான் இதெல்லாம் நடக்குதா?''

''நான் சம்மதிக்கலேன்னு உனக்கு யாரு சொன்னா? எனக்கு எது நல்லது என்று அண்ணன் நெனைக்குதோ அதையே மனப்பூர்வமாக ஏத்துக்கிட நான் என்னிக்குமே தயங்கினது கிடையாதே.''

அஞ்சலையத்தை வள்ளியை வியப்புடன் பார்த்தாள். காளியண்ணன் பெருமையுடன் பார்த்தான்.

துவண்டு வள்ளியின் தோளில் சாய்ந்த மங்கா, விம்மலுக்கிடையே கூறினாள்... ''வள்ளியக்கா, ஒரு வெள்ளிக்கிழமை தவறாமே கௌரியம்மனுக்குப் படையல் படைச்சு பிரார்த்தனை செலுத்தினியே, நானும் ஒரு வெள்ளிக் கிழமை தவறாமே உன்கூட வந்து, உனக்காக கௌரியம்மனை வேண்டிக்கிட்டேனே; எல்லாம் இதுக்குத்தானா? கௌரியம்மனே கண்ணை மூடிக்கிடுச்சா?''

''அப்படியில்லே மங்கா. கௌரியம்மன் மேலே நமக்கு உண்மையான பக்தி இருந்தா நடக்கிறது எல்லாம் நல்லதுக்குத்தான் நடக்குதுன்னு நம்பணும்'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறியவாறே அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள் வள்ளி.

அவள் கையை மெதுவாக விலக்கிய மங்கா ''நீ நம்பு அக்கா. ஆனா நான் நம்பத் தயாராயில்லே. நான் வெறும் காட்டுமிராண்டி. என் மனசுக்கு அவ்வளவு பக்குவம் வரல்லே'' என்று கூறிக்கொண்டே தள்ளாடும் நடையுடன் வெளியே சென்றாள்.

''மாப்பிள்ளே, மாயாண்டி, மாத்துங்க பாக்கு வெத்திலை'' என்று உற்சாகமாகக் கத்தினான் காளி.

நெஞ்சை யடைக்கும் துக்கத்துடன் உள்ளே சென்றாள் வள்ளி. (தொடரும்)



ப்ளேடோ குடும்பத்தின் புதிய பேனா இதுதான் — ப்ளேடோ 222





இந்தப் புதிய ப்ளேடோ 222 பேனாவை கையில் பிடித்துப் பாருங்கள். கையில் எவ்வளவு சுகமாக உட்காருகிறது; தொப்பியைச் சற்றே மேல்நோக்கி அழுத்தவும்—எழுதத் தயாராகச் சடுதியில் முன்வருகிறது — எழுதத் தொடங்குங்கள் — மெல்லிய நிப்பு வழவழவென்று நழுவிக் கொண்டே ஓடுகிறது — மூடப்பட்ட உதட்டில் மை கசிந்து ஊறுகிறது. அதன் தங்க நிற மூடியைப் பாருங்கள்— ரசாயன பூச்சு பூசப்பட்டது — துரு ஏறாது — எப்போதும் தங்க நிறமாகவே இருக்கக் கூடியது! பல வண்ணப் பேனாக்களிலிருந்து பிடித்த வண்ணத்தையும் மை ஊற்றும் லாகவத்தையும் தேர்ந்தெடுங்கள். என்ன விலை என்கிறீர்களா? வெறும் 5 ரூபாய் 50 காசுதான்.

plato 222 a mhatre product

PLATO REGD.

பூரண விநியோகஸ்தர்கள் :

பெஸ்ட் பவுண்டன் பென் டெப்போ :

79, தேவ்கரன் மான்ஷன், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2



கோவாவின்
சரித்திரத்தில்
ஓர் ஏடு

அறம் காத்த அராபியன்

வி. எஸ்.
ஸுக்டண்கர்

கோவாவின் ஸால்ஸெட் பகுதியில் சந்தூர் என்று ஒரு கிராமம் இன்று உள்ளது. முன்னாளில் அது சந்திரபுரி என்று அழைக்கப்பட்டு வந்தது. பரோதெம் நதியின் இடக்கரையில் அமைந்துள்ளது இந்தச் சந்திரபுரி. அந்நாளில் அராபிக் கடலில் சென்ற வியாபாரக் கப்பல்கள் பலவும் இந்தச் சந்திரபுரிக்கு வந்து வாணிபம் பெருக உதவின. ஆகவே கடம்பர்கள் இந்தச் சந்திரபுரியையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ய முற்பட்டனர். பதினோராம் நூற்றாண்டிலிருந்து பல காலம் வரை கடம்பர்கள் கோவாவின் சரித்திரத்தில் ஒரு முக்கிய ஸ்தானம் வகித்தார்கள். இக்கடம்பர்களில் ஒருவன் குஹல்ல தேவன் எனப் பெயர் கொண்டவன். இவன் ஒரு சமயம் சந்திரபுரியிலிருந்து கப்பலில் ஏறிப் புறப்பட்டான், சோமேசுவரம் சென்று சோமநாத்தைத் தரிசித்துத் திரும்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு. இந்தப் புனித யாத்திரையைத் தொடங்கியவன் கொஞ்ச ஆரம் சென்றதுமே கப்பலின் பாய்மரம் முறிந்தது கண்டு மனமுடைந்தான். அருகிலிருந்த துறைமுகத்தில் ஒதுங்கினான். அப்படி அவன் கப்பல் ஒதுங்கிய இடம் அன்று கோபக பட்டினம் என்று அழைக்கப்பட்டு வந்தது. கோபக பட்டினம் என்பதே இன்று கோவாவாகி யிருக்கிறது. அந்நாளில் கோவாவின் தெற்குப் பகுதியில் ஷில்ஹாரா வம்சத்து அரசர்கள் ஆண்டு வந்தனர். இவர்களது தலைநகரம்தான் கோபக பட்டினம்.

இதே கோபகபட்டினத்தில் வியாபார நிமித்தம் வந்திருந்த சில அராபியர்களும் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டிருந்தனர். இந்த அராபியர்களுக்குள் செல்வம் மிகுந்த ஒருவனுன மதுமாத் என்பவன், கப்பலின் பாய்மரம் முறிந்து போகவே கரையில் ஒதுங்கிய குஹல்ல தேவ மன்னனுக்கு உதவ முன்வந்தான். அவனுக்குத் தங்கி இருக்க இருப்பிடமும், கப்பலைச் சீராக்கிக் கொள்ள வசதிகளும் செய்து கொடுத்தான். இதனால் மனமகிழ்ந்து போனான் குஹல்ல தேவன்.

நாட்கள் சென்றன. குஹல்ல தேவனுக்குப் பிறகு ஜெயகேசி பட்டத்துக்கு வந்தான். அவன் கோவாவின் தெற்குப் பகுதியில் ஆண்டுவந்த ஷில்ஹாரா வம்சத்தை முறியடித்து வெற்றி கொண்டான். தனது தலைநகரையும் சந்திரபுரியிலிருந்து கோபக பட்டினத்துக்கு மாற்றிக் கொண்டான்.

அப்போது ஜெயகேசி, முன்பு குஹல்ல தேவனுக்கு உதவிய மதுமாத்தை மறக்கவில்லை. மதுமாத் இப்போது உயிருடன் இல்லாவிட்டாலும் அவனுடைய பேரன்

ஸதன் கோபகபட்டினத்தில் இருப்பதை அறிந்து அவனே வரவழைத்தான். அவனேயே தனது மந்திரிகளில் ஒருவனுகவும் தனது கொங்கண தேசத்துக்கே கவர்னராகவும் நியமித்தான்.

ஸதன் திறமை மிக்கவனுகவும் நேர்மை யுள்ளவனுகவும் பரந்த மனப்பான்மை கொண்டவனுகவும் விளங்கித் தனது பொறுப் புக்களை நன்கு நிறைவேற்றி வந்தான்.

அவனது புத்தி சாதுர்யத்தினுல் நாட்டில் பொருமைப் பகைகள் சதித் திட்டங்கள் எல்லாம் ஒழிந்தன. அமைதியும் அன்பும் நிலவியது. ஸதனின் திறமை கண்டு மற்ற மந்திரிகளும் அவனுடன் முழுமையாக ஒத் துழைக்கத் தீர்மானித்தனர்.

ஸதன் கோவாவை அந்நாட்களில் இந்தி யாவிலேயே மிகுந்த செல்வமும் செல்வாக் கும் கொண்ட நாடாக உருவாக்கிக் காண் பித்தான்.

சிறந்த நிர்வாகம் நடத்தியது மட்டுமல்ல. இந்தியாவில் வேறெங்கும் காண முடியாத அளவுக்கு முதல் தரமான, பலமான கடற் படையைத் திட்டமிட்டுத் தயாரித்தான்.

எனினும் சரித்திர ஆசிரியர்கள் ஸதனு டைய மனிதாபிமானத்தையே பெரிதாக மதித்துப் போற்றுகின்றனர். 1053 ஆம் ஆண்டு ஒரு தர்மசாலையை ஏற்படுத்தினுன் ஸதன். இங்கே பசி, பிணி, மூப்பு இவற்றை உணரும் யார் வேணுமானுலும் வந்து உதவி கோரிப் பெறலாம். இந்தத் தர்மசாலையை நன்கு நடத்தப் பணம் வேண்டுமே? அதற் காக ஒரு புது வரி விதித்தான் ஸதன். அயல் நாட்டிலிருந்து வந்து கோவாவுடன் வியா பாரத் தொடர்பு கொள்ளும் எல்லாக் கப்பல் களும் இந்த வரியைச் செலுத்தின. அத் துடன் கோவாவில் சந்ததியின்றி யாரேனும் மரணமடைந்தால் அவர்களுடைய சொத்து முழுதும் இந்தத் தர்மசாலைக்கு உரியது என்று சட்டம் இயற்றினுன். அதுவரை சந்ததி இன்றி இறப்போரது சொத்துக்க ளெல்லாம் அரசனேயே சென்றடைந்து வந்தன. பரம்பரை பரம்பரையாக வந்துள்ள இந்த வழக்கத்தை ஸதன் துணிந்து மாற்றினுன்.

ஸதன் போட்ட பலமான அஸ்திவாரம் காரணமாக அடுத்த இரு நூற்றுண்டுகளுக்குக் கடம்பர்கள் கவலையேதுமின்றிச் சீரும் சிறப்பும் மிக்கவர்களாய்க் கோவாவில் ஆட்சி நடத்திவர முடிந்தது!



அகிலாண்ட நாயகியே!

மூக்கொம்பின் கீழ்பால் முகிழ்த்ததொரு மோகனமே!
பக்கமெலாம் நாவற் பழமரங்கள் சூழ்ந்திருக்கத்
தன்னந் தனியனுய்த் தானுகி நின்றவனே
மன்னனென்றும் காதல் மணுளனென்றும்
கொண்டவனே!
வெண்மருப்பு வேழமொன்றும் விந்தைச் சிலந்தி
யொன்றும்
பண்ணுந் திருக்கூத்தைப் பார்த்து மகிழ்ந்தவனே!
மீனக் கொடியுயர்த்தும் மேலரசி யாயிருந்தும்
ஆனைக்கா வாழ்விலென்ன ஆனந்தங் கண்டாயோ?
பார்மகளை உனஅண்ணன் பக்கத் திருத்திடவும்
நீர்மகளைக் காதலித்தான் நின்கணவன்! ஆதலினுல்
ஒப்புக்குஇங் குன்னை உடலிலே பங்கிட்டும்
அப்புக்குள் மூழ்கி அவனுடனே என்றென்றும்
செப்பரிய இன்பந் தினைக்கிறுன்! இவ்வஞ்சம்
சற்றும் அறியாமல் சரசங்கள் ஆடுகிறுய்!
காதலியைத் தேடிவந்த காமுகனுக் காகவன்று
பாதம்பெயர்த்துவந்தாய் பைந்தமிழைத்தந்துநின்றுய்!
ஆருயிரின் தாயே அகிலாண்ட நாயகியே!
கருதிப் பொருள்கடந்த சுந்தரி நின் மெல்லடிகள்
கருதும் அடியேனைக் கா.

வித்வான் எஸ்.வி. துரைசாமி



இலக்கியப் பரிசுகள்


எஸ். பாபு

[உலகத்தில் பிரசித்தமாக வழங்கப்படுகின்ற இலக்கியப் பரிசுகளைப் பற்றிய சுவாரஸ்யமான சில தகவல்களைத் தமிழர்களும் அறிந்து வைத்துக் கொள்ளலாமே!]

உலக மொழிகளிலே அதிகமாக இலக்கியப் பிரக்ஞையுடைத்த மொழி என்று பெயர் பெற்றது ஃபிரெஞ்சு மொழிதான். ஃபிரெஞ்சு மொழி நூல்களுக்கு ஓர் ஆண்டில் சற்றேறக்குறைய ஆயிரம் பரிசுகள் அளிக்கப்படுகின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக இதில் ஐந்து பரிசுகள் மிகவும் முக்கியமானவை என்று கருதப்படுகின்றன. கான்கோர், ரெனுடோ, ஃபெமினா, மெடிச்சி, இன்டராலி இவை ஐந்தும் இந்த வரிசையில் முக்கியமானவை.

எட்மண்ட் டி கான்கோர் என்பவர் 1884ல் தமது உயில் மூலம் ''பழைமை பாராட்டாத ஒரு நூலுக்குப் பரிசு அளிக்க வேண்டும்'' என்று ஏற்பாடு செய்தார். ''வாலிபத்துக்கும், கற்பனைப் புதுமைக்கும், உருவத்திலும், கருத்திலும் புரட்சிக்கும் முதலிடமும் முக்கியத்துவமும் தந்து பரிசு தீர்மானிக்கப்பட வேண்டும்'' என்று அவர் உயில் கூறுகிறது. ஆரம்பத்தில் வாலிபத்துக்கு முக்கியத்துவம் தந்த நீதிபதிகளுக்கு வயசு ஆக ஆக (அவர்கள் சாகும் வரை நீதிபதிகளாக இருப்பார்கள்) வாலிபத்துக்கு முக்கியத்துவம் குறைகிறது என்று புகார்கள் சமீப காலமாக அடிபடுகின்றன. இந்த உயில்படி முதல் தடவையாகப் பரிசு 1903ல் அளிக்கப்பட்டது. பரிசுத் தொகை வெறும் அறுபதே ரூபாய்தான். ஆனால் கான்கோர் பரிசு பெற்ற நாவல் இன்றுள்ள நிலையில் இரண்டு லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் பிரதிகள் விற்கும் என்றும், ராயல்டித் தொகையாக ஆசிரியருக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்க்கும் அதிகமாகக் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்திருப்பதால் இதற்குப் போட்டி அதிகம். பரிசு பெற்ற நாவல்பற்றி விவாதங்கள் காரசாரமாகவே தேசம் முழுவதிலும் அடிபடும். ஆனால் இப்படிப் பரிசு பெற்ற நாவல்களில் ஒரு சிலவே தான் அடுத்த தலைமுறை வரை நீடித்து நிலைக்கும். இந்தப் பரிசைத் தீர்மானிக்கும் அட்வைஸரி அங்கத்தினர்கள் பத்துப்பேரில் ஆறு பேர்கள் ஆறு வருஷங்களில் வரிசையாகப் பரிசு பெற்றனர். அது தவறு என்று ஒரு குற்றச்சாட்டு ஃபிரெஞ்சுப் பத்திரிகைகளில் அமர்க்களப்பட்டது.



ஃபெமினா பரிசை இரண்டு ஸ்திரீகளின் பத்திரிகைகள் 1904 முதல் அளிக்கின்றன. ஃபெமினா பரிசு பெற்ற நாவல் ஒரு லட்சம் பிரதிகளாவது உடனடியாக விற்பனையாகும் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இந்த இரு பரிசுகளும் அளிக்கப்படாத அவ்வாண்டின் மிகச் சிறந்த நாவலுக்கு அளிப்பதற்கென்று ரெனுடோ பரிசு ஏற்படுத்தப் பட்டது. பழைய நாவல் பாணிகளை அழிப்பதற்காக என்று எழுதப்பட்ட சிறந்த நாவலுக்கென்று 1957ல் மெடிச்சி பரிசு ஏற்படுத்தப்பட்டது. இன்டராலி என்கிற பரிசு ஃப்ரெஞ்சுக்காரர்கள் மட்டுமின்றி எந்த மொழி இலக்கியாசிரியருக்கும் அளிக்கப்படலாம். பரிசாகப் பணம் எதுவும் கிடையாது; நீதிபதிகளுடன் ஆசிரியருக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் விருந்தளிக்கப்படும்.

உலகத்தின் முன்னணியில் நிற்கும் ஃபிரெஞ்சு மொழியிலக்கியப் பரிசுகள் பற்றிச் சொல்வதற்கு நிறைய உண்டு. ஆண்டுதோறும் இவை அளிக்கப்பட அளிக்கப்பட விவாதங்களும், சண்டைகளும் வலுக்கும். நல்ல இலக்கியாசிரியர்கள் யாருக்கும் சாதாரணமாக இந்தப் பரிசுகள் எதுவும் அளிக்கப்படுவதில்லை; தப்பித்தவறி அளிக்கப்பட்டாலும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஜுலியன் கிராக்கு என்பவருக்கு கான்கோர் பரிசு அளிக்-

கப்பட்டது. "ஏதோ போட்டி மனப்பான்மையில் இயங்கும் இந்த லாட்டரிப் பரிசு எனக்கு வேண்டாம்" என்று அவர் சொல்லி விட்டார். 1945ல் ஜீன் ஹாயி போரி என்பவர் அதே பரிசைப் பெற்றார்; "அதன் கெடுதலான பாதிப்பை மீறி இலக்கியம் செய்ய எனக்குப் பத்து வருஷங்கள் ஆயின" என்றார் அவர். பல இலக்கியாசிரியர்களுக்கு — ஜீட், ஃபிரான்சு, க்ளாடெல், மோரியக் போன்றவர்களுக்கு எந்த ஃபிரெஞ்சு இலக்கியப் பரிசுமே அளிக்கப்பட்டதில்லை.

உலகத்தின் கவனம் முழுவதையும் கவருகிற மற்றுமோர் இலக்கியப் பரிசு நோபல் பரிசாகும். பரிசுத் தொகை அளவில் இது மிகப் பெரிது — ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபாயாகும் இதன் இன்றைய மதிப்பு. உலகத்தில் சிறந்த இலக்கியாசிரியர்கள் பலர் இந்தப் பரிசு பெற்றிருக்கிறார்கள். இந்த 65 ஆண்டுகளில் அதே அளவு நல்ல இலக்கியாசிரியர்களுக்கு அளிக்கப்படாதிருந்ததும் உண்டு. ஆன்டன் செகாவ், ஹென்ரிக் இப்ஸென், டால்ஸ்டாய், தாமஸ் ஹார்டி, ஜேம்ஸ் ஜாய்ஸ், மார்செல் ப்ரூஸ்ட், போல் வலேரி, மாக்ஸிம் கார்க்கி, டி.எச். லாரென்ஸ் போன்ற இலக்கியாசிரியர்களுக்கு இந்தப் பரிசு கிடைக்கவேயில்லை.

"வில்லியம் ஃபாக்னருக்கு நோபல் இலக்கியப் பரிசு கிடைத்த பிறகு அவர் பழைய ஃபாக்னர் அல்ல. ஸ்டாக்ஹோம் புண்ணியப் பிரயாணத்துக்குப் பிறகு அவர் இரண்டாந்தர இலக்கியாசிரியர் ஆகிவிட்டார். கட்சி ஈடுபாடு, பத்திரிகாசிரியர்களுக்குக் கடிதங்கள் என்று இலக்கியத் தரமற்ற பல காரியங்கள் செய்யத் தொடங்கி விட்டார்" என்பது அமெரிக்க விமரிசகர்களின் அபிப்பிராயம். நோபல் இலக்கியப் பரிசின் ஒரு தரம் என்னவென்றால் அது சில சமயம் நல்ல இலக்கியாசிரியர்களுக்கும் கிடைத்து விடுவதுண்டு. இப்படிப் பரிசு பெற்றவர்களில் ஜீடு, பிராஸன், டெல்லோ, லேகர் க்விஸ்டு, தாமஸ் மான், அநடோல் ஃபிரான்ஸ், பெனுபண்டே, ஸெல்மா லாகர்லெவ், ப்யோர்ன்ஸன், ஃபாக்னர் முதலியவர்களைச் சொல்ல வேண்டும்.

இந்தியாவில் ரவீந்திரநாத தாகூருக்கு இலக்கியப் பரிசு அளிக்கப்பட்ட பின்தான் இந்திய தேசத்திலிருந்து அதிகமாகப் பெயர்கள் சிபாரிசு செய்யப்படுகின்றன என்று நோபல் பரிசுக் கமிட்டி சார்பாக வெளியாகியுள்ள நூல் கூறுகிறது. தமிழ்க் கவி சுப்பிரமணிய பாரதியார், ரவீந்திரநாத தாகூருக்கு "இந்த நோபல் பரிசு கிடைக்க என்ன ஓய் செய்ய வேணும்?" என்று கேட்டு ஒரு கடிதம் எழுதியதாக எட்வர்டு தாம்ஸன் என்பவர் எழுதியுள்ள தாகூர் சரித்திரத்தில் கூறியுள்ளார். போன வருஷம் நோபல் பரிசு எஸ். எச். வாத்ஸ்யாயன் என்கிற ஹிந்தி இலக்கியாசிரியர் "அக்ஞெய்"க்குக் கிடைக்க வேண்டும் என்று பலரும் சிபாரிசு செய்ததாகத் தெரிகிறது. ஆனால் பரிசு ருஷ்ய நாவலாசிரியர் ஷோலோகாவுக்குக் கிடைத்தது.

அமெரிக்காவிலும் ஏராளமான இலக்கியப் பரிசுகள் ஆண்டுதோறும் அளிக்கப்பெறுகின்றன. 1935ல் இலக்கியப் பரிசு பெற்றவர் பட்டியல் எழுபத்தி ஒன்பது பக்கங்களில் அடங்கின என்றும், அந்தப் பட்டியல் 1963ல் இருநூற்றி எண்பது பக்கங்களாக வளர்ந்து விட்டது என்றும் கூறுகிறார்கள். அமெரிக்காவின் தேசியப் பரிசான புலிட்ஸர் பரிசை 1926ல் ஸின்க்ளேர் லூயிஸ் என்பவர் ஏற்க மறுத்தார். மற்றபடி மற்ற யாரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்தப் பரிசுகளை



பாஸ்டர்நாக்

(முன் பக்கத்தில் இருப்பவர் ஹெமிங்வே)



கவி ரவீந்திரர்



கார்ல் மார்க்ஸ்

ஏற்க மறுத்ததில்லை. ஓர் ஆண்டில் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் மதிப்புக்கு இலக்கியப் பரிசுகள் அளிக்கப்பெறுகின்றன. சில சமயம் நல்ல இலக்கியாசிரியர்களுக்கும், பல சமயங்களில் இரண்டாந்தரமானவர்களுக்கும் இது அளிக்கப்படுவதுண்டு. சில சமயம் பரிசு நியாயம் என்றும், பல சமயங்களில் அநியாயம் என்றும் விவாதிக்கப்பட்டதுண்டு. பத்திரிகை எழுத்து, ஜீவியம், நாடகம் என்று பல துறைகளிலும் நல்ல மதிப்பு உண்டாக்கும் நூல்களுக்கே பரிசு தரப்பட வேண்டும் என்பது புலிட்ஸர் நோக்கம்—நாற்பத்தியேழு ஆண்டுகளாக அது அளிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் பல பரிசுகள் பெற்ற சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அநேகமாக எல்லாப் பரிசுக் கமிட்டிகளிலும் அங்கத்தினர்களாக இருப்பவர்கள்.

ஜப்பானில் ஆண்டுதோறும் கவிதைப் போட்டி நடக்கும். 1963-ல் இதற்கு 7,491 கவிதைகள் போட்டியிட்டனவாம். சக்கரவர்த்தி ஹிரோஹிடோ கூடப் போட்டிக்குக் கவிதை அனுப்பினார்.

இங்கிலாந்தில் இலக்கியப் பரிசுகள் பற்றி அதிகக் கவனம் செலுத்துவதில்லை. ஒரு மதுபானக் கம்பெனி நடத்திய கின்னஸ் கவிதைப் போட்டி சமீபத்தில் நிறுத்தப்பட்டு விட்டது; அதற்கு ஆண்டில் மூவாயிரம் கவிதைகள் வருமாம். ஃபிரெஞ்சு கான்கோர் பரிசு போல முக்கியமானதாகக் கருதப்படுவது ஹாதார்ண்டன் பரிசு எனப்படுவது — சிறந்த கவிதை நூலுக்கு 1919 முதல் அளிக்கப்பட்டு வருகிறது. இங்கிலாந்தின் பல சிறந்த இலக்கியாசிரியர்கள் இந்தப் பரிசு பெற்றுள்ளார்கள். சமீபத்தில் டாம் மொரேயஸ் என்கிற இந்தியக் (ஆங்கில) கவிக்கு இப்பரிசு அளிக்கப்பட்டது. இந்தப் பரிசு கிடைப்பதால் புத்தக விற்பனை எந்த விதத்திலும் அதிகரிப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். நாற்பத்தியொரு வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே இப்பரிசுக்கு ஏற்கப்படுவர் என்பது ஒரு விதி.

ஸ்பெயினில் ஊருக்கு ஓர் இலக்கியப் பரிசுப் போட்டி வருஷா வருஷம் நடக்கிறது என்று கூறுகிறார்கள். சில சமயம் ஜெல்லிக்கட்டு வீரனுக்கு அடுத்தபடியாக இலக்கியப் பரிசு பெற்ற வீரனை ஸ்பானிய மக்கள் பாராட்டுவார்களாம். புத்தகங்கள் அதிகமாக ஸ்பெயினில் விற்பதில்லை என்பதனால், ஆசிரியன் ஏதாவது பரிசு பெற்றாலொழிய வாழ்க்கை நடத்த முடியாது என்பது அவர்கள் நிலைமையாம்.

இத்தாலியில் நூறுக்கும் அதிகமான இலக்கியப் பரிசுகள் உள்ளன. இலக்கியப் பரிசுகள் பற்றிய விவாதங்கள், ஃபிரான்சுக்கு அடுத்தபடியாக இத்தாலியில்தான் அதிகம் என்று சொல்கிறார்கள். ஒரு பரிசுக்கு ஹெமிங்வே பரிசு என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஜெர்மனியில் 128 இலக்கியப் பரிசுகள் ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றன. பல வெளிநாட்டு எழுத்தாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. 1957ல் தார்ண்டன் வைல்டர் என்கிற அமெரிக்க நாவலாசிரியர்-நாடகாசிரியருக்கு "மனிதர்களுக்குள்ளே சமாதானத்துக்காக இலக்கியம் மூலம் உழைத்தவர்" என்று பன்னிரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள பரிசு அளிக்கப்பட்டது.


குண்டர் கிராஸ் என்கிற இன்றைய மிகச் சிறந்த ஜெர்மன் நாவலாசிரியருக்கு ஜெர்மன் இலக்கியப் பரிசு எதுவும் இதுவரை கிட்டவில்லை. "தகர முரசு" என்கிற அவர் நாவலுக்கு ஃபிரெஞ்சு தேசத்தவர் அளிக்கும் அந்நிய மொழிச் சிறந்த நாவல் பரிசு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புயல் ஏன்?

எவ்வருடமும் இல்லாதபடி சென்ற ஆண்டில் அடிக்கடி புயல் உருவானது ஏன்? இதற்குக் காரணம் சூரியனில் ஏற்பட்ட புள்ளிகள் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இப்புள்ளிகளின் வெப்ப நிலை 4500 சென்டிகிரேட். சூரியப் புள்ளிகள் தோன்றும்போது ஏற்படும் வெப்பமும் மின் அலைகளும் பூமியின் வெளி மண்டலத்தை அடைந்து வெப்பமடையச் செய்கின்றன. வெப்பம் அடைந்த காற்று மேல் நோக்கிச் செல்வதால் அங்கு காற்று அழுத்தம் குறைகிறது. அந்த இடத்தை நோக்கி நான்கு புறங்களிலிருந்தும் காற்று வீசுவதால் புயல் ஏற்படுகிறது.

பதினொரு ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியப் புள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. சென்ற ஆண்டில் இவ்விதம் நிகழ்ந்ததால் அப்படிப் புயல் உருவாயிற்று.

ஆதாரம்: சோவியத் நாடு. தகவல்: எஸ். என்.



மகாத்மா காந்தி

1934ல் காங்கிரஸை விட்டு விலகினர்

நீங்களோ?

காங்கிரஸ் உண்மையிலேயே மக்கள் கட்சிதானா?

இதற்கு விடைகாண, உங்களை நீங்களே பின்வரும் கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்:
இன்று நாட்டில் நடப்பதென்ன?
கடந்த 15 ஆண்டுகளில், காங்கிரஸ் திட்டத்தின்கீழ்

- உணவுப் பற்றாக்குறைகள் மூன்று மடங்காக அதிகரித்துவிட்டன
- விலைவாசிகளோ நான்கு மடங்காக உயர்ந்துவிட்டன
- வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்படுபவர்களின் எண்ணிக்கை 1 கோடியை மிஞ்சிவிட்டது

இனியும் காங்கிரஸ் கட்சியை ஆட்சிபீடத்தில் இருக்க அனுமதிப்பது நாட்டின் நலனுக்கு ஏற்றதுதானா?

காந்தியடிகள் 1934ல் இதற்கு விடை கண்டார். நீங்களோ?

உண்மையிலேயே மக்கள் கட்சி எது?

- துய்ப்போருடைய (பொதுமக்களின்) உரிமையின் உயர்நிலையை உணர்ந்து மதிக்கும் கட்சி
- விவசாயி, உழைப்பாளி மற்றும் உற்பத்தியாளரின் பரிபூரண பொருளாதார சுதந்திரத்திற்கு பாடுபடும் கட்சி
- பொதுமக்களின் அத்தியாவசியமான தேவைகளான உணவு, உடுக்கை, இருப்பிடம் ஆகியவற்றின் பூர்த்திக்கு மற்றெதையும்விட முதன்மையான ஸ்தானம் கொடுக்கும் கட்சி
- நாட்டின் ஜனத்தொகையில் 70% உள்ள கிராமிய மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய நியாயமான உரிமைகளை வழங்கப் பாடுபடும் கட்சி

இத்தகைய கட்சி சுதந்திராக் கட்சியே

அடுத்துவரும் பொதுத்தேர்தலில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வோட் செய்வதற்கு முன் நன்றாக யோசனை செய்து இந்த வாய்ப்பை சரியானபடி பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

5 வருடங்களுக்குப் பிறகு காலம் கடந்துவிடக்கூடும்

சுதந்திராக் கட்சிக்கே வோட் செய்யுங்கள்

தெருக் காவல்

கமல் ஜோஷி





நாய்; தெரு நாய்.

அந்த நாய்க்கு உரிமை பாராட்ட யாரும் கிடையாது. உயர் சாதி நாய்க்கு அன்புக் கன்பாகப் பிறந்த குட்டியல்ல. வீடு வீடாக, தெருத் தெருவாக அலைந்து திரியும் தெரு நாய்க்குப் பிறந்த குட்டி அது. அதோடு கூடப் பிறந்த குட்டிகள் வயிற்றுப் பாட்டுக்கு வீங்கித் துரும்பாக இளைத்து மரித்தனவோ, அல்லது ஏதாவது காரின் சக்கரத்தினடியில் நசுங்கிச் செத்தனவோ, தெரியாது. ஆனால் எந்த மந்திர சக்தியின் உதவி கொண்டோ?–அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்–டைப்பூ மட்டும் உயிரோடு இருந்தது. அன்றூடம் உடற் பலம் பெற்று வலிவோடு வாலிபப் பருவத்தையும் அடைந்தது.

நகரத்தில் இத்தனை இடங்கள் இருக்கும் போது அந்தக் குருட்டுச் சந்தின் முனையை அது தன் இருப்பிடமாக ஏன்தான் ஆக்கிக் கொண்டதோ? — இது அந்த டைப்பூவுக்கு மட்டும்தான் தெரியும். பகல் நேரங்களில் இங்கும் அங்கும் அலைந்து திரியும். சுதந்திர மாக, யாருக்கும் கைகட்டிச் சேவகம் புரியாமல் தன் வாழ்க்கையை நடத்தும். ஆனால் மாலை ஆனதும் அங்கே வந்து அமர்ந்து விடும், காவற்காரனைப் போல. அப்புறம் தெரிந்தவர்களானாலும் சரி, அந்தத் தெருவிலேயே வாழ்பவர்களானாலும் சரி, முன்னெச்சரிக்கையோடு ஜாக்கிரதையாகத்தான் அந்தத் தெருவுக்குள் நுழைய வேண்டும். யாராவது

முன்பின் அறிமுகமில்லாத அந்நியனாக இருந்து விட்டால், ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். டப்பூவின் காரணமாகத்தான் அந்தத் தெருவில் திருடர்கள் கூட நுழைய அஞ்சி வந்தார்கள்.

அந்த நாய்க்கு டப்பூ என்று யார் எப்பொழுது பெயர் வைத்தார்களோ, இதுவும் யாருக்கும் தெரியாது. ஆனால் கையில் ரொட்டித் துண்டமோ அல்லது வேறு ஏதாவது தின்பண்டமோ எடுத்துக்கொண்டு 'டப்பூ, டப்பூ' என்று யாராவது கூப்பிட்டால் போதும், எங்கிருந்தாலும் அது ஓடி வந்துவிடும். தனது நீண்ட நாக்கை ஆசையோடு நீட்டும். அழுக்கேறிக் கிடக்கும் தன் நீண்டு சுருண்ட வாலை ஆர்வத்தோடு ஆட்டும். விழிகளில் நீர் நிறைய நன்றியறிதலோடு நோக்கும். பிறகு தனக்குக் கிடைத்த பண்டத்தைத் தின்று தீர்க்கும். அப்புறம் வளையமாகச் சுற்றித் தன் முதுகிலிருந்து இரண்டு மூன்று ஈ கொசுக்களைப் பிடிக்கும். பின்னர் ஏதோ முக்கியமான அலுவல் நினைவுக்கு வந்து விட்டது போல் மெதுவான குரலில் குரைத்துக் கொண்டு சாலையை நோக்கி ஓடி விடும்.

அந்தத் தெருவில் உள்ளவர்கள் யாருக்குமே டப்பூவிடம் எந்தவிதமான கோப தாபமும் கிடையாது. ஏன் இவ்வளவு நாட்களும் இந்திரா கூட அதனிடம் கோபம் கொண்டதே இல்லை. ஆனால் நேற்றுத்தான் வாய்க்கால் பாலத்தின் மீது நின்று பேசித் தீர்த்து ஒரு விஷயம் தீர்மானமாயிற்று. அவிநாசனும் தன் சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்து மரங்களினூடே மறைந்து விட்டான். இந்திராவும் பாலத்தின் கைப்பிடியைப் பற்றியவாறு கீழே வாய்க்காலில் ஓடும் அசுத்த நீரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது உடல் இரத்தத்தில் அசுர வேகத்தில் அடித்துக் கொண்டிருந்த புயல் ஒருவாறு தணிந்தது.



அப்புறம்தான் அவளுக்குத் திடுதிப்பென்று டப்பூவின் ஞாபகம் வந்தது.

தவறு நேர்ந்து விட்டது. பயங்கரப் பிசகு நேர்ந்து விட்டது. டப்பூவைப் பற்றிச் சொல்லி அவிநாசனை எச்சரிக்க அவள் மறந்தே போய் விட்டாள்!

அவிநாசன் அவள் வீட்டுக்கு வரத் தொடங்கிப் பத்தே நாட்கள்தான் ஆகியிருந்தன. அதுவும் மத்தியான வேளைகளில் தான் வருவான்; மாலை மயங்கிய பின் அவன் வந்ததே கிடையாது. அதனால் டப்பூவைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரிய நியாயம் இல்லை. ஆனால் இரவு ஒரு மணிக்குப் பின் அவன் அந்தத் தெருவுக்குள் அடி எடுத்து வைத்தால், அப்பொழுது என்ன நடக்கும் என்று கற்பனை செய்யத் தேவையில்லை. இந்திராவுக்குத் தெரியும்; அதுவும் நன்றாகத் தெரியும். இப்பொழுதுதான் மூன்று மாதங்களுக்கு முன் மாதுர்—அவர்களின் மாப்பிள்ளை—இரவு பதினொன்றரை மணி வண்டியில் மாமனார் வீட்டுக்கு வந்தான். வந்தவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேப்ப மரத்தின் மேல் ஏறும்படியாகி விட்டது.

இந்திராவின் உள்ளத்தைக் கிளுகிளுக்க வைத்துக் கொண்டிருந்த ஆசை அனைத்தும் குலை கலங்க வைக்கும் பயமாக உருமாறியது. இரவு ஒரு மணிக்குப் பின் தெருவுக்குப் புதியவனை அவிநாசனைப் பார்த்து விட்டால் டப்பூ ஒரு பிரளயத்தையே உருவாக்கிவிடும். இதை நினைத்துப் பார்த்ததும் சூடேறியிருந்த இந்திராவின் இரத்தம் ஒரேயடியாகக் குளிர்ந்து விட்டது; குளிர்ந்து தண்ணீரும் ஆகிவிட்டது. தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவிநாசன் தலையைக் கால்கள் தொட ஓட வேண்டியிருக்கும். அந்தக் களேபரத்தில் அவன் திருடனென்று பிடிபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வீட்டுக்கு வந்த இந்திரா மேஜைக்கு எதிரே உட்கார்ந்திருந்தாள். படிப்பதற்காக அல்ல; தனது கடைசிக் கடிதத்தை அப்பொழுதே எழுதி வைத்து விடுவதற்காகத்தான். எழுதும் கடிதத்தை எல்லோரையும் தேற்றுவது போல் எழுத வேண்டும். அப்பாவுக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். அம்மாவுக்கோ பேரிடியாகத் தோன்றும். கொஞ்ச நாட்களுக்கு அதிர்ச்சி தாளாமல் அவள் படுத்த படுக்கையாகி விட்டாலும் விடலாம். இதை நினைத்துப் பார்த்தபொழுது இந்திராவுக்கே வருத்தமாக இருந்தது. ஒரு கணத்துக்கு 'வேண்டாம், இந்த மாதிரி இருளில் குதிப்பதில் பயனில்லை' என்று கூடத் தோன்றியது. பள்ளியில் படிப்பது, படித்துப் பரீட்சை எழுதுவது, பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு கல்லூரியில் சேருவது, அக்காளைப் போலத் தானும் பேராசிரியையாகி விடுவது, அவிநாசனை என்றென்றைக்கும் மறந்து விடுவது — இப்படியெல்லாம் கூட அவள் எண்ணம் ஓடியது.

என்ன, அவிநாசனை மறந்து விடுவதா? நடக்காத காரியம். அப்படி மறந்து வாழ்வதைக் காட்டிலும் அவள் தற்கொலை செய்து கொண்டு விடலாமே! அவிநாசனைப் பிரிந்து, மறந்து உயிர் வாழ அவளால் ஒரு நாள் கூட முடியாது. இது நிச்சயம்.

சிவப்பு நிறம், மெலிந்த முகம், எடுப்பான கூரிய மூக்கு. கண்களிலும் முகத்திலும்தான் எத்தனை களை! அழகோடு அறிவும் அல்லவா

சொட்டியது. அந்த இளைஞன் தன் அதிர்ஷ்டத்தைத் தேடி அலைந்த வண்ணம் பிறநாரைச் சேர்ந்த இந்தச் சிறு நகரத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறான். முதல் அறிமுகத்திலேயே அப்பா அவன்பால் ஈர்க்கப்பட்டார்.

"இப்பொழுதே சட்டென்று உனக்காக நான் என்ன செய்ய முடியும்? இரண்டு மூன்று நாட்கள் பொறு; பார்ப்போம். தற்போதைக்கு ஒரு காரியம் செய். என் பெண்ணுக்கு வேண்டுமானாலும் பாடம் சொல்லிக் கொடு. நான் மாதம் முப்பது ரூபாய் தருகிறேன். ஓரளவுக்கு உனக்கு அது உதவியாயிருக்கும்" என்றார் அவன் அப்பா.

அவிநாசன் உடனே அவரை வணங்கி எழுந்தான். நன்றி தழுதழுக்கும் குரலில், "தங்களது இந்த உதவிக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிச் சொற்களால் நன்றி தெரிவிப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?" என்றான்.

ஆம், அவிநாசன் நம்பிக்கைத் துரோகம் எதுவும் செய்யவில்லை என்பது உறுதி. ஆனால் மூன்றும் நாளே படிப்புச் சொல்லித் தருவதை மறந்து பருகும் விழிகளால் இந்திராவையே பார்த்துக் கொண்டிருக்கத் தலைப்பட்டு விட்டான். நான்காம் நாள் கரத்தையே பற்றினான். ஐந்தாம் நாள் இந்திராவினால் தன் கையை விடுவித்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால் சித்தியின் கண்கள் மானிடக் கண்கள் மட்டுமா? தொலை நோக்கியும் கழுகுப் பார்வையும் கலந்த கண்கள் அல்லவா? ஏழாம் நாள் வீட்டில் கசமுசப்பு ஏற்பட்டது. ஒன்பதாம் நாள் தந்தையின் செவிகள் வரை செய்தி எட்டியது. பத்தாம் நாள் அவர் அவிநாசனைத் தமது அறைக்கு அழைத்தார்.

புயலின் அறிகுறியைக் கண்ட இந்திரா இரண்டாவது மாடிக்கு ஓடிவிட்டாள். பிறர் கண்களில் படாமல் மறைந்து கொண்டாள். ஆனால் 'பார் லைப்ரரி'க்குத் தலைவரான இந்திராவின் தந்தை தமது பெருமைக்குக் குறை ஏற்படும் வகையில் நடந்துகொள்ளவில்லை. முழு மாதச் சம்பளத்தையும் கொடுத்து, "இனி நீ வரத் தேவையில்லை. நானே என் பெண்ணுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டார்.

மொட்டை மாடியிலிருந்து இந்திரா எட்டிப் பார்த்தாள். தலை குனிந்த வண்ணம் அவிநாசன் வாய் திறவாமல் புறப்பட்டான். தெரு முனை திரும்பிக் கண் பார்வையிலிருந்து மறைந்தும் விட்டான். தொலைவில் செல்லச் செல்ல அவன் எத்தனை குட்டையாகவும் சிறுவனாகவும் மாறிவிட்டான்!

அவிநாசன் இந்திராவின் வீட்டிலிருந்து வெளியேறினானே யொழிய அவள் மனத்திலிருந்து வெளியேறவில்லை. மனத்தில் அவன் நாளுக்கு நாள் உரிமை கொண்டாடத் தொடங்கி விட்டான். மாலையில் படிப்பதற்கென்று புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் இந்திராவின் கண்களில் அவிநாசன் தோன்றுவான். இந்த உலகத்தில் அவிநாசனுக்கென்றே தான் படைக்கப் பட்டிருப்பதாக எண்ணினாள் இந்திரா. அவிநாசனை அடையாவிட்டால், அவளுக்குத் தான் பெற்ற பிறவி பயனற்றதாகிவிடுமெனத் தோன்றியது.

அதற்குப் பின் எத்தனையோ நாடக அத்தியாயங்கள்! இருட்டடித்தனமாக மறைந்து காணும் சந்திப்புகள்! பள்ளித் தோழி ஒருத்தியின் மூலம் கடிதப் போக்குவரத்துக்கள்!

டியூஷன் நின்ற பிறகு அவிநாசன் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை, சிறிய பெரிய காரியங்கள் பல செய்தான். சில நாட்களுக்கு முன்தான் அவன் இந்திராவுக்கு ஒரு செய்தி அனுப்பினான், கான்பூரில் அவனுக்கு நல்லதொரு வேலை கிடைத்திருப்பதாக. எனவே, பாலத்தில் அன்று நடுப் பகலில் கொளுத்தும் வெய்யிலில் இருவரும் சந்தித்தார்கள். வெய்யிலும் சுள்ளென்று உறைத்து அவர்கள் பேச்சுக்குச் சூடேற்றிக் கொண்டிருந்தது. இருவரும் ஒரு ரகசிய முடிவுக்கு வந்தார்கள். "இரவு சரியாக ஒரு மணிக்கு வருகிறேன். ஒன்றே முக்காலுக்கு ரயில் இங்கிருந்து புறப்படுகிறது. நீ தயாராக இரு!" என்றான் அவிநாசன்.


மனத்துக்குள் இந்திரா முதலிலேயே முடிவு கட்டிவிட்டாள். அவன் இதைக் கூறியதுதான் தாமதம்; சட்டென்று தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தாள். பிறகு மெதுவாகக் கதிரவன் அஸ்தமிக்கலானான். பாலத்தின் கீழ் ஓடிய நீர் இன்னும் அழுக்காகிக் கறுப்பேறிக் காட்சி தந்தது. மரங்களுக்குப் பின்னால் அவிநாசனின் சைக்கிள் மறைந்து விட்டது. தன் இரத்தத்தில் புயலின் பரபரப்பை உணர்ந்த இந்திராவுக்கு டப்பூவின் நினைவு வந்து விட்டது.

அந்தத் தெருவின் காவலாளி டப்பூ. அதுவும் உறக்கம் என்பதையே அறியாத காவலாளி. இரவு ஒன்பது மணிக்குப் பின் ஓர் அந்நியன் கூட அந்தத் தெருவில் அடியெடுத்து வைக்க முடியாது.

இந்திரா எத்தனையோ முறை தன் கையால் டப்பூவுக்கு ரொட்டித் துண்டம் தந்திருக்கிறாள். அதன் உடல் மட்டும் அவ்வளவு அழுக்காக இராமல் சுத்தமாயிருந்தால் அதன் முதுகை அடிக்கடி தடவிக் கொடுக்கவும் அவளுக்குத் தடை இருந்திருக்க முடியாது. இன்றையத் தடுமாற்ற நிலையில் அவளுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது: கொஞ்சம் விஷம் கிடைத்துவிட்டால், அதை ரொட்டியில் கலந்து...

ஆனால் அவளுக்கு விஷம் எங்கே கிடைக்கும்? யார் கொடுப்பார்கள்? அலைந்து திரிந்து வாங்கத்தான் அவளுக்குப் பொழுது எங்கே இருந்தது? இன்னும் ஒருசில மணி நேரம் தானே பாக்கி? பற்களால் தன் உதடுகளைக் கடித்த வண்ணம் இந்திரா பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

எத்தனையோ நாய்கள் இங்கும் அங்கும் சாகின்றனவே! இந்த டப்பூ என்ன, சாகா வரம் பெற்றுக் கொண்டு வந்துவிட்டதா? ஆண்டுதோறும் நகர சபைச் சிப்பந்திகள் நாதியற்ற நாய்களைக் கொன்று குவிக்கிறார்களே, இந்த டப்பூவை மட்டும் ஏன் விட்டு விடுகிறார்கள்?



தூரத்திலிருந்து காணில்
அழகு...



அருகே நெருங்கினாலோ
கொஞ்சும் எழில்


ஆம், **லாக்டோ-காலமைன்** உபயோகித்தால்

இனி எழிலுடன் விளங்குங்கள் — லாக்டோ-காலமைன் ஒரு சிறந்த அழகுசாதனம் சருமக்கோளாறுகளை மிருதுவாயும், மென்மையாகவும் நீக்குகிறது.

இனி என்றுமே எழிலுடன் மிளிருங்கள்—லாக்டோ-காலமைனில் சருமத்திற்கு நலன் தரும் காலமைன், விட்ச்ஹேஸல் இரண்டும் உள்ளன...சருமத்தைத் தூய்மையுடன் ஒளிவிடச் செய்கிறது.

லாக்டோ-காலமைன் மூலம் எழிலுடன் ஒளி வீசுங்கள்.

கட்டைப்பெட்டியுடன், திருட்டுச் செய்யமுடியாத சீசாவில் தற்போது கிடைக்கிறது.



சருமக் கோளாறுகளைக்
களையும் ஓரே
அழகு சாதனப்
பொருள்

லாக்டோ காலமைன் ரகங்களில் இப்பொழுது கிரீம், டால்க் இரண்டும் கிடைக்கின்றன.

Benson/I-CIL-9-TAM



இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பளிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்ட்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர். 10031, பம்பாய்.



COUPON K-6

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....

ஆனால் இன்று...இனி வேறு வழியில்லை. அவிநாசன் வருவான். பெரு மழை பெய்தாலும், புயல் அடித்தாலும் கூட அவன் வரத் தவற மாட்டான். டைப்பூ அந்த நேரத்துக்கு வேறு எங்காவது போயிருந்து விட்டால் நல்லது. ஆனால் அதை எப்படி நம்ப முடியும்? கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வோர் இரவும் டைப்பூ வெகு ஜாக்கிரதையாக, கண்ணும் கருத்துமாகக் காவல் புரிந்து வருகிறது என்னும் செய்திதான் அவளுக்குக் கிட்டியிருக்கிறது. அதுகம்பீரமாகக் காதுசெவிடுபடக் குரைப்பதையும் அவள் பல முறை கேட்டிருக்கிறாள். புயல், மழையென்ன, மகா பிரளயம் வந்தாலே கூட அதைக் காவலிலிருந்து யாராலும் அகற்ற முடியாது.

வேறு வழி தோன்றாமல் மனக் கொந்தளிப்புடன் இந்திரா மேஜை மீதிருந்த விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். தவறு நிகழ்ந்து விட்டது.—பயங்கரத் தவறு. வேறு ஏதாவது ஏற்பாடோ, உபாயமோ செய்திருக்க வேண்டும். அவிநாசனிடம் சொல்லி எச்சரித்திருந்தால், இனி அதற்கு வழி இல்லை...

பிறகு மெள்ள மெள்ள நடக்கக் கூடாத ஒரு நம்பிக்கை அவள் மனத்தில் தலையெடுத்தது. சொல்ல முடியாது. எதுவுமே சொல்ல முடியாது. ஒரு நாள் இரவு டைப்பூ கூடத் தவறு இழைக்கலாமே! இந்திராவின் நிலைக்கு இரங்கி ஆண்டவன் கருணை பாலிக்கலாமே! சாலையில் போகும் ஏதாவது மோட்டாருக்கடியில் சிக்கி டைப்பூ சாகலாம் அல்லவா? சொல்ல முடியாது, எதுவுமே சொல்ல முடியாது.

காகிதப் 'பேடை' எடுத்து இந்திரா எழுத ஆரம்பித்தாள். "அம்மா! என்னை மன்னித்துவிடு. அவிநாசனின் பொருளாதார நிலை அவ்வளவு சரியாக இல்லை. நம் அந்தஸ்துக்கு ஏற்றபடியும் இல்லை. இதனால் நீங்கள் எல்லோரும் நான் அவரைச் சந்தித்துப் பேசுவதையே விரும்பவில்லை. ஆனால் அம்மா..."

ஏறக் குறைய ஒன்றரை மணி நேரத்துக்கு ஏழெட்டுக் காகிதங்களைக் கிழித்தெறிந்து இந்திரா கடிதம் எழுதி முடித்தாள். எழுதும் பொழுது எத்தனையோ முறை பேனா தடைப்பட்டது. 'வேண்டாம் இந்தக் கடிதம்' என்று எண்ணினாள் பல முறை. அநேக முறை கண்ணீர் வேறு [குமுறிக் கொண்டு வந்து அவள் பார்வையை மறைத்தது. எப்படியோ இந்திரா கடைசியில் ஒரு வழியாகக் கடிதத்தை எழுதி முடித்தாள். எழுதாமல் வேறு வழி? தோன்றவில்லையே எதுவுமே அவளுக்கு?

பக்கத்து அறையில் டாண் டாண் என்று கடிகாரம் மணி அடிக்கவே, இந்திராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இப்பொழுதுதானே மணி ஒன்பது! இன்னும் நான்கு மணி நேரம் பாக்கி யிருக்கிறதே!

மறுநாள் காலை, தேநீர் அருந்த இந்திரா மேஜைக்கெதிரே வந்து அமர்ந்த பொழுது, எல்லோரும் அவளையே உன்னிப்பாகப் பார்த்தார்கள்.

அம்மா பதற்றத்தோடு, "உன் கண்கள் இப்படிச் சிவந்து கிடக்கின்றனவே, இந்து? இரவு தூங்கினையா இல்லையா? உடம்பு - கிடம்பு சரியில்லையா, என்ன?" என்று கேட்டாள்.

"ஆமாம்!" என்று சொல்லிய வண்ணம் இந்திரா ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"நேற்று இரவு என்ன புழுக்கம்! என்ன புழுக்கம்! அது தாங்காமல் ஜுரம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!" என்றார் தந்தை.

இந்திரா ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவளுக்கு வெறுப்பு வெறுப்பாக வந்தது. அந்த வெறுப்புத் தீயில் அவள் உடம்பே பற்றி எரிவது போலத் தோன்றியது! ஜுரம்! நேற்று இரவு அவள் வேதனையில் புழுங்கி மாய்ந்தாளே, அதற்கெதிரே ஜுரம் என்ன பெரிய விஷயம்? தனது அறையில் கயிற்றைத் தொங்க விட்டு அவள் தூக்குக் கூடப் போட்டுக் கொள்ள முடியவில்லை. மொட்டை மாடி ஏறிக் கீழே குதிக்க நினைத்தாள். ஆனால் துணிவு உண்டாகவில்லை. இரவு முழுவதும் கவலைத் தீயில்தான் கனன்று போகலானாள். டைப்பூவின் குரைப்புச் சத்தம் கேட்டபொழுதெல்லாம்- அவள் இதயத்தில் யாரோ கத்தியைப் பாய்ச்சியது போலிருந்தது.

அவள் பயந்தது சரியாகத்தான் போயிற்று.

இரவு ஒரு மணிக்கு டைப்பூ குரைத்த குரைப்பு இருக்கிறதே, அது காதைப் பிளந்தது. அது உரக்கக் குரைத்ததற்கும், உருமியதற்கும் பொருள் தெளிவு. தெருவில்



கழுதை எழுதிய கடிதம்!

கார்சன் பிரபு ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது யாராவது கேள்வி கேட்க விரும்பினால் அதை ஒரு காகிதத்தில் எழுதி அனுப்பலாம் என்று கூறினார். உடனே அவரது மேஜைக்கு ஒரு காகிதம் வந்தது. அதில் "அற்பக் கழுதை" என்ற வார்த்தை மட்டும் எழுதியிருந்தது. கார்சன் பிரபு அமைதியாக அவ்வார்த்தையைப் படித்துக் காட்டி விட்டு, "யாரோ ஒரு கனவான் தாம் கேட்க விரும்பிய கேள்வியை எழுத மறந்து விட்டு, தம்முடைய கையெழுத்தை மட்டும் போட்டு அனுப்பியிருக்கிறார்!" என்றார்.

தகவல்: ப. ஜெயராஜா

டைப்பூ ஓடும் சத்தம் கூட நன்றாகக் கேட்டதே! யாரையோ அது துரத்தியது என்பதிலும் ஐயமில்லை. அப்புறம் தெரு மூலையில் நின்று கொண்டு அது ஏறக் குறைய அரை மணி நேரம் அல்லவா குரைத்துத் தீர்த்தது!

படுக்கையில் இந்திரா கல் சிலையெனப் படுத்திருந்தாள். நடக்க வேண்டியது நடந்தே தீர்ந்தது. ஒன்று அடித்தது. இரண்டு அடித்தது; மூன்றும் அடித்தது. ஜன்னலுக்கு எதிர்த்தாற் போலிருந்த மரத்தின் அடியிலிருந்து யாருடைய சீழ்க்கை ஒலியும் கேட்கவில்லை. டைப்பூ அப்படி விரட்டி விரட்டி அடித்திருக்கிறது அவிநாசனை. அப்புறம் அவிநாசன் போனவன் போனவன்தான்.

''இப்பொழுது ஜுரம் இல்லையே!'' என்று அம்மா கேட்டாள்.

மனமின்றி இந்திரா தலையசைத்து வைத்தாள். குளிர்ந்து சுவையற்றுப் போய்விட்ட தேநீரை ஒரு வாய் பருகினாள். விழியோரத்தில் மீண்டும் கண்ணீர் கூடியது. ஒரு நெருப்புப் பந்து மூளையில் சுழல்வதைப் போன்ற உணர்வு அவளைத் தகித்தது.

அதே நேரத்தில் அவள் சித்தப்பா வந்தார். பொழுது நன்றாகப் புலர்வதற்கு முன்பாகவே பற்களில் பற்குச்சியை இடுக்கிக் கொண்டு உலாவப் போனவர் அவர். அறையில் நுழைந்ததும் நுழையாததுமாக உரத்த குரலில் கேட்டார்: ''அண்ணா! அந்தப் பயல் அவிநாசனைப் பற்றிக் கேள்விப்பட்டாயா?''

இந்திராவின் இதயத்தில் குண்டு பாய்ந்தது போலிருந்தது. இரத்த ஓட்டமே நின்று விட்டது போன்ற உணர்வு. காகிதத்தைப் போல் முகம் வெளிறி விட்டது.

''அவன் பலே மோசடிக்காரன். ஏதேதோ கிடைக்காத பொருள்களெல்லாம் சப்ளை செய்வதாகக் கூறி அவன் இங்குள்ள வியாபாரிகளிடம் எண்ணாயிரம் ரூபாய்க்கு மேல் முன் பணம் வாங்கி யிருக்கிறான். அந்தப் பணத்தை யெல்லாம் சுருட்டிக் கொண்டு நேற்று இரவுக்கிரவே இங்கிருந்து ஆள் கம்பி நீட்டிவிட்டான்! சுத்தக் காலிப் பயல்! அயோக்கியக் கழுதை!'' —சித்தப்பா வைது தீர்த்தார்.

இந்திராவின் உடல் முழுவதும் ஒரு தடவை குலுக்கிவிட்டது. நடுங்கும் விரல்களால் அவள் மேஜையின் ஒரு முனையைப் பற்றிக் கொண்டாள். இப்பொழுது எல்லோருமே அவளைத்தான் பார்க்கிறார்களோ!

சித்தப்பா உற்சாகமாக உரத்த குரலில் தொடர்ந்தார்: ''இன்னுமொரு சமாசாரம் தெரியுமா? பக்காக் காலிப் பயல் அவன். இங்கே வருவதற்கு முன்னால் பரேலியில் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டானாம். கல்யாணம் ஆன மறு நாளே மனைவியின் நகை நட்டு, அவள் வீட்டிலிருந்த பணம் காசு எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடி வந்துவிட்டானாம். அவர்கள் போலீஸில் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். இன்று காலையில்தான் போலீஸ் அவனை 'டிரேஸ்' செய்து பிடிக்கத் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் அவிநாசன் என்ற பெயரில் ஒளிந்து கொண்டிருந்த அந்தர் சந்த்...''

உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த விம்மல் ஒலி பட்டென்று வெடித்து எழுந்தது. அதைக் கேட்டு எல்லோரும் துணுக்குற்றார்கள். இந்திரா நாற்காலியிலிருந்து கீழே விழுந்து கிடந்தாள். அடுத்த கணமே அவளுடைய நினைவும் தப்பி விட்டது.

எட்டு நாட்களுக்குப்பின் ஜுரம் இறங்கியது. ஜுரம் குறைந்த நான்கு நாட்களுக்குப் பின் இந்திரா பள்ளிக்குப் போகத் தொடங்கினாள். கோடை காலமாகையால் காலையில் மட்டும்தான் பள்ளிக்கூடம். ஜுரத்திலிருந்து மட்டும் இந்திரா விடுதலை பெறவில்லை. பேரழிவின் கைப்பிடியிலிருந்தும் ஆண்டவன் அருளினால் அவள் காப்பாற்றப் பட்டாள்.

அவிநாசன் அவளை எங்கே அழைத்துப் போவானோ, என்ன செய்வானோ, எந்த நரகத்தில் தள்ளுவானோ, என்ன பயங்கர நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழ்ந்திருக்குமோ, யார் கண்டது? அதிர்ஷ்ட வசமாகத் தப்பி விட்டாள் அவள்! டைப்பூதான் அவளைக் காப்பாற்றியது அந்த இக்கட்டிலிருந்து.

நேற்று இரவு கூட இந்திரா டைப்பூ குரைக்கும் குரலைக் கேட்டாள். எந்த நாளும் தூங்காத, எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கும் காவலாளி அது! அவிநாசனைப் போன்ற எவனையுமே அது தெருவில் நுழைய விடாது. இந்திராவை மட்டும் என்ன? இன்னும் எத்தனையோ பேர்களை அது காப்பாற்றி யிருக்கிறது. எத்தனை பேர்களைக் காப்பாற்றுமோ?

ஒரு நாள் டைப்பூவுக்கு விஷம் வைத்து விட்டால் என்ன என்று இந்திராவுக்குத் தோன்றியது உண்டு. ஆனால் இன்று அவள் அதற்காக ஒரு பெரிய டபுள் ரொட்டியே வாங்கினாள். தெரு மூலையிலேயே அதைக் கண்டுவிடலாம். இரவு விழித்த களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக அது உடலைச் சுருட்டி மடக்கிப் புழுதியில் படுத்திருக்கும்.

சோர்ந்த நடையோடு இந்திரா முன்னேறினாள் ரொட்டிப் பொட்டலத்துடன்.

தெருத் திருப்பத்திலேயே டைப்பூவைக் கண்டாள். ஆனால் இரண்டு நிமிஷங்களுக்கு முன்தான் சக்கிலியின் தடி அதன் மண்டையைப் பிளந்திருந்தது. இரத்தத்தில் மிதந்த அதன் உடல் கடைசி முறையாகத் துடி துடித்துக் கொண்டிருந்தது. மூன்று நான்கு அடி தொலைவில் நின்று கொண்டிருந்த சக்கிலிக்குத் தனக்குக் கிடைத்த வெற்றியில் ஒரு மகிழ்ச்சி; ஆத்ம திருப்தி. இந்த உணர்வு அவன் விழிகளிலேயே ஒளி விட்டது. தன் தடியில் ஒட்டிய இரத்தக் கறையைக் கண்டு அவன் களித்தான். தெருவில் சுற்றும் நாய்களை, வளர்ப்புதாரர் இன்றி வாரிசற்றுத் திரியும் நாய்களைக் கொன்றுபோட நகரசபை அவனுக்கு உத்தரவு வழங்கி யிருந்தது. ஒரு நாயைக் கொன்றால் அவனுக்குப் பன்னிரண்டு அணா கிடைக்கும். அதாவது வள்ளிசாக எழுபத்தைந்து காசு கிடைக்கும்.

சில கணங்கள் இந்திரா சிலையென, மலையெனப் பேச்சு மூச்சின்றி நின்றாள். அப்புறம் அவள் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

அப்பொழுது பிடித்துக் கொள்ள அருகில் மேஜையோ வேறு பொருளோ அவளுக்குக் கிடைக்கவில்லை! தமிழாக்கம்: **ரா.வீ.**

நவீன வாழ்க்கைக்கு ஏற்றது நேஸ்கா:.பே





நேஸ்கா:.பே மட்டும்தான் அலாதி சுவையின்பத்தை அளிக்கவல்லது



தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய ப்ளான்டேஷன் பீபெரி காபிக் கொட்டையைப் பதமாக வறுத்து அதன் இயல்பான மணம் கெடாமல் தயாரிக்கப் பட்டதுதான் நெஸ்கா:.பே—உடனே கரையக்கூடிய நூற்றுக்கு நூறு அசல் காபி! ஒரே சமயத்தில் தனித் தனியாக ‘ஸ்ட்ராங்’காகவோ ‘லைட்’டாகவோ காபியைத் தயாரிக்க முடிவதால் நெஸ்கா:.பே மிகவும் சிக்கனமானதுங்கூட!

3 விநாடிகளில் தயார்! கோப்பையில் ஒரு முழு ஸ்பூன் நெஸ்கா:.பேயை போட்டு வெந்நீரை ஊற்றி ருசிக்கேற்றபடி சர்க்கரையும் பாலும் சேர்க்கவேண்டியதுதான். காபி தயார்!

NESCAFÉ*

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

IS: 2791


நேஸ்கா:.பே—தனிச்சிறப்புள்ள தரமான காபி

* நெஸ்கா:.பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

JWT-NCB-31

உங்கள் கேசம் உதிருகிறதா?

இம் மாதிரி அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்:



★ கேசம் குறைதல்

★ மெழுக்கெச்ற, துவண்ட ரோமம்



இளமையில் வழுக்கை
இங் ஙிலை ஏற்படுவதைப் பெரும்பாலும்
தடுத்திருக்க முடியும்.

கேசம் குறைதல், ரோம உதிர்வு ஆகியவை உங்களைப் பாதித்தால் இன்றே ப்யூர் சில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்கள் ரோமத்திற்கு ஆக்கம் தரும் பதினெட்டு அமினோ-அமிலங்கள் யாவும் அடர்வான நிலையிலே செறிந்துள்ளது ப்யூர் சில்விக்ரின். உச்சந் தலையிலே அழுத்தித் தேய்த்தால் ப்யூர் சில்விக்ரின் மயிர்க்கால்களை ஊடுருவி, கீடித்த நலனைக் கேசத்திற்கு மீட்டுக் கொடுக்கத் தேவைப்படும் இயற்கையான ஊட்டத்தை வழங்குகிறது.

ஆல் அபௌட் ஹேர் (ALL ABOUT HAIR) என்ற, படங்கள் கொண்ட இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினீர்களானால் இவ் விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1, சில்விக்ரின் அட்வைசரி சர்விஸ், தபால் பை 727, பம்பாய் 1.

Silvikrin

சில்விக்ரின் —கேச ஆரோக்கியத்திற்கான வழி



ப்யூர் சில்விக்ரின்

கேசக் கோளாறுகளின் சிகிச்சைக்கான தேராத் தீவிர குணம் செறிந்த தயாரிப்பு. ஒரு மாத சிகிச்சைக்குப் போதுமானது.

சில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்

நாள் முழுதும் உங்கள் கேசத்தைப் பாங்காகப் படியவைத்திருக்கும். கேசக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கப் போதுமான ப்யூர் சில்விக்ரின் அடங்கியது



மா/பி/உ/66

இன்று மாலை பிள்ளை வீட்டார் வந்து சென்றதிலிருந்து வீடே களையிழந்து கிடக்கிறது. மணி பத்தாகியும் இன்னும் யாரும் சாப்பிடவில்லை. எவ்வளவு எடுத்துச்சொல்லியும் நான் சம்மதிக்கவில்லை என்று என் பெற்றோர்களுக்கு என் மீது வருத்தம். அவர்கள் வருத்தப்படுவதில் நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஒரு சாதாரண ஆசிரியர் வீட்டுக்கு ஓர் ஐ. ஏ. எஸ். பட்டதாரி மாப்பிள்ளையாக வருவது சாதாரணமானது அல்லதான். அந்த வாய்ப்பு எங்கள் வீடு தேடி வந்தும் என் பிடிவாதத்தால் பாழாக இருக்கிறது என்றால் அது அவர்களுக்கு மன வேதனையை அளிக்கத்தான் செய்யும். அது எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனால் அந்தஸ்துக்காக ஒருவரை மனமில்லாமல் திருமணம் செய்து கொண்டு காலமெல்லாம் போலி அன்பைச் செலுத்தி வாழ என்னால் முடியாது. திருமணத்துக்கு அந்தஸ்தும் செல்வாக்கும் முக்கியமானவைதான். ஆனால் எல்லாவற்றையும்விட முக்கியமானது மனமல்லவா ? அது இல்லையென்றால் மற்றவை இருந்து என்ன பயன்?

நான் வேறு ஒருவரை மனப்பூர்வமாக என் கணவராக ஏற்றுக் கொண்டு விட்டேன். மங்கல நாண் என் கழுத்தில் ஏறவில்லை என்றாலும் நான் அவருக்கு மனைவிதான். ஆசை என்ற பந்தல் அமைத்துச் சிந்தை என்ற மேடையில் அமர்ந்து நாங்கள் தம்பதிகளாகி விட்டோம்.

எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட காதல் தெய்வீகமானது. நாங்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த காதலின் சக்தியைச் சாதாரண மனித மனத்தால் புரிந்து கொள்ள இயலாது. அதனால்தான் அவர் இறந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்ட பின்பும் என் மனத்தில் வேறு ஒருவருக்கு இடம் கொடுக்க இயலவில்லை.

என் மன நிலையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் என் பெற்றோருக்கோ என்னைப் பெண் கேட்க வந்தவர்களுக்கோ இருந்திருக்குமானால் இந்த மனத்தாங்கலுக்கு இடமே இல்லை. நான் வேண்டாம் என்று மறுத்தும் அவர்கள் மறுமுறை வந்து சென்று விட்டார்கள். நான் ஏழை வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் நல்ல அழகியாக இருக்கின்றேனாம். அழகு மட்டும் போதுமா ? மனமும் வேண்டுமல்லவா ? அது அவர்களுக்குப் புரிகிறதா ?

''சுந்தரி ! சுகுமார் உயிருடன் இருப்பான் என்ற எண்ணம் உன் உள்ளத்தின் ஏதாவது ஒரு மூலையிலிருந்தாலும் நீ அதை விட்டுவிடலாம். ஏனென்றால் விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தை நேரில் நானே சென்று பார்த்து வந்தேன். அந்த விபத்தில் ஒருவர்கூடப் பிழைக்கவில்லையென்பது மட்டுமல்ல, ஒரு சவத்தைக்கூட முழுமையாகப் பார்க்க முடியவில்லை. அங்கு கிடந்தவை வெறும் மாமிசப் பிண்டங்களும் எலும்புத் துண்டுகளும்தான்.''



அப்பப்பா! இந்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கேட்டு எனது செவிகள் புளித்து விட்டன. நான் என்ன அவர் உயிருடன் இருக்கிறார் என்று வாதாடிக் கொண்டிருக்கிறேன்? ஆனாலும் அவர் விபத்தில் உயிர் பிழைத்து உலகின் எந்த மூலையிலாவது வாழ்ந்திருக்க மாட்டாரா என்று மனம் ஆசைப்படுவது என்னவோ உண்மைதான். ஆனால் தெளிந்த அறிவுடன் நான் சிந்தித்துப் பார்க்கிற போது அவர் இறந்து மண்ணோடு மண்ணாகி விட்டார் என்பதை நான் திடமாக நம்புகிறேன்.

ஆனாலும் அவருடைய உருவம் எனது உள்ளத்தில் அன்று வரைந்த ஓவியம் போல் பசுமையாக நிறைந்திருக்கிறது. அவர் என்னுடன், அவருடன் நான் இணைபிரியாது வாழ்ந்திருப்பதாகவே உணர்கிறேன். அது 'பிரமை' தான். ஆனால் நனவில் வேறு எந்தப் பெண்ணும் பெற முடியாத அளவு இன்பத்தை நான் அந்தப் பிரமையிலேயே பெறுகிறேன். நான் கன்னியென்று மற்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நான் அவர் மனைவியாகப் பல ஆண்டு வாழ்ந்து அதிலும் அன்புப் பிணைப்பு, பாசமாக முதிர்ந்த நிலையில் மனைவியாகவே வாழ்கின்றேன். என் இந்த மன நிலையைப் புரிந்து கொள்ள ஆற்றல் இல்லாததால்தான், என்னை வேறு ஒருவருக்கு மணம் முடிக்க நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் மேல் குற்றம் இல்லை. காதலின் மகத்தான சக்தியை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவுதான்.

கடிகாரம் பதினொரு முறை அடித்தது. அம்மா என் அறைக்குள் நுழைந்து என் தோள் மீது கைவைத்து மெல்ல அசைக்கிறாள். ''சுந்தரி, சாப்பிட வாம்மா!''

நான் திரும்பிப் பார்க்கிறேன். அவள் கண்களில் கண்ணீர் மடைதிறந்த வெள்ளம் போல் ஓடிக் கொண்டிருக்கிறது. அவள் எப்போதுமே அப்படித்தான். என் மீது எவ்வளவு கோபம் இருந்தாலும் அவள் உள்ளத்தில் உறைந்திருக்கும் தாய்ப் பாசம் என்றுமே மறைவதில்லை.

அவள் கோரிக்கைக்கு நான பதில் கொடுக்கவில்லை. அவள் நீண்ட நேரம் அங்கேயே நின்றிருந்து விட்டுப் பின் சென்று விடுகிறாள். நான் எழுந்து விளக்கை அணைத்துவிட்டுக் கட்டிலில் மறுபடியும் சாய்கிறேன். பழைய நினைவுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்கின்றன.

எங்களுடைய காதல் திடீரென்று முளைத்தது அல்ல. நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்த போதே எங்களிடம் ஏற்பட்ட பழக்கம் பரிவாகி, நட்பாகி, அன்பாகி, பின் காதலாக மலர்ந்து இனி எவரும் பிரிக்க இயலாதவாறு ஒருயிராய் நாங்கள் பிணைந்திருக்கிறோம். காலம் எங்கள் காதலை அவ்வளவு வலிமையாக வளர்த்து விட்டது. காலம் மட்டுமென்ன? எங்கள் பெற்றோர்களும் எங்கள் காதலை எரு இட்டு வளர்த்தவர்கள்தான். என் பெற்றோருக்கும் அவர் பெற்றோருக்கும் ஏற்பட்டிருந்த நட்பு சாதாரணமானது அல்ல. எங்கள் இரு அப்பாக்களும் ஒரே பள்ளியில் பயின்று ஒரே பள்ளியில் பணியாற்றியவர்கள். ஒரே ஊரில், ஒரே வீதியில், ஒரே வரிசையில் பல ஆண்டுகள் அடுத்தடுத்துக் குடியிருந்தவர்கள்.

வளர்ந்து வந்த நட்பின் காரணமாகவோ, நட்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவோ எங்கள் பெற்றோர்கள் எங்கள் இருவரையும் தம்பதிகளாக்கக் கனவு கண்டார்கள். அவர் தாயார் என்னை மருமகளே என்றுதான் அழைப்பார். நான் அவரை அத்தை என்றுதான் அழைப்பேன். அவருக்கோ எங்கள் வீட்டில் எப்போதும் மாப்பிள்ளை உபசாரம் தான். பெரியவர்கள் எங்களைத் தம்பதிகளாக இணைத்துப் பேசுகிறபோதெல்லாம் நான் நாணத்தால் குறுகிப் போவேன். ஆனாலும் என் உள்ளத்தில் ஆசை மரத்தின் வேர்கள், ஆழப் பாய்ந்து கொண்டுதான் வந்தன. இன்று அது உள்ளத்திலிருந்து அகற்ற முடியாத அளவு மிகப் பிரம்மாண்டமான மரமாக வளர்ந்து விட்டது. இன்று அதை வெட்டிச் சாய்த்துவிடச் சொல்கிறார்கள். அந்தக் கொடுமையை எங்கு சொல்வது? அவர் இறந்துவிட்ட பின்பும், மேல் படிப்புக்காக மேல்நாடு சென்ற அவர் வழியில் விபத்தில் சிக்கி உருக்குலைந்து மண்ணோடு மண்ணாகி விட்டார் என்பதை அறிந்து கொண்ட பின்பும் என் காதல் அழியவில்லையென்றால், என் காதல் எவ்வளவு சக்தி வாய்ந்தது? எவ்வளவு ஆழமானது? அதை மற்றவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை.

வெளியே காற்று ஊளையிட்டுக் கொண்டிருக்கிறது. சாளரத்தின் அடிக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு எதிரில் நீண்டு நிசப்தமாகக் கிடக்கின்ற சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர் உயிருடன் இருந்தபோது தெருக்கோடியில் அவர் உருவம் தென்படுவதை எதிர்நோக்கிக் கண்கள் பூக்கப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறேன். கடந்த நினைவுகள் எனக்குத் துன்பத்தை அளிக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவர் நினைவுகளில் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது ஓரளவுக்கு ஆறுதலையும் அளிக்கிறது.

அந்த நீண்ட வீதி மக்கள் நடமாட்டமே அற்றுக் கிடக்கிறது. தூரத்தில் அந்த வீதியின் தொடக்கத்தில் மட்டும் யாரோ ஒருவர் நடந்து வந்து கொண்டிருக்கிறார். அது எனக்கு அவர் வருவது போலவே தோன்றுகிறது. நடக்கின்ற விதம், தோற்றம் உருவம்கூட அவருடையது போலவே...சே! எப்போது, யார் அந்த வீதியில் வந்தாலும் அது அவர் போலவே என் கண்களுக்குப் படுகிறது. நாள்தோறும் இதே மயக்கம். வீண் பிரமை.

இத்தனை நாட்கள் வெறும் மாயையாக மறைந்து விட்டது போலன்றி அந்த உருவம் உண்மையாகவே 'அவராக' இருந்து.....

ஆனால் எல்லாம் வெறும் பிரமை. வீண் மன மயக்கம்.

வீதியின் கோடியில் வந்து கொண்டிருந்த 'அவர்' இப்போது எங்கள் வீட்டு அருகில் வந்து விடுகிறார். நான் கண்களைக் கூர்மை

யாக்கிக் கொண்டு பார்க்கிறேன். அவர் தான்! அவரேதான்!... சந்தேகமேயில்லை! அதே சுருண்ட கேசம். அவர் முகத்தின் சாயல்கூடத் தெரிகின்றதே!.... நிச்சயமாக அவர்தான். இறந்து விட்டவர், மடிந்து மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டவர் பேயுருவில் என்னைத் தீண்ட வருகிறாரா? அச்சத்தால் என் உடல் வெளிர்த்து வியர்த்து விடுகிறது. படுக்கையில் சாய்ந்து போர்வையை இழுத்து முகம் வரையில் போர்த்திக் கொள்கிறேன்.

அது பேயாகவே இருந்தால்தான் என்ன? பேயானாலும் அது அவர்தானே? அவர் என் மீது பேயாக வந்து என்னை ஆட்டி வைக்க வேண்டும் என்ற ஆசை எழுகிறது. எவ்வளவு விபரீத எண்ணம்! எனக்கு ஏதோ சித்தப் பிரமைதான் பிடித்து விட்டது போலும். இல்லையில்லை.... அவர் மீது நான் கொண்டிருந்த அளவற்ற அன்பு என்னை அப்படியெல்லாம் எண்ணச் சொல்கிறது.

இப்போது அவர் நடந்து வருகிற காலடி ஓசை எனக்குக் கேட்கிறது. வர வர மிகத் தெளிவாகக் கேட்கிறது. அது அவருடைய காலடி ஓசைதான். அவர் என்னை அழைத்துச் செல்லத்தான் வருகிறார். நான் அவருடன் போகத் தயார். அவர் என்னைக் கொன்றுவிட்டுத் தம்மோடு இழுத்துச் சென்றாலும் சரி!.... பேயுருவிலாவது நாங்கள் இருவரும் ஒன்றுபட்டு வாழ்வோமே! இப்போது அதே காலடி ஓசைகள் மிக மிகத் தெளிவாக அதிக ஒலியோடு கேட்கின்றன. வீட்டின் வாயிலில் நுழைவது போல், படிக்கட்டில் ஏறுவது போல், நடையைக் கடந்து கதவை நோக்கி வருவது போல ஓசைகள் கேட்கின்றன. இன்பம் கலந்த அச்சம் என் உடலைப் பற்றிக் கொள்கிறது. நான் சட்டென்று எழுந்து விளக்கைப் போடுகின்றேன். இப்போது அந்த ஒலி முழுமையாக நின்று விடுகிறது. ஆனாலும் கதவருகில் கதவைத் தட்டுவதா வேண்டாமா என்ற தயக்கத்தோடு நிற்பது போன்ற உணர்வு. இரண்டு நிமிடம் அதே நிலை. ஒரே நிசப்தம். பின் கதவில் இலேசான இரண்டு தட்டுதல்கள். அதைத் தொடர்ந்து 'சுந்தரி' என்ற அவர் குரல். சந்தேகமேயில்லை.

அச்சத்தாலோ, மகிழ்ச்சியாலோ நான் என்னை மறந்து 'அம்மா' என்று கத்திவிடுகிறேன். நான் மிக உரக்கத்தான் ஓசை எழுப்பியிருக்க வேண்டும். அதனால்தான் என் தாய் தந்தையர் இருவரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து விடுகின்றனர். ''என்ன சுந்தரி? என்ன நடந்தது?'' என்ற அவர்களுடைய ஆவலான படபடப்பான கேள்விகளுக்குக்கூடப் பதில் கூறாமல், முற்றத்தில் மின் விளக்கைக்கூடப் போடாமல் நான் ஓடிப் போய்த் தெருக் கதவைத் திறக்கிறேன்.

வாயிலில் நிற்பது அவர்தான். ''உயிருடன் இருக்கிறீர்களா, சுகுமார்?'' என்று அவர் மார்பில் நான் அடைக்கலம் புகுந்து கொள்கிறேன். அவர் உடலைத் தடவிப் பார்க்கிறேன். அது எலும்பும் தோலும் சேர்ந்த மனித உடல்தான், பேயல்ல. அவர் கண்களிலிருந்து வடிகிற கண்ணீர் என் கழுத்தை நனைக்கிறது. என் கண்ணீரால் அவர் மார்பை நனைக்கின்றேன்.



அரிசிப் பற்றாக்குறை இதே அளவுக்கு நீடிக்குமானால் இம்மாதிரி பழமொழிகள் தோன்றுது என்பது என்ன நிச்சயம்?

- பணம் பையிலே, அரிசி கையிலே.
- அரிசி கிடைக்கிறதென்று சொல்கிறவன் சொன்னால் கேட்கிறவனுக்குப் புத்தி எங்கே போயிற்றாம்?
- அரிசியை நம்பிக் கோதுமையையும் கைவிட்டானாம்!
- 'அரிசி' என்று கேட்டதும் அழுகின்ற குழந்தையும் 'ஆ' வென்று வாயைத் திறக்குமாம்!
- கல்லில்லாத அரிசியும், கலப்படமில்லாத நெய்யும் கண்டவருண்டோ?
- பலநாள் பதுக்கி வைத்த அரிசி ஒருநாள் மார்க்கட்டுக்கு வரும்.
- அரிசியைக் கண்டால் பணத்தைக் காணோம்; பணத்தைக் கண்டால் அரிசியைக் காணோம்!
- நாட்டின் அழகு அரிசியில் தெரியும்.
- அரிசி இல்லை என்கிறபோது சப்பாத்தியாய் இருந்தால் என்ன? பூரியாய் இருந்தால் என்ன?
- ஊரிலுள்ள ரேஷன் கடைகளையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து 'அரிசியா? ஓ, கிடைக்கிறதே!' என்றானாம்.

- எறும்பு

என் உள்ளம் இன்ப வெள்ளத்தில் மூழ்கு கிறது. அவர் நினைவிலே, கற்பனையிலே, அவருடன் உறவாடும் எண்ணங்களிலே எல்லையற்ற இன்பத்தை அநுபவித்து வந்த நான் இன்று பிரத்தியட்சமாக அவர் பிடியில் அடங்கிக் கிடப்பதென்றால்.... இன்பமிகுதி யில் என் கண்களிலிருந்து நீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. ''சுந்தரி!'' என்று என்னை அன்பாக அழைத்து என்முகவாய்க் கட்டையை நிமிர்த்துகிறார். அவர் கரங்கள் என் கண்ணீரைத் துடைக்கின்றன. அவர் முகத்தை நிமிர்ந்து நோக்குகிறேன். இருளில் அவர் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

மின்விளக்குத் திடீரென்று எரிகிறது. வந் திருப்பது யார் என அறிந்து கொள்ள அப்பாதான் போட்டிருப்பார். அந்தப் பிரகாசமான மின் ஒளியில் அவர் முகம்!... ஐயோ! என அலறி விடுகிறேன். என்னைப் பேய் அறைந்து விட்டது போல ஒரு பயங்கர உணர்ச்சி! அப்பப்பா என்ன பயங்கரம்! என்ன பயங்கரம்!

காதில் பேச்சு ஒலிகள் இலேசாக விழு கின்றன. காற்று முகத்தில் விட்டு விட்டு வீசுகிறது. கண்ணை மெல்லத் திறக்கிறேன். அம்மாவின் மடியில்தான் நான் தலை வைத் திருக்கிறேன். என் அருகில் அப்பா அமர்ந்து எனக்கு விசிறிக் கொண்டிருக்கிறார். நான் மயக்கம் அடைந்துதான் கீழே விழுந்து விட்டேன் போலிருக்கிறது. எதிரில் நாற்காலி யில் அவர் உட்கார்ந்திருக்கிறார். அதே முகம் தான். அவருடையதுதான். நான் பயந்து அலறவில்லை. அமைதியாக உற்று நோக்கு கிறேன். மன்மதக் களை வழிந்து கொண் டிருந்த அவர் முகம் இன்று மிக விகாரமாகப் பார்க்கச் சகிக்காத அவலட்சணமாகக் காட்சியளிக்கிறது.

நான் முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக் கொள்கிறேன். அப்பா என்னவெல்லாமோ கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் தாம் உயிர் தப்பிய விந்தையைச் சொல்லிக் கொண் டிருக்கிறார். அவரது சொற்கள் என் செவியில் வேண்டாவெறுப்போடுதான் நுழைகின்றன.

எழுந்து நின்று 'சென்று வருகிறேன்' என்று தந்தையிடம் விடை கேட்கிறார். அப்பா இருந்து விட்டுப் போகச் சொல்கிறார். ரயிலில் டிக்கெட் பதிவு செய்து விட்டதாக வும், நேரமில்லை எனவும் கூறுகிறார். எனக்கு அது செயற்கையான காரணம்தான் என்று நன்றாகப் புரிகிறது. கடைசியாக என் னிடமும் அவர் விடை கேட்கிறார். ''இருந்து விட்டுப் போங்கள், சுகுமார்!'' என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் வார்த் தைகள் வெளிவராததால் நான் சிலையாக நிற்கிறேன்.

அவர் கடைசியாகத் தம்முடைய ஒரே கண்ணால் ஒரு விநாடி என்னைப் பார்த்து விட்டுச் செல்கிறார். அது சோகம் நிறைந்த பார்வையா? அல்லது, ''இவ்வளவுதானா உன் காதல்?'' என்ற இளக்காரமான பார்வையா? என்றால் இனம் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவர் வீட்டு வாசற்படியை விட்டு இறங்கி அந்த நீண்டு அகன்ற வீதியில் நேரே செல்கிறார். ஒருமுறைகூட அவர் எங்கள் வீட்டைத் திரும்பிப் பார்க்கவில்லை. அந்த நீண்ட வீதியின் முடிவில் அவர் உருவம் மிக மிகச் சிறிதாகிக் கடைசியில் என் கண்களி லிருந்து மறைகிற வரை நான் வாயிலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீட் டுக்குள் நுழைகிறேன். என் மனத்தில் எந்த வித சலனமும் இல்லை.

பல ஆண்டுகளை நான் அவர் நினைவி லேயே கழித்திருந்தும் இன்று ஏன் என் மனம் அவரிடம் மனம்விட்டுப் பேச முன்வர வில்லை? எனக்கே அது வியப்பாக இருந்தது. நான் இன்றும் அவரைக் காதலிக்கிறேனா? அந்த ஆபாசமான பயங்கரமான உருவம் என் கண்களில் இன்னும் நிற்கிறது. அவர் விமான விபத்தில் மாண்டு போயிருந்தால் அல்லது என் கண்களில் மறுமுறை தோன்றி யிராமல் இருந்தால் நான் என்றென்றும் அவரை என் தெய்வமாகவே கொண்டு தொழு திருப்பேன். சில நிமிடங்களுக்கு முன்புவரை என் இதயத்தில் இன்பமாக நிறைந்திருந்த அவர் நினைவு இப்போது ஏன் எனக்கு அருவருப்பை அளிக்கிறது? அப்போது நான் அவர் மீது கொண்டிருந்த காதல் பொய் தானா? இல்லை, இல்லை! தெய்வீகமானது தான். இல்லையென்றால், இத்தனை ஆண்டுகள் அவருக்காகவே காத்திருந்திருப்பேனா? அப் போது மனித எலும்பின் மீது பூசியிருக்கும் தசையின் மீதும், அதன் வண்ணத்தின் மீதும் மனம் கொண்டுள்ள இச்சைதான் காதலா? இல்லை இல்லை. இல்லையென்றால் நான் அவர் இறந்து விட்டார் என்று மனப்பூர்வமாக நம்பியும் அவர் நினைவையே என் இன்பமாகக் கொண்டு வாழ்ந்திருப்பேனா? பின், காதல் என்றால்.........?



பூகம்பத்தை அனுப்பு.....!

ஓர் ஊரில் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டது. ஒரு சிறுவனின் பெற்றோர் அவன் சிரமப்படு வானே என்று எண்ணி அவனை வெளியூரில் உள்ள ஓர் உறவினரின் வீட்டுக்கு அனுப்பி யிருந்தார்கள். சில நாட்களுக்கெல்லாம் உற வினரிடமிருந்து ஒரு தந்தி வந்தது:

''பையனைத் திருப்பி அனுப்பியுள்ளேன்; பூகம்பத்தை இங்கே அனுப்பிவிடுங்கள்!''

தகவல்: சி. முத்துக்குமரன்

ஆதாரம்: அட்லாண்டா கான்ஸ்டிட்யூஷன்


புதுமையின் பொலிவுக்கு ஹமாம்
HAMĀM
the family soap
அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்
நாள்தோறும் ஹமாம் உபயோகியுங்கள். உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் கொடுக்கிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.
டாடா தயாரிப்பு

CMTH-3 tm

வட்ட மேஜை

இருக்க வேண்டிய விளம்பரங்கள்
படிப்பினை பெறுமா?
விகாரமான பதுமைகள்
வித்தியாசம் தெரியாதா!

சென்ற 25–12–66ந் தேதிய கல்கியில் வெளிவந்த 'இல்லாத விளம்பரங்கள்' அனைத்தும் இருக்க வேண்டிய விளம்பரங்களே! ரயிலில் மட்டுமல்ல, ஸ்டேஷனிலும், பஸ் ஸ்டாண்டிலும், பாதையிலும் அசுத்தமும் சுயநலமும் பெருகி வரும் இந்நாளில் நகைச் சுவையுடன் கல்கி, மக்கள் தங்கள் கடமையை உணரச் செய்வது சிறந்த சேவை.

கூனவேலம்பட்டிபுதூர்
26 – 12 – 66 நல்வழி மன்றத்தார்

ராஜாஜி ஒரு கல்கி இதழில், ''அரசன் வியாபாரியானால் மக்கள் பிச்சையெடுக்க வேண்டியதுதான்'' என்று ஒரு குஜராத்திப் பழமொழியை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருந்தார். நினைத்த தொழில்களில் எல்லாம் அரசாங்கம் புகும்போது உண்டாகும் தேசிய நஷ்டம் கணக்கில் அடங்காது.

நான் அரசாங்கத்தாரால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டதும் ரஷ்ய உதவியுடன் தொடங்கியதுமான சர்ஜிகல் பேக்டரியில் தொழிலாற்றுகிறேன். இங்கே டாக்டர்களுக்கு வேண்டிய கத்திரிக்கோல், கத்திகள், பல் பிடுங்கிகள் போன்ற உபகரணங்கள் செய்யப் படுகின்றன. கணக்கும், சிக்கனமுமில்லாமல் ஐந்தரைக் கோடி ரூபாய் இதில் முடக்கப் பட்டுள்ளது. மேற்கூறிய உபகரணங்கள் செய்யப்பட்டு ஒரு கத்திரிக்கோல் நாற்பது ரூபாய் முதல் ஐம்பது ரூபாய் வரையில் விற்கப்படுகிறது. ஆனால் அதே கத்திரிக்கோல் சிறு தொழில் அதிபர்களால் செய்யப்பட்டு ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய் வரையில் விற்கப்படுகின்றது. இதன் காரணமாய் விற்பனையுமில்லாமல் உற்பத்தியான பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன. தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்துக்கும் பேங்கில் பணமில்லாமல் இந்த 'யூனிட்' இப்போது தவிக்கின்றது. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் பேக்டரியில் செய்யப் படும் டெலிபிரிண்டர்கள் மார்க்கெட்டில் 10,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் அதே இயந்திரத்தை வெளிநாட்டிலிருந்து வரவழைத்தால் சுங்கவரியுடன் ரூ. 5000 மட்டுமேயாகும்.

மக்கள் சிமிண்டு கிட்டாமல் அல்லலுறும் இந்நாளில், நான் தொழில் புரியும் கம்பெனியில் 23 டன் சிமின்டை ஸ்டாக் செய்து உபயோகிக்காமல் வைத்திருந்து சமீபத்தில் ஏலம் விடுவதாக, ''இந்து''வில் விளம்பரம் போட்டிருந்தார்கள்.

அமெரிக்காவும், ஜப்பானும், ஜெர்மனியும் உலக மார்க்கெட்டை முற்றுகையிடுவதற்குக் காரணமாயிருப்பது தடங்கலில்லாத தனியார் துறையேயாகும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மொத்தமாக ஈடுபடுத்தப்பட்ட தொகை 20,000 கோடி ரூபாய்களாகும். ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் இன்னும் சிறிதும் உயரவில்லை. தனியார் துறையின் கண்காணிப்பும், லாப மனப்பான்மையும் போட்டா போட்டியும் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும். ஆனால் காங்கிரஸ் ஆட்சி 15 ஆண்டுகளில் ஒருவித படிப்பினையும் பெற்றதாகத் தெரியவில்லை.

சென்னை–59
26–12–66 கே. எஸ். ஞானசம்பந்தம்

நம் நாட்டில் தையற்கடைகளில் விளம்பரத்துக்காகத் தலையற்ற பெண்களின் பொம்மைகளை வைத்திருக்கிறார்கள். பெண்களின் உள்சட்டையை அந்தப் பொம்மைக்கு மாட்டி விகாரமாக நிறுத்தி வைத்திருப்பது அருவருப்பை ஊட்டுவதாக இருக்கிறது. இந்தப் பொம்மைகளைக் கண்ட பெண்கள் கடை உள்ளே நுழைவதற்கு வெட்கமடையும் படி இருக்கிறது. ஆபாச சினிமா போஸ்டர்களைவிட மோசமான இந்தப் பொம்மைகளைத் தங்கள் கடை வாசல்களிலிருந்து தையல்காரச் சகோதரர்கள் அகற்றுவார்களா? அவலட்சணமான, அநாகரிகமான முறையில் இந்தப் பொம்மைகளைப் பெரிய கடைகளிலும் வாசலில் பிரகாசமான விளக்குகளுக்கு அடியில் வைக்கிறார்கள். கண்களுடன் உள்ளமும் கூசுகிறது, பெண்களை அவமானப் படுத்தும் இப்பதுமைகளைப் பார்க்கும்போது. பொம்மைகளை வைக்கத்தான் வேண்டுமென்றால் அருவருப்பு ஏற்படாத முறையில் அழகாக முழுமையாக அலங்கரித்து வைக்க வேண்டும்.

சென்னை–5
19–12–66 ஜெயலக்ஷ்மி கிருஷ்ணசாமி

சில நாட்களுக்கு முன், நான் திருவாரூரிலிருந்து குடந்தைக்குக் குடவாசல் வழியாக வந்து கொண்டிருந்தேன். குடவாசலில் தி. க. மகாநாடு நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது அங்கே கட்டப்பட்டிருந்த கொடிகளைக் கண்டு திகைத்தேன். நீண்ட நாளில் தி. க. கொடிகளும் தேசியக் கொடிகளும் மாறி மாறிக் கட்டப்பட்டிருந்தன. காங்கிரஸ் கொடிக்குப் பதிலாகத் தேசியக் கொடிகள் காணப்பட்டன. இராட்டைக்குப் பதிலாகச் சக்கரம் காணப்பட்டது. கொடி வித்தியாசம் தெரியாதவர்கள் ஆதரவுடன் ஆட்சி நடைபெறும் நாடு எப்படி முன்னேற முடியும்?

திருநாகேசுவரம்
5–1–67 எஸ். சேஷாத்திரி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்


பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!



பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.



எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!


உலகமுழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

B/P/1/P/1/65 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

SIMPSON & COMPANY LIMITED (Estd. 1840), MADRAS-2.
ADDISON & COMPANY LIMITED (Estd. 1873), MADRAS-2.
ADDISONS PAINTS & CHEMICALS LIMITED, MADRAS-11.
AMCO BATTERIES LIMITED, BANGALORE-26.
BIMETAL BEARINGS LIMITED, MADRAS-11.
GEORGE OAKES LIMITED, MADRAS-2
GEORGE OAKES LIMITED, (BOMBAY OPERATIONS) BOMBAY-2.
INDIA PISTONS LIMITED, MADRAS-11.
INDIAPISTONS-REPCO LIMITED, MADRAS-11.
REICHHOLD CHEMICALS INDIA LIMITED, MADRAS-51.
SHARDLOW INDIA LIMITED, SEMBIAM, MADRAS-11.
SRI RAMA VILAS SERVICE LIMITED, MADRAS-2.
SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.
STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.
STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.
TRACTORS AND FARM EQUIPMENT LIMITED, MADRAS-34.
L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED, MADRAS-2
THE WHEEL & RIM CO OF INDIA LIMITED, MADRAS-11.



The **Amalgamations** Group is the largest Light Engineering Group in South India.

The Corporate strength of **Amalgamations** is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,
Builds coaches and bodies,
Fabricates mechanical light engineering specialities,
Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,
Operates transport and passenger services,
Produces tea and coffee,
Publishes an evening newspaper,

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.

Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

Non-Engineering Group

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.

ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL' MADRAS-2.

HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.

SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED, MADRAS-2.

SPEED-A-WAY PRIVATE LIMITED, MADRAS-2.

T. STANES & COMPANY LIMITED, COIMBATORE.

THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED, COIMBATORE

WALLACE CARTWRIGHT & CO. LIMITED,
65/66, St. James Street, LONDON S. W. 1.

Total Number of Employees: About 14,000
Bankers: The Central Bank of India Limited, Madras-2.
Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2.

Amalgamations

PRIVATE LIMITED
202, Mount Road, Madras-2.
and subsidiary Companies
(Unit Companies of Simpson Group Industries)

AMALG-32